KALKI 25.2.96
ரூ. 3.00

கல்கி



உலகப் புகழ் மாடலாக ஒரு தமிழ்ப் பெண்!




உங்கள்
அபிமான
அசல்
கோகுல்
சான்டால்.
GOKUL
SANTOL
Micronized Sandalwood
TALC
டி.எஸ்.ஆர். & கம்பெனி, மதராஸ்.
கோகுல் காஸ்மெடிக்ஸ், பாண்டிச்சேரி.

• 'மலரும் மொட்டும்...'





• வசந்தரா

'வாங்க... போங்க...' என்று மற்றவர்களை மரியாதையோடு அழைப்பதுதான் முறை. அதற்காக ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைக் கூடவா இப்படி அழைப்பது?

இப்படி நாம் கேட்டது வசந்தராவிடம். சன் டி.வி.யில் ஒளிபரப்பாகும் 'மலரும் மொட்டும்' நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் குழந்தைகளைத்தான் அவர் இப்படி அழைக்கிறார்.

''குழந்தைகளை நாம் இப்படி அழைக்கும்போதுதான் அவர்களும் மற்றவர்களை மரியாதையாக அழைக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்கிறார்கள். 'நீ... வா... போ...'

உங்கள் குழந்தைகளையும் அழைத்துப் பாருங்களேன்!



800 கோடியில் ஒரு சினிமா!

ஹாலிவுட்டின் இன்றைய சூப்பர் ஸ்டார்களில் ஒருவர் கெவின் காஸ்ட்னர். இவரை வைத்து பிரபல திரைப்பட கம்பெனியான யுனிவர்சல் ஸ்டுடியோ இப்பொழுது ஒரு திரைப்படத்தைத் தயாரித்து வருகிறது. இந்தப் படம்தான் உலகில் இதுவரை தயாரிக்கப்பட்ட படத்திலேயே மிக அதிக செலவு செய்யப்பட்டு எடுக்கப்படும் திரைப்படம். இதன் தயாரிப்புச் செலவு சுமார் 250 மில்லியன் டாலர். சுமார் 800 கோடி ரூபாய்! உலகிலேயே மிகக் குறைந்த செலவில் 1927ம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் ஆங்கிலப்படம் எடுக்கப்பட்டது. அதற்கு ஆன தயாரிப்புச் செலவு வெறும் 300 டாலர்கள்– சுமார் ரூ.9000!

ஆதாரம் : ஸ்கிரீன்

● தீபாவளிக்கு வந்த 95 படங்களில் 'முத்து', 'குருதிப்புனல்', 'மக்கள் ஆட்சி' என மூன்று படங்கள் வெற்றி பெற்றன. இதில் முத்து 94 தியேட்டர்களில் 50 நாட்களும், 25 தியேட்டர்களில் 100 நாட்களும் ஓடியது. குருதிப்புனல் 18 தியேட்டர்களில் 50 நாட்களும், 3 தியேட்டர்களில் 100 நாட்களும் ஓடியது. மக்கள் ஆட்சி 14 தியேட்டர்களில் 50 நாட்கள் ஓடியது. சென்னை நகரத்தில் முத்து 60 நாட்களில் ரூ. 1,16, 32,817 வசூல் ஈட்டியது. குருதிப்புனல் ரூ. 84, 48, 597 வசூல் ஈட்டியது.

- எம். குமார்

நடிகர், நடிகைகள் வரி பாக்கிகளைக் கண்டு மூக்கில் விரல் வைப்பவர்களே அதிகம்.

ஸ்டேட் பேங்க் – 1395.33 கோடி
யுனைடெட் பேங்க் – 135.90 கோடி
பேங்க் ஆப் இந்தியா – 65.05 கோடி

இவை பேங்குகள் கட்ட வேண்டிய வருமான வரி பாக்கிகள்.

இவை போக,
சிட்டி பேங்க் – 165.29 கோடி
பேங்க் நேஷனல் டி பாரிஸ் – 163.25 கோடி
சார்டர்டு பேங்க் – 145.12 கோடி
அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பேங்க் – 103.58 கோடி.

இது. அயல் நாட்டு வங்கிகள் நம் நாட்டிற்குக் கட்டவேண்டிய வரி பாக்கிகள். நம் 'நாடு' எப்படி உருப்படும்?

ஆதாரம் : The Journal of Banking Studies.
தகவல் : வனஜாராணி

என்றால் அவர்களும் திருப்பி நம்மை அப்படித்தான் அழைப்பார்கள். குழந்தைகளுக்கு மொழியை மட்டுமல்ல; மரியாதையையும் கற்றுத் தருவதுதானே நல்லது!" என்று சொல்லும் வசந்தரா, "தென் மாவட்டங்களில் பலர், தங்கள் குழந்தைகளை மரியாதையோடு அழைப்பதை நானே நேரில் பார்த்திருக்கிறேன். அப்படி மரியாதையோடு அழைத்தாலும் 'நீ, வா, போ' என்று அழைப்பதைவிடவும் அதிகமான நெருக்கம் இருப்பதையும் பார்த்திருக்கிறேன்!" என்கிறார்.

'மலரும் மொட்டும்' நிகழ்ச்சியை ஆரம்பத்தில் நடத்திய மாலாதான் இப்படியொரு மரியாதையை ஆரம்பித்து வைத்தார் என்றாலும் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுவது இப்போதுதான்.


'இப்படி அழைப்பது மிகவும் நன்றாக இருக்கிறது!' என்று சில பெற்றோர்கள் பாராட்டினாலும் பலர், 'குழந்தைகளைப் போய் இப்படி அழைத்து அவர்களை அந்நியப்படுத்துகிறீர்களே! என்று கொஞ்சம் கோபத்தோடும் கடிந்து கொள்கிறார்களாம்.

"டி.வி. நிகழ்ச்சியில் இப்படிக் குழந்தைகளை மரியாதையோடு அழைத்து விட்டு, வீட்டில் எப்படி ஒருமையில் அழைக்க முடியும்? அதனால் என் நான்கு வயது மகளையும் மரியாதையாகத்தான் அழைக்கிறேன். இதைப் பார்க்கும் மற்ற குழந்தைகளும் தங்கள் பெற்றோரிடம் ஏன் அவர்கள் மட்டும் இப்படி மரியாதையாக அழைப்பதில்லை என்று கேட்கிறார்கள். அதனால் அவர்களும் தங்கள் குழந்தைகளை மரியாதையோடு அழைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்!" என்கிறார் வசந்தரா.

அழகு நிலையம் நடத்திக் கொண்டிருக்கும் வசந்தரா எப்படி நிகழ்ச்சித் தொகுப்பாளரானார்? "அழகுக் குறிப்புகள் தருவதற்காக எங்கள் அழகு நிலையத்திற்கு வந்திருந்தனர் படப்பிடிப்புக் குழுவினர். அப்போது ஏதோவொரு காரணத்தால் நிகழ்ச்சித் தொகுப்பாளர் வர இயலாமல் போகவே, என்னையே தொகுத்துத்தரச் சொன்னார்கள். பிடித்துப் போகவே தொடர்ந்து அழைப்பு. இருப்பினும் சினிமா நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்துத்தரும் சந்தர்ப்பங்களை நான் மறுத்துவிட்டேன். காரணம் நான் சினிமா பார்ப்பதே அபூர்வம். சினிமா எனக்கு அவ்வளவாகப் பிடிக்காது என்பதுதான்!" என்கிறார் வசந்தரா.

சந்திப்பு : பிரின்ஸ்
வண்ணப்படங்கள் : யோகா

சுஜாதா பக்கம்



அறிமுகமற்றவர்களிடமிருந்து எனக்கு வரும் கடிதங்களில் இரண்டு விஷயங்கள் அடிக்கடி தோன்றுகின்றன. ஒன்று: வெளிச் சக்தி ஏதும் இல்லாமல் எப்போதும் ஓடும் ஓர் இயந்திரத்தைக் கண்டு பிடித்துள்ளேன். இதை வியாபாரப்படுத்த வேறு யாரிடமாவது சொன்னால் ஐடியாவைத் திருடி விடுவார்களோ, பயமாக இருக்கிறது.

மற்றது: "உங்களுக்கு ஜோதிடத்தில் நம்பிக்கை உண்டா?"

சதா இயங்கும் இயந்திர ஐடியாக்கள் இரு வகைப்படுகின்றன. ஒரு டைனமோ செய்து அதில் கிடைக்கும் மின்சாரத்தால் ஒரு மோட்டாரை ஓட்டி, அதன் மூலம் அதே டைனமோவைச் சுழற்றுவது. மற்றொன்று, புவிஈர்ப்பு விசையைப் பயன்படுத்தி, 'எப்போதும் இயக்கத்தை' சாதிப்பது.

இவ்வகை இயந்திரங்கள் இயற்பியலில் தெர்மோ டைனமிக்ஸின் இரண்டாவது விதிப்படி சாத்தியமே இல்லை. இயற்பியல் விதிகளை மீறி இதுவரை பிரபஞ்சத்தில் எந்த இயக்கத்தையும் நாம் பார்க்கவில்லை. காரணம் பிரபஞ்சத்தை கவனித்து அதன் இயக்கத்துக்குப் பொருத்தமாக அமைத்தவை தான் இந்த விதிகள். இவைகளை மீறி ஏதாவது ஒரு இயக்கத்தை கவனித்தால் அதை நிச்சயப் படுத்திக் கொண்டபின், விதிகளைத் திருத்தி அமைத்து விடுவார்கள். இதுவரை தெர்மோடைனமிக்ஸின் விதிகளுக்கு அந்த ஆபத்து வரவில்லை.

ஜோதிடம் அஸ்ட்ராலஜி, அஸ்ட்ரானமி, வான இயலில் இருந்து பிரிந்தபோது காலாவதியாகி விட்டது. இதில் நம்பிக்கை உள்ள பலர், 'உங்கள் விஞ்ஞானத்திற்கு எல்லாம் தெரியும் என்று எப்படிச் சொல்ல முடியும். பிரபஞ்சத்தில் நம் அறிவிற்கு அப்பாற்பட்ட விஷயங்கள் பல உள்ளனவே.' இந்த வகையில் எதிர்வாதம் சொல்கிறார்கள். வாசகர்களிடம் நான் ஜோதிடத்தை நம்பவோ நிராகரிக்கவோ சொல்வதில்லை.

1996 ஆம் ஆண்டுக்கான உங்கள் ராசி பலனை எந்தப் பத்திரிகையிலும் பாருங்கள். எல்லாமே பொதுப்படையாக "6ல் இருந்த ராகு 8க்கு வந்து விட்டதால் பேச்சுத்திறன் வெளிப்படும். கல்வி பிரகாசிக்கும். வருமானம் உயரும். விடுவாங்கலோ, கட்டவோ இடமிருந்தால் முயற்சியில் இறங்கலாம்". இவ்வாறுதான் இருக்குமே தவிர 'செப்டம்பர் மாதம் இரண்டாம் தேதி உனக்கு எட்டாயிரத்து இருநூறு ரூபாய் நாற்பது பைசா கிடைக்கும்' என்று சரி பார்க்கக் கூடியவகையில் யாரும் ஜோசியம் சொல்லாத வரை, அவைகளை பொய் என்று நிரூபிப்பது கடினம். பி.வி.ராமன் அவர்களின் 'அஸ்ட்ரலாஜிக்கல் மாகஸின்' பத்திரிகையில் இந்த ஆண்டுக்கான, குறிப்பான ஜோஷ்யங்கள் பல உள்ளன. நரசிம்மராவ் மீண்டும் பதவிக்கு வரமாட்டார். பி.ஜே.பி. மத்தியில் பதவிக்கு வரும். நாட்டில் குழப்பம் நிலவும். ஆந்திரா தமிழ்நாடு போன்ற பிரதேசங்களில் தலைமை மாற்றம் ஏற்படும்... இவ்வாறு. அதே பத்திரிகையில் மற்றொரு சோதிட அறிஞரின் கட்டுரையின் ஜோஷ்யங்கள் சில இதற்கு ஏறு மாறாக இருந்தாலும், வருஷக் கடைசியில் நீங்கள் அதில் எது பலித்தது என்று ஒப்பிட்டுப் பார்த்தால் பாதி கற்பனையாகவும் பாதி நிஜமாகவும் இருக்கும். ஸ்டாட்டிஸ்டிக்ஸ் விதிகளின் படியும், 'கேயாஸ்' (Chaos) என்று ஒரு புதிய சித்தாந்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன்படியும் சரிப் பட்டு வரும்.

கேயாஸ் தியரி இந்த நூற்றாண்டின் பிற்பகுதியின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு என்கிறார்கள். இதன்படி உலகில் நிகழும் எந்த சம்பவத்தையும் எந்த சம்பவத்துடனும், எந்த விளைவையும் எந்தக் காரணத்துடனும் இணைக்க முடியும். சைனாவில் ஒருவன் தும்மினால் அதனால் பசிபிக் தீவுகளில் புயல் ஏற்பட்டது என்று கூட நிரூபிக்க முடியும். உலகின் அன்றாட அறிவியல் விதிகள் ஓரளவுக்குத் தான் நமக்குப் பயன்படுகின்றன. அசாதாரண சூழ் நிலைகளில் இந்த விதிகள் கைகொடுப்பதில்லை என்று கண்டிருக்கிறார்கள். பலவித சக்திகள் பலவித திசைகளில் இழுக்கும் பெரிய அமைப்புக்களில் அவைகளை அலைக்கழிக்கும் சக்திகளை முழுவதும் அறுதியிடுவதில் உள்ள சிரமத்தால் ஏற்படும் சந்தேக நிலை இது. அன்றாட கணித, பௌதிக விதிகளை மட்டும் வைத்து இந்த சிக்கலான உலகின் எதிர்காலத்தைக் கணிப்பது இயலாது என்பதே கேயாஸ் விதியின் சாரம்.

ஒரு பாலத்தின் கீழ் நதிநீர் மெல்லச் செல்கிறது. நதியில் சுழிப்பு இல்லை. நீர் இன்னும் கொஞ்சம் வேகமாகச் செல்லும் போது பாலத்தடி அல்லது மதகுகளில் சுழல்கள் ஏற்படுகின்றன. இன்னும் வேகமாக தண்ணீர் செல்லும் போது சுழல்களின் எண்ணிக்கை நதிநீரின் ஓட்டத்தில் அதிகரிக்கிறது. இதுவரை சுழல்களின் அமைப்பை பௌதிக கணித விதிகளைக் கொண்டு கணக்கிட முடிகிறது. ஆனால் ஒரு கட்டத்துக்கு மேல் நதி வேகம் அதிகரித்தால் ஏற்படும் சுழற்சியை, கணித விதிகளைக் கொண்டு எதிர்பார்க்க இயலுவதில்லை. அதை விஞ்ஞானிகள் 'கேயாஸ்' என்கிறார்கள். மிகப் பெரிய யத்தனங்கள் எதிலும் இது உள் நுழையும். ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச (பங்குச் சந்தை) பெரிய அமைப்புக்களில் ஒன்று. நரசிம்மராவுக்கு உடல்நலம் சரியில்லையென்றால் ஸ்டாக் மார்க்கெட் விழுவதும் நாளை புயல் நாகப்பட்டினத்தில் கடக்கும் என்று சொன்னால் அது ஒரிசாவிலோ பங்களாதேஷிலோ கரை கடப்பதும் மேகங்கள் பலவித வடிவங்களில் அமைவதும் எறும்புகளிலிருந்து மனிதர்கள் வரை சனப் பெருக்கம் நிகழ்வதும் ஜோசியம் பலிப்பதும் 'கேயாஸ்' விதிகள்படி தான்.

உலகம் அத்தனை எளிமையானதல்ல என்கிறது கேயாஸ்!

(மீண்டும் அடுத்த வாரம்)

பத்மா லக்ஷ்மி வைத்யநாதன் - பக்கத்து போட்டோவில் இருக்கும் பெண்தான்! சென்னையில் பிறந்து, இன்று அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் மிகப் பிரபலமாகியிருக்கும் ஃபாஷன் மாடல். Helmut Newton போன்ற உலகின் மிகச் சிறந்த ஃபாஷன் போட்டோகிராபர்களுக்கு மாடல் செய்பவர். நியூயார்க்கில் ஒன்று மிலானில்(இத்தாலி) ஒன்று என இரண்டு அபார்ட்மெண்ட்கள். ஒரு வாரம் கூட சேர்ந்தாற்போல் எந்த ஊரிலும் தங்கவிடாதபடி துரத்தும் மாடலிங் வாய்ப்புகள். சமீபத்தில் இந்தியாவுக்கு வரவழைத்தது: பம்பாயிலும் சென்னையிலும் நடந்த ஃபாஷன் நிகழ்ச்சிகள். அப்படியே சென்னையில் தாத்தா- பாட்டியுடன் சில தினங்கள் தங்கிச் சீராடிக் கொண்டிருந்தவரைச் சந்தித்தோம்.







கவர் ஸ்டோரி

"ஒரு வகையில் எனது இன்றைய நிலைக்கு என் தாத்தா தான் காரணம். என்னை வளர்த்தவர்; என் சிந்தனையைத் தூண்டியவர், சுதந்தரமாய் முடிவெடுக்கும் துணிவைத் தந்தவர்..." என ஆரம்பித்தார் பத்மா.

"இப்போது அவர்தான் என் best friend. ...நான் எதையும் அவரிடம் மறைப்பதில்லை. நான் செய்வது அனைத்திலுமே அவருக்கு உடன்பாடு என்று சொல்ல மாட்டேன். ஆனாலும்

உலகப்புகழ் மாடலாக ஒரு தமிழ்ப் பெண்!

நாங்கள் சிறந்த நண்பர்கள்...”– தாத்தாவையும் அழைத்து, பக்கத்தில் நிற்கச் செய்து போட்டோவுக்கு pose கொடுத்தார்.

“மாடலிங் தொழிலுக்கு உங்களை ஈர்த்தது எது, பத்மா...?”

“இரண்டு வயதுச் சிறுமியாக இருந்த போதே அலங்காரம் செய்து கொள்வதிலும் அழகாக உடுத்துவதிலும் எனக்கு ஆர்வம் அதிகம். ஏழெட்டு வயதில் அம்மாவுடன் அமெரிக்கா போய் ‘செட்டில்’ ஆகிவிட்டேன். மசாசூஸெட்ஸ் என்ற இடத்தில் நாடகக் கலையில் பட்டப் படிப்பில் சேர்ந்தேன். ஸ்பெயினுக்குப் போயிருந்தபோது யதேச்சையாக சந்தித்த ஒருவர் ‘மாடலிங் செய்கிறாயா?’ என்று என்னைக் கேட்டார். ‘படிப்பு கெட்டுவிடும்’ என்று மறுத்து விட்டேன். நண்பர் ஒருவர் வற்புறுத்தி, மாடலிங் வாய்ப்பு அளிக்க முன் வந்தவரின் ஏஜென்ஸிக்கு அழைத்துப் போக முயன்றார். நாங்கள் ஒரு நாள் மதிய உணவுக்குச் சென்ற ரெஸ்டாரன்டின் எதிரில்தான் அந்த ஏஜென்ஸி அலுவலகம் இருந்தது. ‘போய்த்தான் பார்ப்போமே’ என்று ஒப்புக் கொண்டேன். உடனடியாக வேலை கொடுத்து விட்டார்கள்! படிப்பை முடித்துவிட்டு முழு நேர மாடலாகி விட்டேன்.”

“மிகவும் துணிச்சலான poseகளில் மாடல் செய்கிறீர்கள். இந்தியாவில் உங்களை எப்படி ஏற்கிறார்கள். உங்கள் குடும்பம், அக்கம் பக்கம், நண்பர்களிடையே ஒன்றமுடிகிறதா?”

“பதினைந்து வருடங்களுக்கு முன்னால் நான் மாடலிங்கை மேற்கொண்டிருந்தால் ஒரு வேளை இந்தியாவில் என்னை அந்நியமாகப் பார்த்திருக்கக்கூடும். ஆனால், இப்போது என் வெற்றியில் எல்லோருமே பெருமை கொள்கிறார்கள்.”

“இதை பெருமைக்குரிய பணியாக நீங்கள் நினைக்கிறீர்களா?”

“என் மனத்தில் உறுத்தலே இல்லாமல் இதைச் செய்கிறேன் என்று பொய் சொல்ல நான் தயாராயில்லை. சிகரெட், மது விளம்பரங்களுக்கு போஸ் கொடுக்க நான் ஒப்புக் கொள்வதில்லை. பிளேபாய்க்கு மாடலிங் செய்ய மாட்டேன். சில சமயம் உடம்பை நெளித்து ‘போஸ்’ கொடுக்கும்போது ‘இதெல்லாம் எதற்கு?’ என்று எனக்கே சிரிப்பு வரத்தான் செய்கிறது. திரும்பத் திரும்ப இதே போல் ‘போஸ்’ கொடுப்பது அலுப்பாகக் கூட இருக்கிறது. இந்தப் பணியில் அறிவுக்குச் சவால் கிடையாது. ஆனால் இது ஒரு கேவலமான தொழில் என்று சிலர் சொல்வதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். ஒரு டாக்டர் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வதன்மூலம் தமது தொழிலின் கௌரவத்தைக் குறைக்க முடியும்; ஒரு நடிகை ஒரு கனமான பாத்திரத்தை ஏற்று, சிறப்பாக உயிரூட்டி அந்தத் தொழிலை உயர்த்தலாம்... என்ன செய்கிறோம் என்பதைவிட, அதை எப்படிச் செய்கிறோம் என்பதே முக்கியம்.”

• தாத்தாவுடன்...



“திரும்பத் திரும்ப இதையே செய்வது அலுப்பூட்டுகிறது என்று ஒப்புக் கொள்கிறீர்கள். பின் இதை ஏன் செய்ய வேண்டும்...?”

“Modelling is very addictive. ஏராளமாகப் பணம் சம்பாதிக்க முடிகிறது. என் அம்மா ஒரு சேவை அமைப்பில் நர்ஸாகப் பணியாற்றுகிறார். அவரது ஒரு மாத ஊதியத்தை நான் ஒரே நாளில் சம்பாதிக்கிறேன். நான் படிப்பதற்காக ஏராளமாகக் கடன் வாங்க வேண்டியிருந்தது. அதையெல்லாம் அடைத்து விட்டேன். இப்போது நிறைய சேமிக்க முடிகிறது.

● சமயம் இறைவனை வழிபடுகிறது; மூட நம்பிக்கை அந்த வழிபாட்டை மாசுபடுத்துகிறது. – ஜெனோகா.
தகவல் : எஸ். எஸ். பூங்கதிர்

இந்த இளமை நீடிக்கும்வரை சம்பாதிக்கலாம். பிறகு நான் விரும்பும் வேறு விஷயங்களில் ஈடுபடலாம். என் தாத்தா அறுபது வயதுக்கு மேல் சட்டம் பயின்ற மாதிரி..."

"நாடகத் துறையில் பட்டப் படிப்பு படித்தும் அதில் பணியாற்றும் ஆர்வம் இல்லையா...?"

"அமெரிக்காவில் அத்துறையில் போட்டி எக்கச்சக்கம். ஊதியம் ரொம்பக் குறைவு. ஹோட்டலில் வெயிட்ரஸ் வேலை அல்லது வேறு வேலையைப் பகல் பொழுதில் செய்தபடி வேண்டுமானால் வருகிற நாடக வாய்ப்புகளை ஏற்று நடிக்கலாம். அந்தத் துறையில் வேரூன்றுவது சுலபமில்லை."

"மாடலிங் துறையிலும் போட்டி இருக்குமே?"

"அதிர்ஷ்ட வசமாக போட்டியில் நான் இதுவரை முன்னணியில் இருக்கிறேன். நான் நிலையாக ஒரே ஊரில் தங்காமல் பல இடங்களுக்குப் போய் பணியாற்றுவதும் இதற்கு ஒரு காரணம்."

"உங்கள் இளமையும் உடலழகும் exploit செய்யப் படுவதாக நீங்கள் நினைக்க வில்லையா?"

"நான் விரும்பிச் செய்வதுதானே இந்தத் தொழில்! என்னை யாரும் கட்டாயப் படுத்த வில்லையே! மேலும், என் உடல் எனது சாதனை யல்ல- அது இயற்கை எனக்குக் கொடுத்த வரம். அதிர்ஷ்ட வசத்தில் பெற்றோரின் மரபுக் கூறுகளால் எனக்கு வாய்க்கப் பெற்றது இந்த உடல்வாகு. இதை நான் முழுமையாக உணர்கிறேன். மாடலிங் செய்யும்போது துணிமணிகள், அணிகலன்களைத் தாங்கி நிற்கும் ஒரு 'hanger' தான் என் உடல். இதை exploitation என்று எப்படிச் சொல்லலாம். குழந்தைத் தொழிலாளர்களும் தங்கள் விருப்பத்துக்குச் செயல்பட முடியாமல் கட்டுண்டிருக்கும் பெண்களும்தான் exploit செய்யப் படுகிறார்கள்."

"மாடலிங் தவிர வேறெதற்கு நேரம் இருக்கிறது?"

"நேரம் நிறைய இருக்கிறது. கதைகள், கட்டுரைகள் மேடை நாடகங்கள் எழுதுகிறேன். சமைக்கப் பிடிக்கும். மீனாட்சி அம்மாளின் மூன்று பகுதிகள் கொண்ட 'சமைத்துப் பார்' புத்தகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை வாங்கி என்னுடன் எடுத்துப் போகிறேன். இந்திய கலாசாரம், சரித்திரம் பற்றிய நூல்களும் வாங்கியிருக்கிறேன். பணி இடைவேளைகளில் அரட்டை அடிப்பதற்குப் பதிலாகப் படிக்கப் பிடிக்கும்."

"இந்தியாவில் பணியாற்றுவதற்கும் அயல் நாடுகளில் அதையே செய்வதற்கும் இடையே வித்தியாசம் உணர்கிறீர்களா...?"

"இருக்கிறது- இங்கே பல விஷயங்கள் நம் கட்டுப்பாட்டில் இல்லை. பவர் கட் தொடங்கி எத்தனையோ சிக்கல்களுக்குத் தயாராய் இருக்க வேண்டியுள்ளது. அதனால் அமைப்பாளர்களும் அதிக கெடுபிடி செய்கிறார்கள். இரண்டு நாட்கள் முன்னதாகவே வந்து, இரண்டு மூறை ஒத்திகை பார்க்கச் சொல்கிறார்கள். மேற்கே அப்படியில்லை. 'ஷோ' தொடங்க இரண்டு மணி நேரம் இருக்கும்போது போய்ச் சேர்ந்தால் போதும். முகத்தைத் திருத்த ஒருவர், தலை சீவ ஒருவர் தயாராய் இருப்பார்கள். 'இதுதான் நீங்கள் அணிய வேண்டிய உடை' என்று நீட்டுவார்கள். அதை அணிந்து, அந்த நிமிஷம் ஒலிக்கிற இசைக்கு ஏற்ப நடந்து... ஒத்திகையெல்லாம் கிடையாது!"

"அழகு பராமரிப்புக்கு என்ன செய்வீர்கள்?"

"சராசரி பெண்களைப் போல்தான் நானும். உடல் கட்டோடு இருக்க வேண்டும் என்று சிறப்பு உடற்பயிற்சியெல்லாம் செய்வது கிடையாது. நினைத்த நேரத்தில் பிடித்த உணவை, வஞ்சனையில்லாமல் சாப்பிடுவேன். ஆனால் இனிப்பு பிடிக்காது. உடல் பருக்காமல் இருக்க அது ஒரு காரணமோ என்னவோ! ஊறுகாயைக் கிண்ணத்தில் வைத்துக் கொண்டு நக்கிச் சாப்பிடப் பிடிக்கும்... அப்புறம் முகம்... சில நாள், இரவு தூங்கப் போகும் முன் முகத்தை அலம்பக் கூட அலுப்பாக இருக்கும். அப்படியே தூங்கிவிடுவதும் உண்டு! ஒரு காலத்தில் என் தோற்றம் குறித்து கவலைப் பட்டதுண்டு... ஒரு விபத்தில் சிக்கிக் கொண்டு அறுவைச் சிகிச்சை ஆனதால் கையில் மிகப் பெரிய வடு. அதனால் என் மாடலிங் வாய்ப்புகள் பாதிக்கப்படுமோ என்று பயந்ததற்கு மாறாக, அதுவே மிக அழகாக இருக்கிறது என்று Helmut Newton பாராட்டி தமது படங்களில் பயன்படுத்தினார். அப்புறம் கவலையெல்லாம் போய்விட்டது! அழகு என்பது, பார்ப்பவரின் கோணத்தைப் பொறுத்துத் தானே அமைகிறது...."

சட்டையின் கைப்பகுதியை விலக்கி, பச்சை குத்தியது போன்ற நீண்ட வடுவைக் காண்பித்துச் சிரித்தார் பத்மா லக்ஷ்மி வைத்ய நாதன்.


– சீதா ரவி

அட்டை வண்ணப்படம், படங்கள் : யோகா

ஸ்ரீ திரு.வி.க.நகர் பெனிஃபிட் ஃபண்டு லிமிடெட்

ஸ்தாபிதம் 1989

தலைமை அலுவலகம் : 10, 2வது தெரு, ஆண்டாள் அவின்யு, (திரு.வி.க. நகர் பஸ் நிலையம் அருகில்), சென்னை - 600 082. போன் : 5378690
பாரீஸ் கிளை : 8/2, ஸ்ட்ரிங்கர்ஸ் தெரு, சென்னை - 600 108. போன் : 565760
தி. நகர் கிளை : 20, ரங்கநாதன் தெரு, சென்னை - 600 017. போன் : 4344324



பாதுகாப்பான முறையில் சேமித்து வளருங்கள்

திருமூர்த்தி பாண்டு

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 20,000	5 ஆண்டு	ரூ. 60,000

வசந்தம் பாண்டு

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 7,000	40 மாதம்	ரூ. 14,000

பென்ஷனர் வைப்பு நிதி

முதலீடு	காலம்	வட்டி
ரூ. 10,000	1 ஆண்டு 2 ஆண்டு 3 ஆண்டு	21%

★ பென்ஷனர், ஓய்வு பெற்றோர், முதியோர் (50 வயதிற்கு மேல்), விதவைகள், ஊனமுற்றோர் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.
★ பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்.

பென்ஷனர் மறுமுதலீட்டு திட்டம்

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 5,000	1 ஆண்டு	6,157
	2 ஆண்டு	7,582
	3 ஆண்டு	9,337
	40 மாதம்	10,000

எக்செல் பாண்டு - A திட்டம்

முதலீடு	காலம்	வட்டி
ரூ. 9,000	2 ஆண்டு	21%

பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்

எக்செல் பாண்டு - B திட்டம்

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 9,000	2 ஆண்டு	ரூ. 13,648

வைப்பு நிதி

முதலீடு	காலம்	வட்டி
ரூ. 5,000	1 ஆண்டு	18%
	2 ஆண்டு	19%
	3 ஆண்டு	20%
	4 ஆண்டு	21%

பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்

மறுமுதலீட்டு திட்டம்

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 1,000	12 மாதம்	1,195
	24 மாதம்	1,455
	36 மாதம்	1,810
	42 மாதம்	2,000

★ சேமிப்பு திட்டம் 12% வட்டி நாள் கணக்கில் வட்டி கணக்கிடப்படும்.
★ தங்க நகைகள் பேரில் ஒரு சவரனுக்கு ரூ. 2400 வரை கடன் வழங்கப்படும். மாத வட்டி 2%.
★ சென்னை மாநகர வீடு/ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும். மாத வட்டி 2% on Reducing Balances, R.D. கட்ட தேவையில்லை. கடன் மிக விரைவாக வழங்கப்படும்.
★ பங்குதாரர்களுக்கு மட்டும்
★ ரூ.10 செலுத்தி பங்குதாரர் ஆவீர்.

வேலை நேரம்

தலைமை அலுவலகம் : 9 முதல் 5. ஞாயிறு 9 முதல் 1
கிளைகள் : 10 முதல் 5. ஞாயிறு 10 முதல் 1
உணவு இடைவேளை இல்லை. வார விடுமுறை இல்லை.

அப்ளிகேஷன் வேட்டை!

"ஏங்க, ஒண்ணு சொன்னாக் கோவிச்சுக்கமாட்டீங்களே?" என்றாள் என் மனைவி, காப்பி கொடுத்த கையோடு. இந்த வசனம் எனக்குக் குறைந்த பட்சம் ஐநூறு ரூபாய் செலவு வைக்கும் என்பது என் அனுபவம். வழக்கமாக இது போன்ற நேரங்களில் கொஞ்சம் அலட்டிக் கொள்பவன்தான் நான். இன்றென்னமோ அப்படிச் செய்யாமல், "சரி, சொல்லு", என்றேன்.

"நான் இன்னிக்கு நம்ம அரவிந்தை எல்.கே.ஜியில் சேர்க்க அப்ளிகேஷன் ஃபாரம் வாங்கிட்டு வந்தேன்."

"வெரிகுட்! இதிலே கோவிச்சுக்க என்ன இருக்கு?"

"அதில்லைங்க. கரண்ட் பில், டெலிபோன் பில் கட்ட வைத்திருந்த பணம் அதுக்குச் செலவாகி விட்டது. அதான்..."

"என்ன? எல்.கே.ஜி. அப்ளிகேஷன் ஃபாரம் எழுநூற்றியம்பது ரூபாயா? (கரண்ட் பில் முன்னூற்று ஐம்பது, டெலிபோன் பில் நானூறு) என் பெயரென்ன ஜெயின் டைரியிலா இருக்கு? இவ்வளவு காஸ்ட்லியான ஸ்கூல் நமக்குக் கட்டுப்படியாகாதும்மா...."

"இருங்க, கொஞ்சம் பொறு



மையா கேளுங்க. ஒரு ஃபாரம் எழுநூற்று ஐம்பது ரூபாயல்ல. மொத்தம் பன்னிரெண்டு ஸ்கூலில் ஃபாரம் வாங்கியிருக்கேன்."

"ஏன்? மாசம் ஒரு ஸ்கூலில் படிக்க வைக்கப் போகிறாயா?"

என் கேலியைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்தாள் என் மனைவி....

"நம்ம ஊர்ல மொத்தம் ஐம்பத்து நாலு ஸ்கூல் இருக்கு. அதில் எல்.கே.ஜியில் இருந்து ப்ளஸ் டூ வரைக்கும் இருக்கிறது இருபது ஸ்கூல்லே. அதில் பன்னிரெண்டில் நான் அப்ளிகேஷன் வாங்கியிருக்கேன்."

"ஏன்? மீதி எட்டு ஸ்கூலுக்குப் போவதற்குள் உன் வண்டியில் பெட்ரோல் தீர்ந்து விட்டதா?

(அங்கே, இங்கே போய்வர அவளுக்கு ஒரு 'சன்னி' வாங்கிக் கொடுத்திருக்கிறேன்.)

"வண்டியா? இத்தனை இடத்துக்கு என்னால் வண்டியில் போக முடியுமா? ஆட்டோவில்தான் போனேன்."

"அதான் அவ்வளவு ரூபாய் ஆச்சா?"

"சேச்சே, நான்தான் ஆட்டோவை மொத்தமா, நாள் வாடகைக்குப் பேசிட்டேனே... இல்லாட்டா இன்னும் அதிகம் செலவாயிருக்கும்."

"பெருமை வேறு பட்டுக்கிறாயா? சரி... சரி. மொத்தமாக எவ்வளவு செலவாச்சு? சுருக்கமாகச் சொல்லு!"

"இதுக்குத்தான், முதலிலேயே சொன்னேன். கோவிச்சுக்கக் கூடாதுன்னு."

குரலைக் கொஞ்சம் தாழ்த்திக் கொண்டேன். "சரி, சொல்லு."

"பன்னிரெண்டு ஸ்கூல் அப்ளிகேஷன் ஃபாரம் மொத்தம் நானூற்றுப் பத்து ரூபாய். ஆட்டோவுக்கு முந்நூறு. வழியில் இளநீர், கூல் ட்ரிங்க் சாப்பிட்டது நாற்பது. மொத்தம் எழுநூற்று ஐம்பது ரூபாய். அவ்வளவுதான்."

'உங்களுக்கு நம்ம பையன் படிப்பிலே அக்கறையேயில்லையா?' என்ற இரண்டாம் கட்டத் தாக்குதல் வருவதற்கு முன்பே சொன்னேன் : "எங்கே அந்த அப்ளிகேஷன் பாரமெல்லாம் எடுத்து வா, பார்க்கலாம்."

சம்மன் வருவதற்காகக் காத்திருந்த நெஞ்சுவலி போல, இந்தக் கேள்விக்காகவே காத்திருந்த காகிதக் கற்றை வந்திறங்கியது. கூடவே ஒவ்வொரு ஸ்கூல் பெயரும், அப்ளிகேஷன் ஃபாரம் விலையும் கொண்ட லிஸ்ட் போட்டு வைத்திருந்தாள் என் மனைவி. ஊரிலேயே புகழ் பெற்ற பள்ளியின் ஃபாரம் ரூபாய் எழுபத்து ஐந்து. மற்றவை பல்வேறு விலைகளில் இருந்தன.



"அட இது என்ன? இந்தப் பள்ளிக்கூட அப்ளிகேஷன் ஃபாரம் ரூபாய் பத்து மட்டும் தானா? இங்கியே நம்ம பையனைச் சேர்த்து விடலாம்!"

"என்ன அந்த பத்து ரூபாய் ஃபாரம் பார்த்து ஏமாந்து போனீங்களா? அந்த ஸ்கூலில் ஃபாரம் பத்து ரூபாய்தான். ஆனால் 'கட்டட நிதி' என்று ஒரு உண்டியல் வைத்திருக்காங்க. அதிலே ஐம்பது ரூபாய் போட்ட பிறகுதான், பத்து ரூபாய் வாங்கிட்டு ஃபாரம் கொடுக்கறாங்க."

சி.எஸ்.என். ராஜா



''டைரக்டர் 'ஏன்யா லேட்டு'ன்னு கத்தினவுடனே 'வீட்டுல வசனங்களை மனப்பாடம் செய்துட்டு இருந்தேன் சார்!'னு ஒரு பொய்யைச் சொல்ல வேண்டியது தானே!''

''அது பச்சைப் பொய்'னு உடனே தெரிஞ்சுடுமே!''

''எப்படி?''

''எனக்கு இந்தப் படத்துல ஊமை வேஷம் தானே!''

— பாஸு

"பரவாயில்லை. அங்கியே சேர்க்கலாம். நம்ம பையன் பிற்காலத்தில் பெரிய ஆளாக வருவான்!"

இதற்குள் கோவிலுக்குப் போயிருந்த என் பெற்றோர் வந்தனர். கூடவே முகமெல்லாம் திருநீறாய், ஞானப்பழமாக என் மகன். என்னைப் பார்த்தவுடன் உற்சாகமாக "உம்மாச்சி கோவிலில் கல்கண்டு தந்தாங்க" என்றான். என்னைச் சுற்றிலும் பேப்பராக இருந்ததைப் பார்த்தவுடன் அவன் உற்சாகம் அதிகமானது. "ஹை... பேப்பர், அப்பா போட் செஞ்சு தா" என்றான்.

எழுநூற்று ஐம்பது ரூபாயும் காகிதக் கப்பலாக மாறுவதற்குள் என் மனைவி அவனைத் தூக்கிக் கொண்டு உள்ளே போனாள். இரவு அவன் தூங்கிய பிறகு, எல்லோரும் உட்கார்ந்து விவாதித்து, பன்னிரெண்டில், பத்தைத் தள்ளுபடி செய்தோம். மீதமுள்ள இரண்டு ஸ்கூலில் எதில் முதலில் இடம் கிடைக்கிறதோ, அதில் சேர்ப்பதாக முடிவு செய்தோம்.

"இப்படி நேத்திக்கே பேசி முடிவு செஞ்சிட்டுப் பிறகு போயிருந்தா இரண்டு ஃபாரம் மட்டும் வாங்கியிருந்தால் போதுமே; இப்ப இந்த பத்து அப்ளிகேஷனும் வேஸ்ட்" என்றேன் என் மனைவியிடம்.

"இல்லீங்க, அதையும் யூஸ் பண்ணிடலாம்."

"எப்படி? யாருக்காவது ஒரே பிரசவத்தில் பத்துக் குழந்தை பிறந்திருக்கா? அப்படியே பிறந்திருந்தாலும் அந்தக் குழந்தைகளை மூணு வருடம் கழித்துத் தானே ஸ்கூலில் சேர்ப்பார்கள்!"

"கிண்டல் பண்ணாதீங்க. உங்க நண்பர்கள் இரண்டு பேருக்கு அடுத்த மாதம் கல்யாணம் நடக்கப் போகுதில்லே..."

"ஆமாம். கோபாலுக்கு அடுத்த மாதம் பத்தாம் தேதி; பாஸ்கருக்குப் பதினாறாம் தேதி. அதுக்கென்ன இப்ப?"

"அவங்க இரண்டு பேருக்கும் ஆளுக்கு ஐந்து அப்ளிகேஷன் திருமண அன்பளிப்பாகக் கொடுத்து விடலாம்."

"அப்படியே போய் பெட்ல படுத்துக்க. நான் டாக்டருக்குப் போன் பண்ணிட்டு வர்றேன்" என்று எழுந்தேன்.

"அவசரப்படாதீங்க. எனக்கு மூளையெல்லாம் குழம்பல. நல்லாத்தான் இருக்கேன். முழுசும் கேளுங்க..."

ரஜினி அரசியலுக்கு வருவாரா? அத்வானி நிஜமாகவே பணம் வாங்கியிருப்பாரா? இது போன்ற பெரிய குழப்பங்களெல்லாம் எனக்கு இப்ப ரொம்ப சின்னதாகத் தெரிந்தது.

என் மனைவியோ சிரித்துக் கொண்டே (தேவையா சார்?) கேட்டாள் : "வெயிட் அண்ட் சேவ் திட்டம்" தெரியுமா உங்களுக்கு?"

"ஓ. தெரியுமே. டி.வி., ப்ரிட்ஜ் போன்றவை வாங்கும் போது உடனே டெலிவரி எடுத்தா ஒரு விலை. அதுக்குப் பதிலா கம்பெனிக்கு டிராப்ட் எடுத்து அனுப்பினா, கொஞ்சம் விலை கம்மியாகக் கிடைக்கும். ஆனால் நமக்குப் பொருள் கிடைக்கக் கொஞ்ச நாளாகும்."

"அதேதான்! அது மாதிரி ஸ்கீம் இப்ப நம்ம ஊர்ல எல்லா ஸ்கூலிலும் இருக்கு."

"இன்னும் கொஞ்சம் குழம்பின மாதிரி இருக்கு. பத்து ஃபாரம் வேஸ்ட் என்று சொல்லாமலே இருந்திருக்கலாம்."

தன் விளக்கவுரையைச் சற்றும் நிறுத்தாத என் மனைவி தொடர்ந்தாள்.

"வருடா வருடம் ஸ்கூல் டொனேஷன் தொகை அதிகமாயிட்டே போகுது. ஆனா நீங்க வெயிட் அண்ட் சேவ் ஸ்கீமில் இந்த வருட டொனேஷன் தொகையைக் கட்டி, குழந்தை பெயர் மட்டும் போடாமல், ஒரு புரோவிஷனல் அப்ளிகேஷன் கொடுத்திட்டீங்கன்னா, அது அடுத்த ஐந்து வருடத்துக்குச் செல்லுபடியாகும். ஒரு வேளை நீங்க ஐந்து வருடத்தில் குழந்தையை ஸ்கூலில் சேர்க்காவிட்டால், ஆறாம் வருஷம் பணத்தைத் திரும்ப வாங்கிக்கலாம்."


"ஆஹா... இதுவல்லவோ கல்விச் சேவை! எப்படியோ ஒரு புது மாதிரியான திருமணப் பரிசு கொடுக்கப் போகிறோம். அதைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வது புது மாப்பிள்ளைங்க கையில் இருக்கு" என்றேன்.

என் அருகில் நெருங்கி வந்த என் மனைவி, "ஏங்க, ஒண்ணு சொன்னாக் கோவிச்சுக்க மாட்டீங்களே" என்றாள்.

"அய்யோ, அம்மா, தயவு செஞ்சு இன்னும் ஒரு மாசத்துக்கு நீ எதுவும் சொல்லாதே!" என்றபடியே போர்வைக்குள் போய் ஒளிந்து கொண்டேன், நான்.

கட்டுரைப் போட்டி

சொல்லுங்கள் உங்கள் அனுபவத்தை வெல்லுங்கள் பரிசுப் புதையலை



1 பரிசு
ரூ.25,000 மதிப்புள்ள தங்க நகைகள் (ஒரு நபருக்கு)

2 பரிசு
ரூ.5,000 மதிப்புள்ள தங்க நகைகள் (5 நபர்களுக்கு)

3 பரிசு
ரூ.2,500 மதிப்புள்ள தங்க நகைகள் (10 நபர்களுக்கு)

100 ஆறுதல் பரிசுகள்
4 கிராம் மதிப்புள்ள வெள்ளி நாணயங்கள்

உறவுகள் வலுப்பெற வேண்டும் என்பதில் மிக்க நம்பிக்கை கொண்ட ராம் காஷ்யப் சிட்ஸ், ஆரோக்கியமான மாற்றத்தை ஊக்குவிக்கும் வகையிலே மருமகள் மெச்சும் மாமியார் மற்றும் மாமியார் மெச்சும் மருமகள் இருவரையுமே கௌரவித்து பரிசளிக்க விரும்புகிறது.

வாழ்வின் ஏதோ ஒரு இக்கட்டான/எதிர்பாராத தருணத்தில் உங்களது மாமியார் அல்லது மருமகள் சொன்ன முன்யோசனை கைகொடுத்து உதவியதை நினைவுகூற அரியதொரு வாய்ப்பு இது!

பாக்யசாலியான மருமகளா நீங்கள்?

"என் மாமியாருக்கு இணை அவரே தான்!" என்ற தலைப்பில் மருமகளாகிய நீங்கள் உங்களது அனுபவங்களை எழுதியனுப்புங்கள்.

அதிர்ஷ்டசாலியான மாமியாரா நீங்கள்?

"எனது அருமை மருமகள்!" என்ற தலைப்பில் மாமியாராகிய நீங்கள் உங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

200 வார்த்தைகளுக்கு மிகாமல் படிக்கும் படியான அழகிய கையெழுத்தில் ஒரு வெள்ளைத்தாளில் உங்கள் அனுபவங்களை எழுதி, கவரின் மேல் "என் மாமியாருக்கு இணை அவரேதான்!" அல்லது "எனது அருமை மருமகள்!" என்று குறிப்பிட்டு கீழே கண்டுள்ள எமது பதிவு அலுவலகத்திற்கு 29.2.1996 தேதிக்குள் வந்து சேருமாறு அனுப்புங்கள். உங்களது புகைப்படத்துடன் முழு விலாசத்தையும் எழுதி அனுப்புங்கள்.



வந்து சேர வேண்டிய கடைசி தேதி 29.2.1996

Ram Kaashyap
Chits Private Limited

ஈடில்லா சேமிப்பு; இணையற்ற தேர்வு

பதிவு அலுவலகம்: 53, பிஷப் கார்டன்
(கிரீன்வேஸ் ரோடு அருகில்)
சென்னை 600 028. போன்: 4936931, 4936932.

Insight 1481

8. பூங்கோதைக்கு அபாயம்!

மனித மனமே விசித்திரமானது. அதிலும் பெண்களின் மனம் அதி விசித்திரமானது. அதற்கு பெற்றவர்களின் நினைவும், பிறந்த இடத்தின் நினைவும் வந்து விட்டால் மற்றவர்கள் எத்தனை தூரம் பரிவும் அன்பும் காட்டினாலும் அது இரண்டாம் பட்சமாகி விடுகிறது. அந்த நினைவில் பெண்களின் மனத்தில் தோன்றும் அர்த்தமற்ற கோபதாபங்களும், எடுத்தெறிந்து பேசும் பேச்சுக்களும் விளைவிக்கும் அனர்த்தங்கள் பலப்பல.

அத்தகைய அர்த்தமற்ற கோபத்தின் வசப்பட்டிருந்தாள் கொங்கு நாட்டின் இளவரசி பூங்கோதை. சோழ வம்சத்தில் பிறந்து, கொங்கு



மன்னனை மணந்து, தன்னை ஈன்றதும் மறைந்துவிட்ட தாயின் நினைவும், போசளரிடமிருந்து தன்னைப் பாதுகாக்க சூளாமணி விஹாரத்திற்கு அனுப்பிவிட்டு, அன்னியரிடம் அடிமையாகிக் கிடக்கும் தந்தையின் நினைவும், பிறந்த மண் மாற்றாரிடம் அகப்பட்டுச் சீரழிந்து கிடந்த நிலையும் அவளை வாட்டத் தொடங்கியிருந்தன. அந்த சமயத்தில் யாரோ ஒரு கருத்த மனிதனை, தந்தையிடமிருந்து ஓலை கொண்டு வந்த மெய்க் காவலன் சூரியகாங்கேயன் என்று கிருஷ்ணமல்லர்



இந்திர கனிச

விஷ்வக்சேனன்

கூறியதும் அவள் கோபம் உச்சத்தை எட்டியது. அவன் சூரிய காங்கேயனோ அல்லது வேறு மனிதனோ, தந்தை உதவி கோரி அனுப்பிய ஓலையைக் கொண்டு வந்தவன், ஓலை கிடைத்ததும் பாண்டியர், தந்தையின் உதவிக்குச் செல்லவில்லை என்ற உண்மை அவளது சினத்தீயில் இன்னும் சற்று நெய் வார்த்தது.

அவள் முகமாறுதல்களைக் கவனித்தபடியிருந்த கிருஷ்ணமல்லருக்கு அவள் சித்தத்தில் எழுந்த கோபாக்னியின் காரணம் புரிந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் வெகு நிதானமாகவே பேச ஆரம்பித்தார்: "இளவரசியார் மிகுந்த கோபத்தில் இருப்பதாகத் தெரிகிறது..."

வெடுக்கென்று வந்தது இளவரசியின் பதில் : "ஆம் கோபத்திலிருக்கிறேன். நானிருக்கும் நிலையில் எனக்குக் கோபம் ஒன்றுதான் குறைவாயிருக்கிறது."

"ஏன்? இளவரசியாரின் நிலைக்கென்ன?" கிருஷ்ணமல்லரின் கேள்வியில் பெரும் அக்கறை தொனித்தது.

"என் நிலைக்கு என்னவா? என் தந்தையிடமிருந்து உதவி கோரி ஓலை வந்த பின்னும் உதவிக்குச் செல்லாமல் அவரை போசளரிடம் சிறைப்பட வைத்தீர்கள். கொங்குநாட்டு மக்களை அன்னியரிடம் அவதிப்பட வைத்திருக்கிறீர்கள். தந்தையைக் காணச் சென்ற என்னை வழிமறித்து பாண்டியர் தலைநகரில் கொண்டு தள்ளிவிட்டுப் பிறகு அங்கிருந்தும் இந்தக் கோட்டையில் கொண்டு வந்து அடைத்திருக்கிறீர்கள். அவசியமானால் என்னையும் போசளரிடம் சிறைப்பட விடுவீர்கள்! போதாக்குறைக்கு யாரோ ஒரு கரும்பூதத்தைக் காட்டி என் தந்தையின் மெய்க்காவலன் சூரிய காங்கேயன் என்று கூறுகிறீர்கள். கொங்கு நாடு மட்டுமின்றி, அதன் மன்னனும் இளவரசியும் உங்களுக்கு வெறும் விளையாட்டுக் கருவிகளாகி விட்டனர். இதில் எனக்குக் கோபம் வந்து யாருக்கென்ன நஷ்டம்?"

அவள் கோபத்தையும் படபடவென்று பொரிந்து தள்ளிய வார்த்தைகளையும் கேட்ட ஆதித்யன் மட்டுமின்றி, யுவானும் கூட திகைத்துப் போய், செக்கச் செவேலென்று கன்றிச் சிவந்து விட்ட அவள் முகத்தை வெறித்துப் பார்த்தபடி சிலை

யாகவே அமர்ந்திருந்தார்கள்.


கிருஷ்ணமல்லரின் குரல் அதே நிதானத்துடன் ஒலித்தது. "இளவரசி, தவறாகக் கற்பனை செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் தந்தையின் ஓலையுடன் வந்தவன் நான்கு தினங்கள் தாமதமாக வந்தான். எதிரிகளிடம் சிக்கியதாகவும் பின்பு தப்பித்து வந்ததாகவும் காரணமும் கூறினான். அதற்குள் போசளத் தண்ட நாயகன், வட கொங்கு முழுவதையும் கைப்பற்றி, உங்கள் தந்தையையும் சிறை செய்து விட்டான். ஓலை கொண்டு வந்தவனது நடவடிக்கைகள் சந்தேகத்தை அளித்ததால், ஒற்றர்களை அனுப்பி விசாரிக்க உத்தரவிட்டேன். பிறகுதான் என் யூகம் சரியென்பதும் வந்தவன் மன்னரின் மெய்க்காவலனைக் குத்தி காவிரியில் எறிந்து விட்டு, இங்கு உளவறிய வந்திருக்கிறான் என்பதும் புரிந்தது." கிருஷ்ணமல்லர் விளக்க விளக்க இளவரசியின் முகத்திலிருந்து சினம் அகன்று கவலை படர்ந்தது.

"அப்படியானால் சூரிய காங்கேயன்

விட்டு வருகிறேன்" என்று சகஜமாகக் கூறிய கிருஷ்ணமல்லர் வெளியே நடந்தார். அறையில் மீதமிருந்த இருவருக்கும் தடையாக இருக்க விரும்பாத யுவானும் படைத்தலைவருடன் வெளியேறினான்.

அறைக்குள் தனித்து விடப்பட்ட ஆதித்யனும் இளவரசியும் ஒருவரையொருவர் கண்களால் விழுங்கியபடியே நீண்ட நேரம் அமர்ந்திருந்தனர். விரைவில் பிரியப் போகிறோம் என்கிற எண்ணம் இருவர் மனங்களையும் பொங்க வைத்திருந்ததால் வாய்ச் சொற்களுக்கு எந்தப் பயனுமில்லாமலிருந்தது.

அடுத்த அரை ஜாமத்தில் அனைவரிடமிருந்தும் விடை பெற்றுக் கொண்ட ஆதித்யனின் பயணம், சோழ நாட்டை நோக்கித் துவங்கியது. அந்தப் பயணம் தமிழகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் பயணம் என்பதை உணர்ந்த ஆதித்யன், மெல்ல தனது சித்தத்தை ஒரு நிலைக்குக் கொண்டு வர முயன்றான்.



மடிந்து விட்டானா? என் தந்தையின் நிலை என்னவாயிற்று?" இளவரசியின் குரலில் பெரும் கவலை ஒலித்தது.

"அஞ்ச வேண்டாம் இளவரசி, உங்கள் தந்தை ஸ்காந்தபுரத்து அரண்மனையில் சிறையிருக்கிறார். அவரை மீட்பதற்கும் கொங்கு மண்ணை விடுவிப்பதற்கும் பலமான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் ஒரு திங்களில் தமிழகத்தின் விடுதலைப் போர் கொங்கு மண்ணில் துவங்கும்." கிருஷ்ணமல்லரின் குரலில் அதுவரை காணாத வேகம் ஒலித்தது.

இளவரசியின் முகத்தில் சற்று சங்கடம் தெரிந்தது. அடுத்து ஒலித்த அவள் குரலிலும் அது ஒலித்தது. "படைத் தலைவரே, சற்று முன்பு நான் உணர்ச்சி வசப்பட்டு ஏதேதோ கூறிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்."

"அதனால் பாதகமில்லை இளவரசி. நீங்கள் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். ஆதித்யன் சோழ நாட்டுக்குப் பயணப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்து

ஆதித்யன் சென்ற பின்பு உத்தமபாளையத்து அரண்மனை வெறிச்சிட்டு விட்டதாகத் தோன்றியது இளவரசிக்கு. அவள் கவனத்தைத் திருப்ப கிருஷ்ணமல்லரும், யுவானும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின.

ஆசை உத்தியதால் எழுந்த ஆவலும், ஆவல் நிறைவேறாததால் ஏக்கமும், ஏக்கத்தின் விளைவாகத் தோன்றிய காரணமற்ற கோபதாபமும் அவள் சித்தத்தை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. கிருஷ்ணமல்லர் ஏற்பாடு செய்திருந்த வசதிகளும், அழைத்த குரலுக்கு ஓடிவந்த பணிப் பெண்களும், அவளுக்கு சலிப்பையே ஏற்படுத்தின. இளவரசிக்கு ஏதேனும் குறைவோ, அதிருப்தியோ ஏற்பட்டால், படைத் தலைவர் தங்களைத் தொலைத்து விடுவார் என்ற அச்சத்தில், அவளது காரணமற்ற கோபத்தையும், அற்ப விஷயங்களுக்கெல்லாம் எரிந்து விழுந்ததையும் பொறுமையுடன் பணிப் பெண்கள் தாங்கிக் கொண்டார்கள். அன்பையும் இனிமையையும் அளிக்கவல்ல இனிய பெண

ணொருத்தி குணம் மாறுபட்டால் எத்தனை விஷமாக மாற முடியும் என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தாள் இளவரசி அடுத்த இரண்டே தினங்களில்.

அரண்மனையும், பஞ்சணையும், கனிவகைகளும், பணிப் பெண்களும் வெறுத்து விட்டதால் இரண்டாவது தினம் மாலைப் பொழுது மயங்கத் தொடங்கிய நேரத்தில் அரண்மனை நந்தவனத்தை நோக்கி நடந்த பூங்கோதையை, நந்தவனத்து வண்ண மலர்கள் தலையசைத்து வரவேற்றன. மலர்களின் இனிய சுகந்தத்தையெல்லாம் திரட்டிக் கொண்டு வந்து, தென்றல் அவளது பூவுடலைத் தழுவி ஆறுதலளிக்க முயன்றது. நந்தவனத்தினூடே நடந்த பூங்கோதை சற்றுத் தள்ளி ஓர் அழகிய பொய்கை தெரிவதையும், பொய்கையில் அல்லி மலர்கள் மலர்ந்து கிடப்பதையும் கவனித்து, மெல்ல அதை நாடிச் சென்று, அதன் கரையில் அமர்ந்து, மலர்களை வெறிக்க ஆரம்பித்தாள். அல்லி மலர்களும் தங்கள் மலர்க் கண்களை அகல விழித்து அவளைப் பரிதாபத்துடன் பார்த்தன. பொய்கையை அடுத்திருந்த மரக்கிளையில் அமர்ந்து இனிய குரலெழுப்பிக் கூவிக் கொண்டிருந்த குயிலுக்கு, அவள் சோகம் புரிந்ததாலோ என்னவோ, தன் இனிய கீதத்தை நிறுத்திக் கொண்டு அங்கிருந்து பறந்து மறைந்தது.

பூங்கோதை எதையும் ரசிக்கும் மனநிலையில் இல்லை. எந்தக் கவலையுமற்று சூளாமணி விஹாரத்தில் கழித்த நாட்கள் அவள் நினைவில் எழுந்தன. கல்வியையும், பயிற்சிகளையும், விளையாட்டுக்களையும் தவிர்த்து, வேறு எந்தக் கவலையுமற்று பறவைகளைப் போல ஆடிப் பாடித் திரிந்த அந்த நாட்களின் பசுமை நிறைந்த நினைவுகள் அவளைச் சூழ்ந்தன. ‘மனித வாழ்வில் கல்வி பெற்று வெளியேறுவது முதல் இறுதிவரை, போராட்டங்கள் தாம்’ என்று சூளாமணித் தலைவர் அடிக்கடி கூறுவதில் இருந்த உண்மை எத்தனை நிதர்சனமானது என்பது புரிந்தது.

அடுத்து அவள் சித்தத்தில் எழுந்தது ஆதித்யனின் சிரித்த முகம். தன்னையும் யுவானையும் காடவர்களிடமிருந்து மீட்ட போது ஆதித்யன் கரத்தில் அந்த நீண்ட வாள் கரகரவெனச் சுழன்ற விதமும், போரிட்ட போதும் மாறா திருந்த அந்த விளையாட்டுப் பிள்ளையின் விஷமச் சிரிப்பும்.... அவனைப் பற்றிய நினைவே தன் குணமாறுதலுக்குக் காரணம் என்ற உண்மையை அவள் புத்தி இடித்துக் கூறியதால், அந்த நிலைக்கு ஆளாக்கிய ஆதித்யன் மீது இனம் தெரியாத கோபம் ஒன்றும் பிறந்தது.

அவன் எதிரிலிருப்பதாகவே பாவித்துக் கொண்டவள், கரங்களில் சிக்கிய புற்களைப் பறித்து எதிரில் எறிந்தாள். அடுத்து அவள் கரத்



அருள்வாக்கு

வெள்ளைக்கார வேஷத்திலே உள்ள நம்மவர்கள் சட்டம் செய்கிறார்கள், அதற்கு அடிமையாக நாம் இருக்கிறோம் என்றால் அதில் சுதந்தரத்தின் சாரமே இல்லை. நம்முடைய சம்பிரதாயங்களை அநுசரிக்காதவர்களுக்கு வோட்டுக் கொடுத்து வரும் ராஜ்யம் அடிமை ராஜ்யம் தான். லௌகிக விஷயங்கள் கூட ஆத்ம சம்பந்தமாகவும், தெய்வ சம்பந்தமாகவும் இருந்த அந்த முறைதான் நம்முடையது. அதன்படி இருந்தால் உத்கர்ஷத்தை (உயர்வை) அடையலாம் என்பதை அறிந்து, நமக்கு எந்த மாதிரி ஸ்வதந்திரம் உண்டோ அதை, அந்த முறையை நிலை நிறுத்துவதிலேயே பயன்படுத்த வேண்டும். தர்மம், தொழில் முறை முதலியவைகளை அறிந்தவர்களையும், அநுஷ்டானம், ஒழுக்கம் உடையவர்களையுமே ராஜ்ய நிருவாகத்தில் வைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் நம்முடைய சாஸ்திரப்படி தர்ம ராஜ்யத்தை ஸ்தாபித்து இது நன்றாக நடக்கிறது என்று காட்டி மற்ற தேசத்தவர்களும் இதை அநுசரிக்கச் செய்ய வேண்டும். அப்படி நடத்திக் காட்டுவதற்கு நம்முடைய சாஸ்திரங்களையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சாஸ்திரங்களைப் பார்த்து அந்தப்படி ஏன் நடக்கக்கூடாது, அந்தப்படி பண்ணுகிறவர்களை ஏன் சட்டசபைக்கு அனுப்பக் கூடாது என்று எல்லா ஜனங்களும் ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

இல் சிக்கியது ஒரு மலர்க் கொத்து. அதையும் எடுத்து எதிரிலிருந்த பொய்கையை நோக்கி எறிந்தவள், எறிந்த பின்பே அது எப்படி தன்னருகில் வந்தது என்று சிந்தித்தாள். அந்த சிந்தனையும் சட்டென்று நின்றது. பொய்கையின் நீரில் மிதந்த அந்த மலர்க் கொத்திலிருந்து ஏதோ புகை போல வருவதைக் கண்டவள் திகைத்தாள். எழுந்து சென்று அதை நீரிலிருந்து எடுத்தவள் அந்தப் புகை தன் நாசியை எட்டியதும் கண்கள் இருளத் தொடங்குவதையும், கால்கள் தள்ளாடத் தொடங்குவதையும் உணர்ந்தாள். எல்லையற்ற திகில் முகத்தில் படர, அரண்மனையை நோக்கி இரண்டடி எடுத்து வைத்து, பின் இயலாமல் மயங்கிச் சரிந்தாள்.

அவள் அமர்ந்திருந்த இடத்தின் நேர் பின்புறமிருந்த செடிகளின் மறைவிலிருந்து எழுந்தான் மேற்கு வாயில் காவலர் தலைவன் சூரிய காங்கேயன். ஒருமுறை சுற்று முற்றும் பார்த்தவன், கச்சையிலிருந்து சிறு குப்பியொன்றை எடுத்துக் கொண்டு இளவரசியை நெருங்கினான். அவள் நாசிக்கருகே இரண்டொரு விநாடிகள் பிடித்தவன் மீண்டும் அதை கச்சையில் செருகிக் கொண்டு நந்தவனத்தின் மூலையொன்றை நோக்கி நடந்தான். மதிலை ஒட்டிக் கிடந்த பாறையொன்றை அடைந்து அதை மெல்ல நகர்த்தினான். புதர்களும் செடிகளும் நிறைந்த அந்தப் பகுதியில் ஒரு மனிதன் நுழையக் கூடிய அளவுக்கு வழியொன்று தோன்றியது.

அதே சமயத்தில் சோழ நாட்டு எல்லைக்குள் நுழைந்து கொண்டிருந்த ஆதித்யனின் மனத்தில் தான் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் என்பதும், தான் நுழைந்து கொண்டிருப்பது சோழ நாட்டு எல்லை என்பதும் கூட மறந்துவிடும் அளவிற்கு எதிரே விரிந்த காட்சி பிரமிக்க வைத்தது. பிரும்மாண்டமான ஒரு பச்சைக் கம்பளத்தை விரித்து, பூமியின் மீது போர்த்தி விட்டதுபோல விழிகள் திரும்பிய பக்கமெல்லாம் விரிந்திருந்த வயல் வெளிகள். ஊடே பூத்தையலிட்டாற்போல தென்னையும் வாழையும் இணைந்த சோலைகளும், மாஞ்சோலைகளும், அழகிய சிறு கிராமங்களும், குறுக்கிட்டு மயங்க வைத்தன. காவிரியிலிருந்து பிரிந்த கால்வாய்களும் சிற்றாறுகளும் மாலைக் கதிர்களின் ஒளியில் பொன்னும் வெள்ளியும் கலந்த சரிகையிட்டு பூமியை அழகு படுத்திக் கொண்டிருந்தன.

இத்தனை செழிப்பும், வளமும், பெருகிக் கிடந்தாலும் வளத்தின் பயனை தமிழகத்து மக்கள் அனுபவிக்க இயலாமல் அன்னியரிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலையை எண்ணியவன் மனத்தில் ஏக்கமும் பிறந்தது. ஏக்கத்தைத் தொடர்ந்து அந்த நிலையை எப்படியும் மாற்ற வேண்டும் என்ற உறுதியும் பிறந்தது.


இயற்கையின் அழகில் லயித்துப் போய் பயணம் செய்த ஆதித்யன், மாலை முற்றி ரேகை மறையும் நேரத்தில் தன்னை நெடுநேரமாக நான்கு புரவி வீரர்கள் தொடர்ந்து வருவதைக் கவனித்தான். ஓடுபவனைக் கண்டால் தானே துரத்துபவர்களுக்கு வேகம் அதிகரிக்கும்! மேலும், நான்கு வீரர்களைச் சமாளிப்பது என்பது ஆதித்யனைப் பொறுத்தவரையில் ஒரு பெரும் விஷயமாகத் தோன்றவில்லையென்பதால் புரவியைச் சாதாரணமாகவே நடக்க விட்டான் பாண்டிய இளவல். சற்றுத் தொலைவில் தெரிந்த சிறு ஊரைக் கண்டதும் அங்கேயே பின் தொடர்பவர்களுக்கு ஒரு வழி செய்து விடலாம் என்றும் தீர்மானித்தான்.

பின் தொடர்பவர்கள் போசள வீரர்களாயிருக்கும் பட்சத்தில், தன்னை சைவத் துறவியார் அழைத்த நோக்கமும், தான் சோழ நாட்டை அடைந்திருக்கும் நோக்கமும் கெட்டு விடக்கூடும் என்ற உண்மையும் அவன் உள்ளத்தில் உறுத்தியது. ஆனால் அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக அந்த ஊரை அவன் நெருங்கு முன்பு, பின் தொடர்ந்த நால்வரும் மெல்லப் பின் வாங்கியபடியே வேறு திசையில் மறைந்து விட்டனர்.

அந்தச் சிறிய ஊரில் இரண்டு நாழிகை நேரமே தங்கிய ஆதித்யன், சிறிது உணவு அருந்தி, சிரமபரிகாரமும் செய்து கொண்ட பின் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தான். தான் இன்னும் சில காத தூரமே செல்ல வேண்டியிருப்பதை விசாரித்து அறிந்து கொண்டவன், இரவின் முதல் ஜாமத்திற்குள் தஞ்சையை அடைந்து விடுவது என்ற தீர்மானத்துடன் புரவியைச் சற்று வேகமாகச் செலுத்தத் தொடங்கினான். வேகத்துடன் பாய்ந்த புரவியை அந்த ஊரைத் தாண்டி அரைக்காத தூரத்திலேயே மீண்டும் இழுத்துப் பிடித்து நிறுத்தினான் ஆதித்யன்.

அவனுக்கு எதிரில் அந்த நான்கு புரவி வீரர்களும் பாதையை மறித்து நின்றிருந்தனர்.

(தொடரும்)




"தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதைத் தவிர வேறு வழியே இல்லை!"


"ஏன் தலைவரே?"


"ஒரு கூட்டணியிலேயும் நம்மைச் சேர்த்துக்க மாட்டேன்னுட்டாங்கய்யா!"

— ஞா. ஞானமுத்து


DITTY









1996 பிப்ரவரி 25
யுவ மாசி 13
மலர் : 54
இதழ் : 30

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஊழல் ஒழிப்பு யுத்தம்!


ஊழலை எதிர்த்து ஒரு யுத்தம் தொடங்குவோம் என்று சூளுரைத்திருக்கிறார் நரசிம்மராவ். சாமர்த்தியமாக, காங்கிரஸ் செயற்குழுவை ஒதுக்கிவிட்டு, மாநிலத் தலைவர்களின் சந்திப்பைத் தலைநகரில் நடத்தியிருக்கிறார்.

'ஊழல் குற்றச்சாட்டு சுமக்கும் காங்கிரஸ் உறுப்பினர்களைத் தேர்தலில் நிற்கவே விடக் கூடாது; லஞ்ச - ஊழல் குற்றவாளிகளை எதிர்த்து, சட்டம் தன் போக்கில் செயல்பட அனுமதிக்கப்பட வேண்டும்; என்றெல்லாம் யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவ்விஷயத்தில் பிரதமரின் செயல்பாடு வரவேற்கப்பட்டுள்ளது.

ஆனால், மக்கள் இந்தத் தீர்மானங்களையெல்லாம் முழு மனத்தோடு நம்பப் போவதில்லை. பிரதமரின் கரத்தைப் பலப்படுத்தவே இந்தக் கூட்டம் என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்கள்.

காங்கிரஸ் தலைவர்களின் பேரிலுள்ள கரும்புள்ளிகளினால் வாக்காளர்கள் ஏற்கெனவே வெறுத்துப் போயிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான நடவடிக்கைகளுக்கும் உள்நோக்கம் கற்பிக்கப்படுகிறது. போதாக்குறைக்கு, டெல்லி கூட்டத்தின் வீரதீர பேச்சுக்களில் சந்திரா சுவாமி பற்றி ஒருவருமே மூச்சுக் கூட விடவில்லை! (அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என சி.பி.ஐ. கைவிரித்து விட்டது!) இது மக்களின் அவநம்பிக்கையை இன்னும் அதிகரிக்கவே செய்யும்.

காங்கிரஸின் தீர்மானங்களை மக்கள் வெறுப்புடனும் அவநம்பிக்கையுடனும்தான்



ஏற்பார்கள் என்பதைப் பிரதமரும் நிச்சயம் உணர்ந்திருப்பார். எனவே ஊழல் ஒழிப்பு இயக்கம் என்றொரு வித்தை காட்டி வோட்டு வாங்கி விடலாம் என அவர் கனவு காண முடியாது.

பிரதமரின் ஊழல் ஒழிப்பு இயக்கம் உண்மையிலேயே பயன்தர வேண்டுமானால் - மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தி வாக்குகளாக மாற வேண்டுமானால் - அது குறுகிய எல்லைக்குள் ஒடுங்கி விடாமல் தொலைநோக்குடன் செயல்பட வேண்டும்.

முக்கிய தேசிய தலைவர்கள் பேரிலான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் அதிகாரம் பெற்ற லோக் பால் என்கிற சிறப்பு நீதிமன்றத்தை உருவாக்கும் மசோதாவைச் சட்ட வடிவமாக்க உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இந்தக் காரியம் மக்களின் நம்பிக்கையை ஓரளவு பெற்றுத் தரும்.


தமிழகத்தில், ஊழலின் மொத்த உருவமான அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டணிக்கான முயற்சிகளை அடியோடு கைவிட்டு, ரஜினி ஆதரவுடன் காங்கிரஸ் தேர்தல் களத்தில் இறங்கும் என்பதை விரைவில் உறுதிப்படுத்த வேண்டும்.

அப்போதுதான் வாக்காளர்களுக்கு காங்கிரஸுடைய ஊழல் ஒழிப்புப் போராட்டத்தில் முழு நம்பிக்கை பிறக்கும்.

'ஜெ பிராண்ட்' அரசியல்

'ஏற்கெனவே வகுக்கப்பட்ட திராவிட பாரம்பரியத்தில் அ.இ.அ.தி.மு.க. தொடர்ந்து நீடிக்கும்...' - இப்படியொரு உப்புப் பெறாத தீர்மானத்தை நிறைவேற்ற திருச்சி நகரையே திணறடிக்க வேண்டுமா?

மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தேவை, கவர்னர் பதவியை ஒழிக்க வேண்டும், அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 356 ஆவது பிரிவை நீக்க வேண்டும் என்று அரதப் பழசான பல்லவிகளையே பாட பல கோடி ரூபாய் செலவழிக்க வேண்டுமா?



- இப்படியெல்லாம் கேள்வி எழுப்பிப் பயனில்லை. ஆழமில்லாத சிந்தனையை ஆடம்பரத்தால் போர்த்தி, மக்களுக்கு பிரமிப்பூட்ட முயல்வதுதான் ஜெயலலிதா 'பிராண்ட்' அரசியல்.

பொன்னான நேரத்தையும் பொருளையும் வீணடித்த திருச்சி மாநாட்டில் என்ன புதுமை நிகழ்ந்தது என்று கேட்டால், அ.இ.அ.தி.மு.க. கொடியைக் கவிழ்த்துப் பறக்க விட்டதை வேண்டுமானால் சொல்லலாம்!

தாம் பெண் என்ற ஒரே காரணத்துக்காக எதிர்க்கட்சிகள் தம்மைச் சாடுவ்தாகப் புகார் சொல்கிறார் ஜெயலலிதா - வளமான கற்பனை!

தி.மு.க.வின் கூட்டணி முயற்சிகளைக் கேலி செய்து, 'தமது கட்சிக்கு அவ்வாறு அல்லாடும் அவசியமே இல்லை' என்று பெருமையடித்துக் கொள்கிறார். அதே மூச்சில், 'அரசியலில் நிரந்தர நட்பும் இல்லை, பகையும் இல்லை' என்று முத்துதிர்க்கிறார்! மத்திய அரசின் நடவடிக்கைகளால் மிரண்டு போனதில் விளைந்த முரண்பாடு.

காஃபிபோஸா சட்டத்தின் கீழ் தினகரன் கைது; முதல்வரால் எம்.பி. பதவிக்கு நியமிக்கப்பட்ட ஆதிராஜாராமுக்கு ஜாமீன் வாபஸ் என்று செய்திகள் வருகின்றன. சட்டத்தின் ஓட்டையில் புகுந்து, அயல்நாட்டிலிருந்து 1.3 கோடி முதல்வர் கொண்டு வந்தது அம்பலமாகிறது.

முதல்வர் பேரிலுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கத் தடைகோரும் மனுவை, உச்சநீதி மன்றம் ஃபுல் பெஞ்சின் பார்வைக்கு அனுப்புகிறது. முதல்வர் ராஜினாமா செய்யாமல் தொடர்ந்து பதவியில் நீடிப்பதால் அம் மனு மீதான விசாரணையைத் தாமதமின்றி நடத்த வேண்டும் என்று கவலையோடு வற்புறுத்துகிறது.

இந்தச் சூழ்நிலையில்தான், 'லஞ்சம் ஊழல் எல்லாம் நெருங்க முடியாத நெருப்பு நான்!' என்று திருச்சியில் வசனம் பேசியிருக்கிறார் முதல்வர். நெருப்பாக இருந்தால், நீதிமன்ற விசாரணை என்ற அக்னிப் பிரவேசத்துக்கு அஞ்சுவானேன்? உச்சநீதி மன்றத்தில் தடையுத்தரவு பெற முயற்சி செய்வானேன்?



கிருமி

‘கம்ப்யூட்டர் வைரஸ்’ என்று கேள்விப்படுகிறோம். மாய்ந்து மாய்ந்து சேமித்து வைத்த தகவல்களையெல்லாம் ஒரே வினாடியில் சின்னா பின்னமாக்கிவிடக்கூடிய ‘கிருமி’ அது!

கம்ப்யூட்டரானது வன்பொருள், (HARDWARE) மென்பொருள் (SOFTWARE) என்ற இரண்டு முக்கியமான அடிப்படை அமைப்புக்களோடு இயங்குகிறது என்பதை இன்னொரு தடவை நினைவுபடுத்திக் கொள்வோம்.

வன்பொருள்? நாம் கண்ணால் காணும் கம்ப்யூட்டரின் திரை, பிரிண்டர், மற்றும் கம்ப்யூட்டருக்கு உள்ளே பொருத்தப்பட்ட மின்காந்தத் தகடு (HARD DISK), கம்ப்யூட்டரின் நினைவுத் தொகுப்பாக (MEMORY) அமைந்த சிலிக்கன் சில்லுகள், கம்ப்யூட்டரின் இதயமான மைக்ரோபிராசசர் சில்லு... இப்படி.

மென்பொருள்? கம்ப்யூட்டரை இயக்கிக் கணக்குப் போட, படம் வரைய என்று வேலை செய்ய வழி செய்கிற ஆணைத் தொடர்களின் தொகுப்புக்கள். புத்திசாலிகளால் எழுதப்படுவது.

கம்ப்யூட்டர் கிருமியும் மென்பொருள்தான்! மண்டை நிறைய மசாலா உள்ள, ஆனால் புத்தி கோணலாகிப் போன பிரகிருதிகளால் படைத்து வேலைக்கு விடப்படுவது.

முற்றுகைக்குள்ளான அத்தியாவசியமான தகவல் வளங்கள் (VITAL INFORMATION RESOURCES UNDER SIEGE) என்ற நீளமான ஆங்கிலத் தொடரின் முதல் எழுத்துக்கள் சேர்ந்துதான் வைரஸ் (VIRUS) என்ற பதம் உருவானது.

ஜலதோஷக் கிருமி ஒன்று பலவாகப் பல்கிப் பெருகி ஒரு நபரிடமிருந்து மற்றவருக்குத் தொற்றுவது போல, கம்ப்யூட்டர் கிருமியும் வளர்ந்து பெருகி, ஒரு கம்ப்யூட்டரிலிருந்து மற்றதைச் சென்று சேரும். ஆனால் எல்லாவிதமான கம்ப்யூட்டர்களிலும் கிருமி தொற்றுவது இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.

கம்ப்யூட்டர் மென்பொருட்களில், ஆபரேட்டிங் சிஸ்டம் என்ற தலையாய ஒன்று உண்டு. மற்ற மென்பொருளை இயங்க வைப்பது, நடக்கிற வேலையைப் பொறுத்து நினைவில் அரங்கம் அமைத்துத் தருவது என்றெல்லாம் ஏகமான வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும். இத்தகைய ஆபரேட்டிங் சிஸ்டம்களில் முக்கியமானவை டாஸ் (DOS), யூனிக்ஸ் (UNIX), விண்டோஸ்-95 (WINDOWS-95) போன்றவை.

ஒரே நேரத்தில் பலர் இயக்கக்கூடிய, பாதுகாப்பு மிகுந்த யூனிக்ஸ் ஆபரேட்டிங் சிஸ்டம் கொண்ட கம்ப்யூட்டர்களில் கிருமித் தொல்லை கிடையாது. அங்கே வைரஸ் சாப்ட்வேரை எழுதி இயக்கிப் பரப்புவது கஷ்டமான காரியம் என்பதால் யாரும் இன்னும் மெனக்கெடவில்லை. விண்டோஸ்-95 ரொம்பப் புதுசு. அதற்கான கிருமிகளை விஷமிகள் தற்போதுதான் சுறுசுறுப்பாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள்!

ஆக, உலகில் பலகோடி கம்ப்யூட்டர்களில் இயங்கும் டாஸ் ஆபரேட்டிங் சிஸ்டத்துக்குத்தான் சகல நோய்க்கிருமிகளோடும் போராட வேண்டிய துர்பாக்கியம்!

கம்ப்யூட்டர் கிருமி எப்படி வேலையைக் காட்டுகிறது என்று பார்ப்பதற்கு முன், சுருக்கமாகக் கம்ப்யூட்டர் எப்படி இயங்குகிறது என்பதைப் பார்ப்போம்.

டாஸோ, மற்ற எந்த ஆபரேடிங் சிஸ்டமோ... எல்லா மென்பொருளையும் இயங்கச் செய்ய வல்லமை படைத்திருந்தாலும், கம்ப்யூட்டர் வன்பொருளான பிரிண்டரோடோ,

காந்தத் தகட்டோடோ, திரையோடோ நேரடியாகப் 'பேச' முடியாது.

பயாஸ் ரொட்டீன்கள் (BIOS ROUTINES) என்ற விசேஷ ஆணைத் தொடர்கள் இதற்காகத் தேவைப்படும்.

உதாரணமாக நீங்கள் கம்ப்யூட்டரில் வேர்ட் பிராசசர் மென்பொருளைப் பயன்படுத்தி உங்கள் உள்ளம் கவர்ந்தவருக்குக் கடிதம் எழுதுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

'மானே... தேனே... மனீஷாவே... கொய்ராலாவே...' என்றெல்லாம் டயலாக் விட்டு ஒரு மாதிரிக் கடிதத்தை முடிக்கிறீர்கள். இனி அதைக் கம்ப்யூட்டரின் பிரிண்டரில் அச்சடிக்க வேண்டும்.

ராஜ்ஜியம்!

கம்ப்யூட்டரின் விசைப்பலகையில் (KEY BOARD) இதற்கான பொத்தான்களை அழுத்த, வேர்ட்பிராசசர் தன்னை இயங்க வைத்துக் கொண்டிருக்கும் ஆபரேடிங் சிஸ்டத்திடம், "ஹலோ... இந்தக் கன்றாவியைக் கொஞ்சம் பிரிண்ட் அடிச்சுக் கொடுப்பியாம்" என்று முறையிடும்.

தன் வேலையில் இப்படிக் குறுக்கீடு (INTERRUPT) வந்ததும், ஆபரேடிங் சிஸ்டம், பிரிண்டரோடு 'பேச'வல்ல பயாஸ் ஆணைத் தொடரைத் தேடிக் கூப்பிட்டு, "இந்தாப்பா... ஐயா கேக்கறாரு பாரு... செஞ்சு கொடு" என்று ஏவிவிட்டுத் தன் வேலையைத் தொடரும். இந்த ஆணைத் தொடர்களைக் குழப்புவது தான் கிருமியின் வேலை!

கம்ப்யூட்டர் கிருமி மென்பொருளைக் காந்தத் தகட்டிலோ, ஃப்ளாப் பியிலோ, தொடங்குமிடத்தில் (BOOT SECTOR) ஒளித்து வைக்க வேண்டியது. கம்ப்யூட்டர் 'ஆன்' செய்யப்பட்டதும் கிருமி முந்திக் கொண்டு மெமரியில் ஏறி உட்கார்ந்து கொள்ளும்.

அது உள்ளே போனதும், பயாஸ் ஆணைத் தொடர்களின் முகவரிப் பட்டியலில் அதிகமாக உபயோகப் படுத்தப்படும் ஒரு முகவரிக்குப் பதிலாகத் தன் முகவரியைத் தந்திரமாக நுழைத்து விடும்.

தகவலைப் பிரதி செய்ய அழைக்கப்படுகிற 'காப்பி ரொட்டீன்'தான் சாதாரணமாகப் பலிகடா ஆகும்.

காந்தத் தகட்டிலிருந்து ஒரு ஃப்ளாப்பியில் தகவலைப் பிரதி செய்ய வேண்டும் என்று ஆபரேடிங் சிஸ்டத்துக்கு வேண்டுகோள் விடப்பட்டால், அது முகவரி படித்ததும் கூப்பிட்ட குரலுக்கு 'காப்பி பயாஸ் ரொட்டீன்' ஓடி வந்து நிற்காது. அதன் இடத்தைப் பிடுங்கிக் கொண்ட கிருமிதான் வரும்!

"பிரதிதானே... எடுத்துட்டாப் போச்சு.." என்று கிருமி கனஜோராக வேலையைத் தொடங்கும்.


எடுத்த எடுப்பிலேயே, அது ஃப்ளாப்பியின் தொடங்குமிடத்தில் தன்னுடைய நகலை நுழைத்து விடும். அப்புறம் நல்ல பிள்ளை யாகக் கேட்ட தகவலைப் பிரதி செய்யும். அடுத்து நாசவேலை ஆரம்பம்.

இப்படித் தகவலோடு இலவச இணைப்பாகக் கிருமியும் பிரவேசிக்க, ஃப்ளாப்பி 'கிருமி கண்ட சோழனா'கிறது. இந்த சீக்குப் பிடித்த ப்ளாப்பியைக் கொண்டு வேறு ஏதாவது கம்ப்யூட்டரை இயக்கத் தொடங்க, கிருமி அங்கேயும் அழையா விருந்தாளியாகப் புகுந்து விடும்.

தானே பல்கிப் பெருகவும், மற்ற தகவலை நிர்மூலம் செய்யவுமாக, "ஆக்கல் அழித்தல்' ஆற்றல்களோடு செயல்படுகிற மேற்குறிப்பிட்ட கிருமிகள் பூட்செக்டார் கிருமிகள் (BOOT SECTOR VIRUS) எனப்படும். இயங்கத் தொடங்கியதுமே மெமரியில் நுழைந்து நாசவேலை செய்பவை இவை.

இவை தவிர, தகவல் கோப்பு வைரஸ்கள் (FILE VIRUS) என்ற வகைக் கிருமிகளும் உண்டு.

சில குறிப்பிட்ட மென்பொருட்களைப் பீடிக்கும் இந்தக் கிருமிகள் கொஞ்சம் வித்தியாசமானவை. சாதாரணமாக நோய் வந்தால் உடம்பு மெலியும். ஃபைல் வைரஸ் தொற்றினாலோ, மென்பொருளின் 'சைஸ் (மெமரியில் உட்கார அது எடுத்துக் கொள்ளும் இடம்) சிறிதே அதிகரிக்கும். இப்படி ஒவ்வொரு தடவை இயக்கப்படும்போதும், மென்பொருள் உடம்பு வீங்கி, நாளாவட்டத்தில் பூமக்குச்சி



நரசிம்மன் குண்டு கல்யாணமானது போல உருமாற, ஒரு கட்டத்தில் மெமரியில் நுழையவே முடியாதபடி போகும். அப்புறம் என்ன... கால்காசுக்குப் பிரயோஜனப்படாத அந்த மென்பொருளைக் களைந்து எறிய வேண்டியதுதான்!

'ஜெருசலேம்' என்ற ஒரு ஃபைல் வைரஸ். மென்பொருளை ஊதிஊதிப் பெரிதாக்குவதோடு இன்னொரு விஷமமும் செய்யும். தேதியும் பதிமூன்றாக இருந்து கிழமையும் வெள்ளிக் கிழமையாக அமைந்து போனால் ஜெருசலேம் வைரஸுக்கு ஏகக் குஷி - மற்ற மென்பொருளுக்கு எல்லாம் மரணயோகம்.

'மரிஜுவானா' என்ற 'பூட்செக்டர்' கிருமியோ, கம்ப்யூட்டரை ஆக்கிரமித்துக் கொண்டதும், 'உன் கம்ப்யூட்டர் கல்லடி வாங்கியாச்சு...' என்றோ, 'மரிஜுவானாவை சட்டபூர்வமாக்கணும்' என்றோ திரையில் நக்கலாக எழுதும்! போதைப் பொருளுக்கு அடிமையான யாரோ வெள்ளைக்காரன் லாகரியில் மிதந்தபடி படைத்துவிட்ட கிருமி இது.

வேர்ட் மாக்ரோ வைரஸ் என்ற கிருமி செய்யும் விஷமம் வேறு விதமானது. மைக்ரோசாப்ட் வேர்ட் என்ற வேர்ட்பிராசசர் மென்பொருளைப் பயன்படுத்தி எழுதிய எந்தத் தகவல் தொகுப்பையும், கம்ப்யூட்டர் பிரிண்டர் மூலம் காகிதத்தில் அச்சடிக்கும்போது இந்த வைரஸ் வேலை காட்டும். முழுசாக அடித்து முடித்ததும், தன் கைச் சரக்காகக் கூடவே ஒரு வரியையும் சேர்த்து விடும்- "அணு ஆயுதப் பரிசோதனைகளைத் தடுப்போம்."

வைரஸைக் கொஞ்சம் போல மாற்றி எழுதி, பணிவும் மரியாதையுமாகத் தொடங்குகிற கடிதங்களின் முடிவில் "போடா... டேய்..." என்று சேர்க்க வைத்தால்... வேண்டாம்... யாராவது எழுதிவிடப் போகிறார்கள்!

இன்றைய தேதியில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கம்ப்யூட்டர் வைரஸ்கள் உலவி வருகின்றன.

வைரஸ் எழுதி விஷமம் பண்ண வேண்டும், ஆனால் உட்கார்ந்து எழுத நேரமோ, புத்திசாலித்தனமோ குறைச்சல் என்று ஏங்குகிறவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய, வைரஸ் எழுதுகிற மென்பொருளையே உருவாக்கி விட்டார்கள் படுபாவிகள்! கேட்டவர் கேட்ட படிக்கு வைரஸ் எழுதித்தரும் இந்தக் கோடாலிக்காம்பு புரோகிராம், கம்ப்யூட்டர் வலைப்பின்னல் (NETWORK) மூலம் ஒளித்து ஒளித்துப் பரப்பப்படுகிறதாம்!

இப்படி ஒரு கூட்டம் கம்ப்யூட்டர் கிருமிகளை உற்பத்தி செய்து கொண்டே இருக்க, மற்றொன்று அந்தக் கிருமிகளுக்கு மாற்று மருந்து கண்டு பிடிப்பதே முழுவேலையாக, மும்முரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

வைரஸ் எப்படி கம்ப்யூட்டர் மென்பொருளோ, மாற்று மருந்தும் (VACCINE) அது போல மென்பொருள்தான்.

ஒவ்வொரு வைரஸுக்கும் ஒரு அடையாளக் கையெழுத்து உண்டு. கிருமி ஆணைத் தொடரின் சில குறிப்பிட்ட பகுதிகள் இவை.

போலீஸ் நிலையத்தில் கேடிகளின் கைரேகையைப் பதிவு செய்து வைத்திருப்பது போல, மாற்று மருந்து வாக்சினில் பல்வேறு கிருமிகளின் 'கையெழுத்து விவரம்' பதிவாகி இருக்கும்.

வாக்சினைக் கம்ப்யூட்டரில் ஏற்றி இயக்க, கையெழுத்தை வைத்துக் குற்றவாளியை இனங்கண்டு மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுத்துவிடும்.

ஆனால் மாற்று மருந்து போல் 'வேஷம் கட்டிக்' கொண்ட வைரஸ்கள் கூட இப்போது வந்துவிட்டன!

கம்ப்யூட்டரை வைரஸ் பிடிக்காமல் இருக்க, சில சுலபமான தடுப்பு முறைகள் உண்டு.

முதலாவது... ஓசியில் சாப்ட்வேர் கிடைக்கிறது என்றால், 'எனக்கு ஒண்ணு... எங்க அண்ணனுக்கு ஒண்ணு' என்று ஓடிப் போய் வாங்கிக் கொள்ளக் கூடாது. லைசென்ஸ் பெற்ற விற்பனையாளரிடம் காசு கொடுத்து வாங்குவதே புத்திசாலித்தனம்.

வெளியிலிருந்து வருகிற எந்த ஃப்ளாப்பியையும், வாக்சின் உபயோகித்து, பரிசோதித்து (SCANNING) அப்புறம்தான் அதில் பிரதி எடுக்கவோ, கொடுக்கவோ வேண்டும்.

எப்போதுமே ஃப்ளாப்பியிலிருந்து கம்ப்யூட்டரை இயக்க ஆரம்பிக்கும் (BOOTING) முறை கூடாது. ஹார்ட் டிஸ்க் (மின்காந்தத் தகடு)இலிருந்துதான் வேலை ஆரம்பிக்க வேண்டும். ஃப்ளாப்பியிலிருந்து 'பூட்' செய்கிற வசதி இருந்தால், அதைச் செயல்படுத்த முடியாதபடி செய்து விடலாம்.

வேக்சின் தயாரித்து விற்கிற நிறுவனங்களோடு உடன்படிக்கை செய்துகொண்டு, புதுசாக எந்த வைரஸுக்கு வாக்சின் உற்பத்தி செய்தாலும், அதையும் சேர்த்து வெளியிடுகிற மென்பொருளின் பதிப்பை (NEW VERSION)த் தரவேண்டும் என்று வழிவகை செய்து கொண்டால், கம்ப்யூட்டர் உரிமையாளர்கள் வைரஸ் பற்றிய துர்சொப்பனங்கள் இல்லாமல் ராத்திரியில் நிம்மதியாகத் தூங்கலாம்.

- இரா. முருகன்

காந்தி சமாதிக்கு "ராஜ்காட்" என்று பெயர், பலருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் நேரு, இந்திரா, ராஜீவ், லால்பகதூர் சாஸ்திரி இவர்களின் சமாதிகளுக்கு என்ன பெயர் தெரியுமோ?

நேருஜி - சாந்திவன், இந்திரா - சக்திஸ்தல், ராஜீவ் - வீரபூமி, லால்பகதூர் - விஜய்காட்.

- கே. என். பாலகிருஷ்ணன்

KALKI SHOPPING PAGE

மணமக்கள் தேவை
கம்ப்யூட்டர் ஜாதகம்

அனைத்துசமூகத்திலும், ஆயிரக்கணக்கான வரன்கள் பெற உடன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில்

ஆங்கிலம், தமிழ்	ரூ. 50/-
எதிர்கால கணிப்புடன்	ரூ.150/-
ஆண்டு பலன் :	ரூ. 50/-
கல்யாண பொருத்தம் :	ரூ. 50/-
NUMEROLOGY PREDICTIONS :	Rs. 50/-

CONSULT DIVINE ASTROLOGER
BRAHMASRI THETHIYUR S.V. SASTRY
WITH PRIOR APPOINTMENT.

ASTROLOGY SOFTWARE FOR SALE

ஸ்வயம்வராலயா

(GOVT. REGD)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 33. போன் : 425822, 4846427
7–ஏ, சாந்தி விஹார் காம்ப்ளக்ஸ், லஸ்,
சென்னை – 4. போன்:846278,
88, 1, 16th Cross, 6th Main, Malleswaram,
Bangalore - 560 055. Ph.:3340146

படிப்போம் பயன்பெறுவோம்

காந்த சிகிச்சை, எலக்ட்ரோ ஹோமியோபதி, பயோ கெமிஸ்ட்ரி, ஆகியவைகளை தபால் மூலம் தமிழில் கற்று தொழில் புரியவும்,

புகை பிடித்தல், கஞ்சா, மது, பான்பராக் பழக்க நீக்க "டி அடிக்ட்"

ஞாபக மறதி நீங்க, நினைவாற்றல் பெருக, மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறவும், எல்லா வயதினருக்கும் ஏற்ற "மெமரி பில்ஸ்"

லண்டன் மலர் மருந்துக் கலவைகள்.

மருந்து ஒன்றின் விலை ரூ. 24, பதிவுத் தபால் மூலம் பெற ரூ. 33 அனுப்பவும்.

Dr. M.G. *அண்ணாதுரை,*
காந்த சிகிச்சை & மாற்று மருத்துவ மையம், 60, ஜீவன்லால் நகர், (என்பீல்டு எதிரில்), திருவொற்றியூர்,
சென்னை - 600 019.
போன் - (044) 545207, 545235

மூலிகை மருத்துவம்

சைனஸ் சைட்டீஸ்

தீராத தும்மல், தலைவலி, மூக்கடைப்பு, முகவீக்கம், கண்களில் வலி– ஆகியவற்றால் நீங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களா?

பக்க விளைவுகள் இல்லாத "மூலிகை மருத்துவ சிகிச்சையினால்" குணமடைவீர்!

மூட்டு வலி

மூட்டு வலி, முதுகுவலி, கழுத்து வலி அதிகாலை உடல் அசதி– ஆகியவற்றால் நீங்கள் அவதிப்படுகிறீர்களா? மூலிகை மருத்துவம் மற்றும் உடல் சிகிச்சையினால் குணமடைவீர்!

இதை தவிர அதிக எடை தோல் வியாதி, ஆண்,பெண் நரம்புக் கோளாறுகள், போதை மருந்துக்கு அடிமை ஆகிய பலவியாதிகளுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது

டாக்டர் அமீன்
எஸ்.கே. மூலிகை மருத்துவ மையம்,
280, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை
(அஞ்சலகம் எதிரில்)
சென்னை - 600 005.
போன் : 843231

ராமசந்திராசாரீஸ்

RAMACHANDRA SAREES



மேற்கு மாம்பலம், சென்னை-600 033.



நேரம் வந்தாச்சு
நல்ல யோகம்
வந்தாச்சு
ராமசந்திரா சுங்குடி
புடவை உடுக்கையிலே.

OUR SPECIAL ATTRACTION
BENGAL COTTON,
VENKATAGIRI COTTON,
COIMBATORE KORA SAREES

ஒரு தடவை சொன்னால்...



ஒரு நடிகன் அரசியல் கட்சிப் பின்னணியை அமைத்துக் கொண்டு சினிமா வளர்ச்சி பெற முடியும் என்பதை நான் ஏற்க மாட்டேன்.

அதுபோலவே ரசிகர்களை ஒரு கட்சிக்குள் இணைத்து கோஷம் போடச் சொல்வதையும் நான் விரும்பவில்லை.

சிவாஜி, எம்.ஜி.ஆர். இருவரும் எத்தனையோ ஆண்டுகளாகக் கலைத் துறையில் பணியாற்றி, மக்களால் அரசியலுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள். அதன் பிறகு நடிகர்கள் அரசியல் ஈடுபாட்டை வளர்த்துக் கொள்வது பொருத்தமற்றதாகத் தோன்றும்.

"ரஜினி நீயும் ஒரு அரசியல் கட்சியில் சேர்ந்து விடு; நிறையப் படங்கள் வரும்" என்று சிலர் என்னிடம் சொல்லியது உண்டு.

அதெப்படி சார்? அரசியல் கட்சியில் சேர்ந்து விட்டால் நிறையப் படங்கள் வந்துவிடுமாமே! திறமையை வளர்த்துக் கொண்டால் மட்டுமே கலைத் துறையில் நிலைத்து நிற்க முடியும். I must stand on my own legs.

என்னுடைய சுயமுயற்சி, உழைப்பினால் மட்டுமே சந்தர்ப்பங்கள் கிடைத்தால் போதும். வேண்டாம் சார் எனக்கு politics. அதென்னவோ சார், இந்த அரசியல் என்றாலே எனக்கு அலர்ஜிதான்.

சராசரி மனிதர்களைக் கூட இப்போது என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த உலகத்திலே எதை எதிர் பார்த்து வாழ்க்கையை நடத்துகிறோம்? உணவு, உடை, வீடு இதைத்தானே!

இந்த மூன்றையும் எந்தத் தொழில் செய்தாலும் சம்பாதிக்கலாமே! எனக்குத் தொழில் நடிப்பு; அவ்வளவுதான்! தேவைக்கு அதிகமாகச் சம்பாதித்து என்ன செய்யப் போகிறோம்?

வசதியான உணவு; ஆடம்பரமான உடை; உல்லாசமான வீடு... இதுதானே சார்! அதுக்கு மேலே... இப்படிச் சிந்திக்கும் போதுதான் இந்த வாழ்க்கையின் முடிவு தெரிகிறது. அடக்கம், அமைதி எல்லாம் தெரிகிறது.

நான் முன்பு வாழ்ந்த வாழ்க்கையில் எத்தனையோ சோகம், வீரம் என எல்லாம் உண்டு. அதுவும் வாழ்க்கைதான். இப்போது நடிகனாக இந்தக் கட்டுரை எழுதுகிற அளவுக்குப் பெரிய மனிதனாகி விட்டேன். இதுவும் வாழ்க்கைதான்!

அப்போது நான் நாலு பேரைத் தேடிப் போனேன். இப்போது நாற்பது பேர் என்னைச் சுற்றி வருகிறார்கள். இதுதான் வித்தியாசம். மற்றபடி நான் கண்டக்டராக இருந்த போது கூட 'இன்டிமேட்' சென்ட்தான் போட்டுக் கொள்வேன்.

இப்போ என்ன ஸ்டைல்! அப்போதெல்லாம் ரூட்லே சிவாஜிராவ் வரான்னா என் பஸ்ஸில் தான் பெண்கள் கூட்டம் இருக்கும். என்னைப் பொறுத்தவரை எல்லா வாழ்க்கையுமே ஒண்ணு தான்!

(விசிட்டர் (15.12.1979) மாதமிருமுறை இதழில் 'மை ஃபிரண்ட்ஸ்' என்ற தலைப்பில் ரஜினிகாந்த் எழுதிய கட்டுரைத் தொடரிலிருந்து...)

மூன்று புத்தகங்களை, காவல் துறைக்கு 'பைபிளா'க வைத்திருக்கிறார்கள். இந்தியன் பீனல்கோடு (IPC) எல்லோருக்கும் தெரிந்த பெயர். 1860ல் வகுக்கப்பட்ட குற்றவியல் புத்தகம். என்னென்ன குற்றங்கள், எதெல்லாம் குற்றங்கள் என்று பட்டியலிட்டு, எந்தக் குற்றத்துக்கு என்ன தண்டனை என்பதுவும் பட்டியலிடப்பட்டிருக்கும். 'மெக்காலே' என்னும் பிரிட்டிஷ்காரர் தலைமையில் நிறுவப்பட்ட ஒரு குழுவின் தயாரிப்பு, இந்த நூல்.

இரண்டாவது 'The Code of Criminal Procedure'.



குற்றங்களை விசாரிப்பது, கைது செய்வது, சோதனை போடுவது என்ற செய்கைகளில் ஈடுபடும் போலீஸாரின் பொறுப்புகளும், அதிகாரங்களும், அவற்றின் வரம்புகளும் என்ன என்பதை விவரித்துக் காட்டும் இந்த நூலின் முதல் வடிவம் 1898-ல் உருவானது. மிகச் சில பிற்சேர்க்கைகளுடன் 1973ல் மறுபடி பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாவது – 'Indian Evidence Act' 1872-ல் வகுக்கப்பட்ட கோர்ட் சாட்சியங்களைப் பற்றிய சட்டம். நீதிமன்றத்தில் என்னென்ன சாட்சியங்களை சமர்ப்பிக்கலாம், எவையெல்லாம் சாட்சியங்களாக ஏற்கப்பட மாட்டாதவை, எவையெல்லாம் சாட்சிகளாக சமர்ப்பிக்கப்படக்கூடாதவை என்பன போன்றவற்றை விவரிப்பது இது.

இந்த மூன்று நூல்கள் தவிர காவல் துறையின் பொதுவான பொறுப்பு, கடமைகள், நடைமுறையில் செய்ய வேண்டியவை போன்றவற்றை விவரிக்கும் 'Indian Police Act' என்றொரு புத்தகமும் உண்டு. இது 1861ல் உருவானது.

கொஞ்சம் கூர்ந்து நோக்கினால், 1857-ல் நடைபெற்ற சிப்பாய் கலகத்தை அடுத்து பிரிட்டிஷ் அரசு மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் ஒரு அம்சமாகத்தான் இந்தச் சட்டங்கள் அனைத்தும் அடுத்தடுத்து அமலாக்கப்பட்டன என்பது புரியும்.

சிப்பாய் கலகம் நடந்து நூற்று நாற்பது ஆண்டுகள் முடியப் போகிற சூழ்நிலையில், அன்று இயற்றப்பட்ட அதே சட்டங்கள்தான் சுதந்திர இந்தியாவிலும் இன்னும் அமுலில் இருக்கின்றன: காலமும் சூழ்நிலையும் பெரிதும் மாறி விட்ட நிலையில் பழைய சட்டங்களே இன்றும் நம்மை ஆண்டு கொண்டிருப்பதால் நேரிடும் சிக்கல்கள் அநேகம்.

போலீஸின்

விரிவாகச் சொன்னால் புரியும்!

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், காவல் துறை என்பது, காவல்காரர்களை மட்டும் கொண்ட அமைப்பாக இருந்தது. சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர், சூப்பரின்டென்டெண்ட், ஐ.ஜி. என்று உயர் அடுக்குப் பதவிகள் ஏதும் இல்லை. ஒவ்வொரு குறிப்பிட்ட பகுதிக்கும் ஒரே ஒரு உயர் அதிகாரி இருப்பார். ஆனால் காவல்காரர்களின் 'ஆட்சி'தான் அப்போது!

நெறிப்படுத்தத் தகுந்த மேலதிகாரிகள் இல்லாத சூழ்நிலையில் பொதுமக்களிடம் முரட்டுத்தனமாக, மூர்க்கமாக நடந்து கொண்ட அன்றைய காவலர்களை மனத்தில் கொண்டு எழுதப்பட்டவை இந்தச் சட்டங்கள்.

இந்தச் சட்டங்களின் அடிநாதம் என்ன தெரியுமா? 'காவல் துறையினர் சொல்லும் சாட்சியங்களை அப்படியே நம்பி விடக் கூடாது' என்பதுதான்!

அதிர்ச்சியாக இருக்கிறதா? உண்மை அதுதான்!

சாட்சியங்களை நம்பாதது ஏன்?

உதாரணம் சொல்ல, மறுபடி 1949-ல் என் பயிற்சிக் காலத்துக்கே போக வேண்டி இருக்கிறது.

காகிநாடாவில் எனக்கு கான்ஸ்டபிள் ட்ரெயினிங்.

ஒருநாள் இரவு ரோந்துக்காகக் கிளம்பிய சப்-இன்ஸ்பெக்டர், என்னையும் அழைத்துக் கொண்டார். இரண்டு பேரும் ஆளுக்கு ஒரு சைக்கிளில் புறப்பட்டோம்.

நள்ளிரவு இரண்டு மணி. ஊர் அடங்கிக் கிடக்க, ஒரு குறுகிய சந்திலிருந்து, கறுப்புப் போர்வை போர்த்திய உருவம் ஒன்று தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்தது.

சந்தேகப்பட்டு, கூப்பிட்டோம். உடனே அவன் ஓடத் தொடங்கினான். துரத்திப் பிடித்து விசாரித்ததில், திருடியதாக ஒப்புக் கொண்டு, தன்னிடமிருந்த பையைக் கவிழ்த்தான். நகைகள்!

கொள்ளையடித்த தெரு, வீடு போன்ற விவரங்களைச் சொன்னான்.

அவன் குறிப்பிட்ட வீட்டுக்குச் சென்று, தூங்கிக் கொண்டிருந்தவர்களைத் தட்டி எழுப்பி விவரம் சொன்னதும் மிரண்டு விட்டார்கள்.

அவனிடமிருந்து நாங்கள் கைப்பற்றிய நகைகளை (சில வெள்ளிப் பாத்திரங்களும்)ப் பார்த்து, அவை தங்களுடையதுதான் என்று உறுதிபடக் கூறினார்கள்.

அவனை இழுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு வந்தோம். சப்-இன்ஸ்பெக்டர், வழக்கைப் பதிவு செய்தார். கூடவே, எஃப்.ஐ.ஆர். எப்படி எழுதுவதென்று எனக்குக் காட்டினார்.

களவாடப்பட்ட அந்த நகைகளின் சொந்தக்காரரிடமிருந்து ஒரு புகார் எழுதி வாங்கி, அவனை அன்று லாக்கப்பில் வைத்தோம். மறுநாள் ரிமாண்டுக்கு அனுப்பி, பதினைந்து நாள் கஸ்டடியில் வைக்கப்பட்டான்.

இது ஒருபுறம் இருக்கட்டும். ஒரு வழக்கை விசாரிக்கும் போலீஸ் ஆபீசர் அவ்வழக்கு சம்பந்தமாகத் தமக்குக் கிடைக்கும் அத்தனை விவரங்களையும் கேஸ் டைரியில் எழுத வேண்டும். கேஸ் டைரி என்பது ஒரு குற்றத்தை விசாரிக்கும் போலீஸ் ஆபீசர் செல்லும் பாதையையும், அவர் சேகரிக்கும் சாட்சியங்களையும் எந்தக் காலத்திலும் துல்லியமாக விவரிப்பது.

மேற்படி வழக்கில் அதை விசாரித்த சப்-இன்ஸ்பெக்டர், கேஸ் டைரி எழுத உட்கார்ந்த போது, நானும் பக்கத்தில் உட்கார்ந்து கவனித்தேன். வழக்கை விரிவாக எழுதிக் கொண்டே வந்தவர், சாட்சிகளாக இரண்டு பெயர்களையும் போட்டு, நாங்கள் அந்தத் திருடனைப் பிடித்து கேட்ட போது அவர்கள் பக்கத்தில் இருந்ததாகவும், அந்த நகைகளையும் பாத்திரங்களையும் நாங்கள் அந்தத் திருடன் வசமிருந்து கைப்பற்றியபோது அவர்களும் உடனிருந்து பார்த்ததாகவும் எழுதினார்.

இதைக் கவனித்த எனக்கு அதிர்ச்சியாகவும், வியப்பாகவும் இருந்தது.

"ஏன் இப்படி? நாம் இந்தக் குற்றவாளியைப் பிடிக்கும் போது நள்ளிரவு இரண்டு மணி. நம் இருவரைத் தவிர அந்த ஏரியாவிலேயே வேறு யாருடைய நடமாட்டமும் இல்லை. எங்கிருந்து இந்த இரண்டு சாட்சிகளும் முளைத்தார்கள்?" என்று கேட்டேன்.

"அது அப்படித்தான் சார். நாம் சொல்லும் சாட்சி கோர்ட்டில் செல்லாது. ஒரு மூன்றாவது மனிதனின் சாட்சி இல்லாத பட்சத்தில் கேஸ் படுத்து விடும்" என்றார்.

சட்ட நூல்களில், எந்த வழக்குக்கும் ஒரு மூன்றாவது மனிதனின் சாட்சி இருந்துதான் ஆக வேண்டும் என்று விதி இல்லை.

ஆனால் அந்த சப்-இன்ஸ்பெக்டரின் கருத்து வேறு மாதிரியாக இருந்தது. "நடைமுறை வேறு; சட்டம் வேறு" என்றார்.

இது என்னை மிகவும் பாதித்தது. யாரோ ஒரு முகம் தெரியாத மூன்றாம் மனிதனின் சாட்சி ஏற்கப்படுமாம்... ஆனால் சட்டத்தை நிலைநாட்டுவதற்காகவே இருக்கும் போலீஸ்காரரின் சாட்சி ஏற்கப்படாதாம்!

காலம் காலமாக எதற்கெடுத்தாலும் சாட்சியை வைத்துத்தான் செய்ய வேண்டும் என்ற ஒரு எதிர்பார்ப்பு போலீஸாரின் மனத்தில் புகுத்தப்பட்டு விட்டதால், இல்லாத சாட்சிகளையும் இருப்பதாகச் சொல்லும் மனப்பான்மையும் வளர்ந்து விட்டது. உண்மையை நிலைநாட்டுவதற்கு இவ்வாறு செய்தாலும் பரவாயில்லை என்று சொல்லிக் கொண்டு இதை நியாயப்படுத்தும் மனப்பான்மையும் கூடவே உருவாகி விட்டது. போலீஸ்காரர் நேர்மையானவராயிருந்தால் சரி. பாதகமில்லை. நேர்மையற்றவராக இருந்தால் இந்த மனப்பான்மையும், வழக்குமும் பெருங்கேடு விளைவிக்கின்றன. இதுதான் இன்றைய நிலை!

நடைமுறையில் சிக்கல் விளைவிக்கும் மற்றொரு விஷயத்துக்கும் இப்பொழுது வருகிறேன். போலீஸ் விசாரணையின் போது

சி. வி. நரசிம்மன்

சாட்சி சொல்லும் விஷயங்களை விரிவாக ஒரு வாக்குமூலம் மாதிரி எழுதி வைக்க வேண்டும் என்பது சட்டம். ஆனால் அந்த வாக்குமூலத்தின் அடியில் அந்த சாட்சியின் கையெழுத்தை போலீஸார் வாங்கக் கூடாது என்றும் அதே சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்திலும் நேர்மையான போலீஸாரும் சாட்சிகளும் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் இப்படியும் அப்படியுமாக இருப்பவர்கள் இந்த வாக்குமூலத்தை உண்மைக்கு மாறாக எழுதி விட்டால் அதை அந்த சாட்சி தெரிந்து கொள்ள வாய்ப்பே இல்லை. கோர்ட் விசாரணையின் போது அவர் உண்மையைச் சொன்னால் கூட, அவர் போலீஸாரின் முன் கொடுத்த வாக்குமூலத்திற்கு முரணாக இருக்கிறது என்று அவரை நிராகரித்து விடுவார்கள். கடைசியில் உண்மை அடிபட்டுப் போய் விடும்.

இதைத் தவிர, போலீஸார் முன்கொடுக்கப் படும் எந்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் (confession) கோர்ட்டில் சமர்ப்பிக்கக் கூடாது என்றே சட்டத்தில் திட்டவட்டமாக எழுதியிருக்கிறது.

இந்த நிலை மாற வேண்டும்; காலத்துக் கேற்ப, புதிய சட்டங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் தேசிய போலீஸ் கமிஷனின் பிரதான பரிந்துரை. போலீஸின் வாக்குமூலத்தை அப்படியே வேதவாக்காக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது கூட இல்லை. முற்றிலும் நிராகரிக்காமலாவது இருக்கலாமல்லவா?

எதற்குச் சொல்கிறேனென்றால் – காவல் துறையினரையே ஒட்டுமொத்தமாக நம்பாத நீதிமன்றச் சட்டங்கள் மாற்றப்பட வேண்டும். நெடுநாட்களாக போலீஸ் தரப்பில் இதைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், இன்னமும் பலன் இல்லாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் – வழக்கறிஞர்களின் எதிர்ப்பு!

நூறு ஆண்டுகளுக்கு மேலாகப் பழக்கப் பட்டு விட்ட விசாரணை முறைகளும் சாட்சியங்களை அலசி எடை போடும் வழிகளும் வழக்கறிஞர்களுக்கு சுலபமான பாதைகளாகி விட்டன. போலீஸாரின் கேஸ் டைரியில் எழுதப்பட்டுள்ள வாக்குமூலங்களில் காணப்படும் சில சிறிய முரண்பாடுகளை வைத்தே விவாதங்களை ஓட்டிச் செல்ல முடிகிறது. போலீஸ்காரரின் முன் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களை – அவை முழுவதும் உண்மையாக இருந்தால் கூட – ஒட்டுமொத்தமாக அப்படியே ஒதுக்கி விட முடிகிறது, சட்டத்தைக் காரணமாகக் காட்டியே! வாதங்களைத் தொடுக்க மிக வசதியாக இருக்கும் இந்த நிலையை இழக்க வழக்கறிஞர்களில் பெரும்பாலோர் தயாராக இல்லை!

இந்த நிலை மாறவேண்டும். போலீஸை சாதாரணமாகவும், இயல்பாகவும் மதித்து, நம்பும் நிலை உருவாக வேண்டும்.

இதில் ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால், இப்படி ஒரு சட்டத்தை நமக்கு அளித்துப் போன பிரிட்டிஷாரின் சொந்த நாட்டிலேயே அவர்கள் போலீஸை நம்பாமல் இருக்கும் இதுமாதிரி சட்டங்கள் கிடையாது!

அங்கே நீதிமன்றங்களில் போலீஸாரின் வாக்குமூலங்கள் இயல்பாக மதிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

வழக்கறிஞர்களின் ஒத்துழைப்புடன், மேலே குறிப்பிட்ட சட்டங்கள் மாற்றப்படுமானால் நமது காவல் துறை, சிறப்பாக, தன்னம்பிக்கையுடன், நேர்மையாக இயங்க ஆரம்பித்து விடும் என்பதில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு!

(அடுத்த வாரம்)

'சுருக்-நறுக்' போட்டி முடிவு – 16

ஒய்வு என்பது....

● இடையறாத வேலைகளுக்கு இடையே கிடைக்கும் முந்திரிப் பருப்பின் சுகம்.

– *எஸ். லக்ஷ்மிகாந்தன், சேலம்-4.*

● ஈஸிசேரில் முடக்கப்படும் எரிமலை.

– *ஆர். திலகவதி, சென்னை – 38.*

● உடலும் உள்ளமும் சேர்ந்து மூளையிடம் கேட்கும் யாசகம்.

– *ஜி. ஜெயலட்சுமி, மதுரை-10.*

● உழைப்பாளிக்கு ஊறுகாய்; சோம்பேறிக்குச் சோறு!

– *எம். மஹாலக்ஷ்மி, கல்கத்தா-8.*

● இதயத் துடிப்பான 'லப்' 'டப்'புக்கு இடையே வரும், அதிக நீளமில்லாத ஆனால் அவசியமான இடைவெளி போன்றது.

– *எஸ். வசந்தகுமார், பாண்டிச்சேரி-8.*

● ஏ.ஸி. அறை பி.ஸி. கணினிகள் மூளையைக் கூழாக்கிய நிலையில், வீட்டுத் தோட்டத்தில் வியர்வை சிந்தும் சுகானுபவம்.

– *சி. நாச்சிமுத்து, ஈரோடு-9.*

● மனச்சர்வாதிகாரம் உடைக்கப்பட்டு உடல் தன்னாட்சி பெற்றதன் வெளிப்பாடு.

– *எஸ். சரவணன், தஞ்சாவூர்-1.*

● சற்றே கவைத்தபின் துப்ப வேண்டிய 'சூயிங்கம்'!

– *எஸ். குருமூர்த்தி, திருச்சி-21.*

● பிரபலங்கள் சுயசரிதம் எழுதவும் பிறர், கூப்பன் எடுத்துக் கொண்டு பால் வாங்கவும் புறப்படும் 'காலம்.

– *என். சிவன், நாகர்கோவில்-1.*

(ஒவ்வொன்றும் ரூ 50 பரிசு பெறுகிறது)

மகிழ்ச்சி-யாக இருப்பது எப்படி?

திருமணம் ஆனவர்களைவிட, திருமணம் ஆகாதவர்கள்தான் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று யாராவது நினைத்துக் கொண்டிருந்தால், சாரி - உங்கள் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதுதான்!

அமெரிக்காவில் மிஷிகனில் இருக்கிறது ஹோப் கல்லூரி. அங்கே மன இயல் துறைப் பேராசிரியராக இருப்பவர் டேவிட் மையர்ஸ். 45 நாடுகளில் சர்வே செய்த பிறகு, அமெரிக்க சைக்கலாஜிகல் அசோசியேஷனில் பேசினார் மையர்ஸ்:

"மகிழ்ச்சியாய் இருப்பது அவரவர் குணத்தைப் பொறுத்தது. சூழ்நிலையைப் பொறுத்தது அல்ல.

"கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரை, நிறையப் பணம் இருந்துவிட்டால் சந்தோஷமாக இருக்கலாம் என்று நினைக்கிறார்கள். ஏன், மேற்கத்திய நாடுகளில் எல்லாம் அப்படித்தான் நம்புகிறார்கள். ஆனால், பணத்தால் சந்தோஷத்தை வாங்க முடியாது என்பதை மட்டும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இருந்தாலும், இன்னும் கொஞ்சம் பணம் இருந்தால் இன்னும் கொஞ்சம் சந்தோஷமாக இருக்கலாமே என்று நினைக்கிறார்கள். கொஞ்சம் பணம் கிடைத்தவுடன், அடடா, இன்னும் கொஞ்சம் கூடக் கிடைத்தால், இன்னும் அதிக மகிழ்ச்சியாக இருக்கலாமே என்று நினைக்கிறார்கள். இப்படி, கொஞ்சம் கொஞ்சமாக, ஆசை கூடிக் கொண்டே போகிறது!"

யார் சந்தோஷமாக இருக்கிறார்கள்?

"அநேகமாக எல்லோருமே!" என்பது மையர்ஸின் பதில். அதாவது பத்துக்கு ஒன்பது பேர். இது மன இயல் நிபுணர்களின் கணிப்புக்கும், எதிர்பார்ப்புக்கும் மேல்!"

எக்கச்சக்கமாகச் சம்பளம் தரும் உத்தியோகம் கிடைப்பதோ, லாட்டரிச் சீட்டில் பரிசு விழுவதோ, அந்தச் சமயத்தில் கிடைக்கிற தாற் காலிக மகிழ்ச்சிதான். கொஞ்ச நாளைக்குப் பிறகு அந்தச் சந்தோஷம் மெல்லத் தேய்ந்து மறைந்தே போய்விடுகிறது. அதனால்தான் சினிமா ஸ்டார்களோ, பெரிய தொழிலதிபர்களோ, மற்றவர்களை விட ஒன்றும் எப்போதுமே மகிழ்ச்சியாய் இருப்ப தில்லையாம்.

ஏமாற்றங்கள், திடீர் விபத்துகள் எல்லாம் கூட நாளாக ஆக, மனசிலிருந்து மெதுவாக மறைந்து போய்விடுகின்றன. மகிழ்ச்சி பிறகு பழைய படி வந்துவிடுகிறது.

ஜாலியாக இருக்கிற பிரம்மச்சாரிகள், பணத்தை வாரி இறைக்கிற கோடீசுவரர்கள் என்று யாருமே, எல்லா சமயத்திலுமே மகிழ்ச்சியாய் இருப்பதில்லை என்பது மையர்ஸின் முடிவு.

சுய கௌரவம், சுய கட்டுப்பாடு, பாஸிடிவ் திங்கிங், கலகலப்பாகப் பழகும் சுபாவம் - இவை இருந்துவிட்டால் எல்லோருமே சந்தோஷமாக இருக்க முடியுமாம்.

சந்தோஷமாக இருக்க மையர்ஸ் தரும் சில டிப்ஸ்:

- வாழ்க்கையில் சின்னச் சின்ன விஷயங்களையும் ரசித்து மகிழக் கற்றுக் கொள்ளுங்கள்.
- செய்ய வேண்டிய வேலையை, ஒவ்வொரு நாளைக்கு இவ்வளவு என்று பிரித்துக் கொண்டு, செய்து முடித்து விடுங்கள்.
- உடற்பயிற்சி செய்வதால் நம் மூளையிலுள்ள சில கெமி



கல்கள் தூண்டப்பட்டு மகிழ்ச்சி விளையும்.
- நண்பர்களிடமும், குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடமும் நெருக்கமான உறவு வைத்துக் கொள்ளுங்கள்.
- ஆத்ம சந்தோஷத்துக்கு, பக்கத்தில் இருக்கிற சர்ச், மசூதி அல்லது கோயிலுக்குப் போய் வாருங்கள்.
- கடைசியாக, மகிழ்ச்சியாக இருப்பது போல நினைத்துக் கொண்டு நடியுங்கள். அதுகூட உங்களை மகிழ்ச்சியாக இருக்க வைக்கும்!

— சித்தார்த்

(செய்தி தகவல்: இன்டர்நேஷனல், ஹெரால்ட் ட்ரிப்யூன்)



வசதியானவர்கள் மட்டும்தான் வானவீதியில் ஊர்வலம் வரமுடியுமா என்ன? இதோ... யாருமற்ற அநாதைக் குழந்தைகளும், ஏழைக் குழந்தைகளும் ஸ்பாஸ்டிக் (மூளை பாதிக்கப்பட்டதால் உடல் இயக்கம் கட்டுப்பட்ட) மற்றும் உடல் ஊனமுற்ற குழந்தைகளும் கூட சென்ற வாரம் மேகக் கூட்டங்களுக்குள் புகுந்து போகும் சுகத்தை ஒரு மணி நேரம் அனுபவித்தார்கள். அதுவும் போயிங் விமானத்தில்! பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனமும் யூனிசெஃப் நிறுவனமும் இணைந்து நடத்திய இந்த வான ஊர்வல நிகழ்ச்சியில் பங்கு பெற்ற அனுபவத்தை சில ஸ்பாஸ்டிக் குழந்தைகள் (Spastic Society of Tamilnadu) தங்கள் கைப்படவே விவரிக்கிறார்கள்...



படங்கள் : ஸ்ரீஹரி

"மேகத்தில் புகுந்து பார்த்தோம்!"



இன்னும் கொஞ்சம் மேலே போய் வானத்தை கையால தொட்டுடலாம்னு தோணிச்சு. வானத்துக்கு இன்னமே போயிடுவோமான்னும் தோணிச்சு

அர்ச்சனா

ரொம்ப ஜாலியாக இருந்தது கீழே கட்டிடம் குட்டியாக தெரிஞ்சது.

N. கார்த்திகா

மறைகின்ற சூரியனுடன் பயணம் செய்த அனுபவம் புதுமையாக இருந்தது.

P. Sathya

ஏரோப்ளேன்ல ரொம்ப சந்தோஷமாயிருந்திச்சு மேகத்தில புகுந்து பார்த்தோம்


V. ஆனந்த்

பாலம்

இப்பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது. - ஆர்.)

●● எனது மூதாதையர் முருகேச அய்யர் சிவகெங்கைப் பகுதியிலிருந்து 1800 – 1810 காலப் பகுதியில் இலங்கை யாழ்ப்பாணம் வந்தவர். என் தாயார், கும்பகோணம், மாமாங்கம் மேலைத் தெரு, ஸ்ரீநிவாச அய்யர் வம்சாவழியில் வந்தவர். ஸ்ரீநிவாச அய்யர் இலங்கைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்வந்தார். தற்போது இந்தியாவில் தொடர்புகளை ஏற்படுத்த விரும்புகிறேன். எமது வேர்களிலிருந்து கிளைத்த புதிய உறவுகளின் தொடர்பு கிட்டும் என நம்புகிறேன்.

— S.S. Umakanthan,
I.C.R.C.
P.O. Box 2100, Colombo,
SRILANKA.



●● ரசாயன கலவை சேர்க்காமல் திருநீறு, குங்குமம் தயார் செய்து இலவசமாக வழங்க விரும்புகிறேன். தெய்வீக முறைப்படி தயார் செய்யும் விவரம் அறிந்தவர்கள் எழுதவும்.

– எம். பிச்சை பிள்ளை,
காஞ்சி மீன் பண்ணை,
அனந்தகுடி, பந்தூர் (அ),
மயிலாடுதுறை (வ) - 609 203.

●● மறு பதிப்புக்காக எழுத்தாளர் விந்தன் அவர்களுடைய "முல்லைக் கொடியாள்," "மகிழம்பூ" ஆகிய நூல்கள் தேவை. தக்க சன்மானம் உண்டு.

– கோ. சூரியமூர்த்தி,
23, தாந்தோணியம்மன் கோவில்
விரிவாக்கம், வில்லிவாக்கம்,
சென்னை – 600 049.

●● பல ஆண்டுகளுக்கு முன் அறநிலையத் துறை ஆணையாளராக இருந்த உத்தண்டராமபிள்ளையின் மகன் அய்யாசாமி என்பவரையோ அல்லது அவரது நேர் வாரிசுகளையோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

– வே. நடராஜன்,
252, 10 B குறுக்குத் தெரு,
நடராஜபுரம் தெற்கு,
மெடிகல் காலேஜ் ரோடு,
தஞ்சை - 613 007.

●● Manufacture of Detergent Powders, Cleaners and Textile Chemicals என்ற புத்தகம் தேவை. ஆசிரியர் : S.B. Srivatsava and Rajendra Kumar Gupta. சன்மானம் தரப்படும்.

– எம். விஜயகுமார்,
36.69 தங்கமாபுரிபட்டணம்,
மேட்டூர் அணை R.S. 2. - 636 402.

●● பிளாஸ்டிக் மற்றும் குரோஷாவில் செய்யும் பொம்மைகள், கூடைகள் ஏழைப் பெண்களுக்கு இலவசமாகக் கற்றுத் தர விரும்புகிறேன். தபால் மூலமும் சொல்லித் தருவேன்.

– மல்லிகா கிருஷ்ணராஜ்,
4-B, ராஜாத் தெரு, திருவாரூர் - 610 002.

●● You and your IQ என்ற புத்தகம் தேவை. Bright Careers Institute வெளியீடு. செலவு ஏற்கிறேன்.

– டி.வி.எஸ். பாலு,
சித்தமல்லி (அ),
மன்னார்குடி (வ) - 614 705.

●● என் எட்டு வயது மகனுக்கு 'ரோலர் ஸ்கேட்டிங்' கற்றுக் கொள்ள ஆசை. எதிர் காலத்தில் இப் பகுதியில் 'ஸ்கேட்டிங்' பள்ளியும் ஆரம்பிக்கலாம். ஆர்வமுள்ள நண்பர்கள் தேவை.

– ஜி. ஜோசப் ராஜா,
சப்-போஸ்ட் மாஸ்டர்,
கோவலம் - 603 112.

●● "இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்" என்ற தலைப்பில் ஆய்வு செய்து வருகிறேன். சுதந்திரத்துக்காகப் போராடிய, மதநல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய முஸ்லிம் அன்பர்கள் பற்றிய தகவல்கள் தேவை.

– ஆர். முருகன்,
92, தூபன் குமாரசாமி தெரு,
நாமக்கல் – 637 001.

●● An Introduction to Probability Theory with Statistical Applications என்ற புத்தகம் தேவை. Michel A. Goldbery எழுதியது. விலைக்கு பெற்றுக் கொள்கிறேன்.

– ஜி. சந்தோஷ்,
233, விநாயக நகர், தேவசந்திரா,
கிருஷ்ணராஜபுரம்,
பெங்களூர் - 560 036.



தனித்தனி அறைகளுடன் தயாராகிறது சேப்பாக்!

நுழைந்தவுடன் கண்களில் படுபவை தரையில் கிடத்தப்பட்டிருக்கும் ராட்சச இரும்புக் கம்பங்கள்தான்! பெட்டி பெட்டியாக செராமிக் ஓடுகள். சுறுசுறுப்பாகக் கட்டுமானப் பணி.

சென்னை சேப்பாக்கம் மைதானம் உலகக் கோப்பைப் பந்தயத்துக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது. மார்ச் 11 அன்று, நான்காவது கால் இறுதிச் சுற்றுப் போட்டி இங்கு நடக்கவுள்ளது. 'ஏ' பிரிவில் உள்ள இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், ஸ்ரீலங்கா, ஆஸ்திரேலியா, ஜிம்பாப்வே, கென்யா ஆகிய அணிகளுடன் மோத வேண்டும். இந்தப் பிரிவில் இரண்டாம் இடம் பிடிக்கும் அணியும் 'பி' பிரிவில் மூன்றாவதாக வரும் அணியும்தான் சென்னையில் மோத உள்ளன. இந்திய அணி இடம் பெறுமா என்பது இப்போதைக்கு மில்லியன் டாலர் கேள்வி என்றாலும் நல்லதையே நம்புவோம்.

இது ஒருபுறமிருக்க, ஐம்பது மில்லியன் (அதாவது ஐந்து கோடி) ரூபாய் விஷயமொன்று சேப்பாக் மைதானத்தில் நிறுவப்பட இருக்கிறது. ஒளிவெள்ள விளக்குகள் (ஃப்ளட்-லைட்ஸ்)!

"முதல் முறையாக இந்த உலகக் கோப்பைப் பந்தயத்தில்தான் சென்னையில் பின் மாலைப் பொழுதிலும் ஆட்டம் தொடரப் போகிறது. அதற்காக நிறுவப்படும் விளக்குகள் இனி நிரந்தரமாக மைதானத்துக்குப் பெருமை சேர்க்கும்" என்கிறார் தமிழ்நாடு கிரிக்கெட் அசோசியேஷன் செயலாளர் அஷோக் கும்பத்.

இதற்கான கம்பங்கள் ஜெர்மனியிலிருந்தும், ஒளியமைப்புகள் ஸ்விட்சர்லாந்திலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. கிராம்ப்டன் கிரீவ்ஸ் நிறுவனம்தான் இதை அமைக்கும் பொறுப்பை ஏற்றிருக்கிறதாம்.

நாம் பார்த்தபோது மைதானம் பசுமைக் கம்பளமாகக் காட்சியளித்தது. புல்வெளியை ஒருவர் சரியாக்கிக் கொண்டிருக்க, வேறு சிலர் நீர் பாய்ச்ச, மற்றும் சிலர் புற்கள் குறைந்த பகுதியில் அவற்றை நட்டுக் கொண்டிருந்தனர்.

"தயவுசெய்து மைதானத்தின் புல்வெளிப் பகுதி சீராக்கப்பட்டு வருகிறது என்று எழுதுங்கள். சிலர் 'பிட்ச்'சை 'சரிசெய்து வருவதாக' எண்ணி, எழுதி நேரெதிரான ஓர் அர்த்தத்தைக் கொண்டு வந்து விடுகிறார்கள்" என்று எச்சரிக்கை செய்தார் அஷோக் கும்பத். போட்டிக்கான அத்தனை டிக்கெட்டுகளும் விற்று விடும் என்று கருதுகிறார் இவர்.

செயற்கைக் கோள் டி.வி.க்களும் போட்டி போட்டுக் கொண்டு உலகக் கோப்பை பந்தயங்களை ஒளிபரப்பவிருக்கும் போதிலுமா...?

"ஸ்டேடியத்தின் கொள்ளளவான 45,000 இருக்கைகளுக்கான டிக்கெட்டுகள் அத்தனையும் விற்றுப் போகும்" என்கிறார் அஷோக் உறுதியான நம்பிக்கையுடன்.

இந்த சேப்பாக் மைதான ஸ்டேடியத்தில் நமக்கென்று ஒரு தனியறை - அதுவும் ஏ.ஸி., டி.வி செட், தொலைபேசி போன்ற அனைத்து வசதிகளும் அமைந்தது...! அந்த அறையின் கண்ணாடித் தடுப்பு வழியே கிரிக்கெட் பந்தயத்தை நேரடியாகப் பார்த்தால் எப்படி இருக்கும்? நினைத்தாலே இனிக்கும் இந்தக் கனவு நனவாக இருக்கிறது!

இதுபோன்ற எட்டு சின்ன அறைகள் உருவாகியிருக்கின்றன. இப்படி ஓர் அறையைப் பத்து வருடங்களுக்குக் குத்தகை எடுத்துக் கொள்ளலாம். (உடன்பிறவா சகோதரிகள் போட்டி

போடாமல் இருந்தால்?) குத்தகைத் தொகையான பதினைந்து லட்சத்தைக் கொடுக்கத் தனியார் நிறுவனங்கள் தயாராம். அப்புறம் அவர்கள் தயவு யார் மீதெல்லாம் விழுகிறதோ அவர்களெல்லாம் அங்கே அமர்ந்து பார்க்கலாம்!

நாம இப்படி - அவங்க எப்படி?

ஹைதராபாத் - லால்பகதூர் ஸ்டேடியம்:
சென்ற அக்டோபரில் இங்கு நடைபெற்ற மதுவிலக்கு ஆதரவு ஊர்வலமும், சமீபத்தில் பொதுமக்கள் பார்வைக்காக என்.டி. ராமராவின் உடல் இங்கு வைக்கப்பட்டதுமான நிகழ்ச்சிகளால் மைதானம் அடைந்த சேதம் சரிசெய்யப்பட்டிருக்கிறது. தொடக்கத்தில் சில தாற்காலிக ஸ்டாண்டுகளை நிறுவ இருந்தனர். நாக்பூர் அசம்பாவிதத்துக்குப் பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டனர்.

நாக்பூர் - விதர்பா ஸ்டேடியம்:
இரு மாதங்களுக்கு முன்தான் அந்த சோகம் நடந்தது. கைப்பிடிச் சுவர் இடிந்ததன் விளைவாக பதின்மூன்று பேர் உயிரிழந்தனர். பம்பாயின் வாங்கடே ஸ்டேடியத்தை வடிவமைத்த கட்டடக் கலை நிபுணரின் உதவியுடன் பாதுகாப்பு ஏற்பாடுகள் வேகமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

மொகாலி - பஞ்சாப் கிரிக்கெட் சங்க விளையாட்டு மைதானம்:
கலவரத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக ஒவ்வொரு இருக்கைக்கும் எண்கள் குறிக்கப்பட்டு, டிக்கெட்டிலும் எண்கள் குறிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன. தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் வேறு தேவைப்படுகிறது. இந்தக் காரணங்களினால் 40,000 பேர் அமரக் கூடிய இந்த மைதானத்தில் 35,000 பேர்தான் அனுமதிக்கப்பட வேண்டிய நிலை. இரண்டாவது அரையிறுதிச் சுற்று நடக்கவிருக்கும் இந்த மைதானத்தில் முதன் முதலாக ராட்சத ஒளிவிளக்குகள் (சென்னையைப் போலவே) பொருத்தப்படவிருக்கின்றன.

விசாகப்பட்டினம் - இந்திரா பிரியதர்சினி ஸ்டேடியம்:
26 லட்சம் ரூபாயில் மைதானம் சீரமைக்கப்பட்டு வருகிறது. வர்ணனையாளர்களுக்கு உதவும் வகையில் புதிதாக ஆறு தடுப்புகள் தயாராகி விட்டன. ஐந்து விடுதலைப் புலிகள் இந்த நகரின் மத்திய சிறைச்சாலையில் இருப்பதால் மைதானத்துக்கு அதிகப்படி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

- ஜி.எஸ்.எஸ்.

படம் : சாரி

சிறு கதைத் தேர்வுக் கூப்பன்

கடந்த 4.2.96 கல்கி இதழ் துவங்கி இந்த (25.2.96) இதழ் முடிய பிரசுரமாகியுள்ள சிறுகதைகளில் (எம்.டி. வாசுதேவன் நாயர் சிறுகதை நீங்கலாக) நீங்கள் எந்தச் சிறுகதையைச் சிறந்ததாகக் கருதுகிறீர்கள்?

சிறுகதையின் தலைப்பு, ஆசிரியர் பெயர் மற்றும் நீங்கள் அதைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தையும் இரண்டே வரிகளில் சுருக்கமாக எழுதியனுப்புங்கள்.

ஒவ்வொரு மாதமும் நீங்கள் இப்படித் தேர்ந்தெடுக்கும் சிறுகதையை எழுதிய ஆசிரியருக்குச் சிறப்புப் பரிசு! அதற்கான காரணத்தை இரண்டே வரிகளில் எழுதினாலும் கச்சிதமாக எழுதும் ஒரு வாசகருக்கும் சிறப்புப் பரிசு!

இம்மாதக் கூப்பன் அனுப்பக் கடைசித் தேதி : 7.3.96

பிப்ரவரி மாத சிறுகதைத் தேர்வுக் கூப்பன்

சிறந்த சிறுகதை : ....

....

கதாசிரியர் பெயர் : ....

தேர்ந்தெடுக்கக் காரணம் : ....

....

....

....

என் பெயர் : ....

முகவரி : ....

....


....

புதியதோர் உலகம்


செய்வோம்

பசுமையாக, செழுமையாக,

வளமையாக, முழுமையாக.







ஆம்! பாரதியின் கனவை நனவாக்குவோம்!

புதியதோர் உலகிலே, மதுரைக்கு மிக அருகிலே, பசுமையான நிலம் மற்றும் வீட்டுமனையையும் (10,000 ச.அடி) செழுமையான தேக்கு பண்ணையையும், வளமையான காய்கறி பழ தோட்டங்களையும், முழுமையான பண்ணை இல்லத்தையும் உங்களுக்கே சொந்தம் ஆக்கிடுவீர்!

உங்கள் முதலீடு	நீங்கள் பெறுவது	20 ஆண்டு-களில் மதிப்பு
ரூ.25,000/- அல்லது ரூ.250/- வீதம் 100 சுலப தவணைகள்	10,000 ச.அடி நிலம் 24 தேக்கு மரங்கள் 2 ஒட்டு மா 2 வீரிய தென்னை காய்கறி தோட்டம்	ரூ.10 லட்சம் ரூ.24 லட்சம் ரூ.50,000 ரூ.50,000

20 ஆண்டுகளில் ரூ.35 லட்சம் மதிப்பு சொத்துக்கள்

• 10,000 ச.அடி நிலம் உடன் உங்கள் பெயரில் பதிவு செய்யப் படுகிறது • அற்புத தொழில்நுட்ப விந்தை • சிறந்த நீர்வளம், மண்வளம், பயிர் வளம் • சில ஆண்டுகளில் உங்கள் நிலம் மதுரை நகரின் மையமாகி விடும்.

ரூ.100/- வீதம் 15 மாதங்கள் செலுத்தி லட்சம் பெறும் திட்டங்களும் உள்ளன

ESWAR AGRI

Eswar Grow-Tek Ltd.

287, West Masi Street, Madurai 625 001.

Ph: 540305, 540843 Fax: 0452-540305 Tlx: 0445-478-AGRI-IN

The Agri People

PROFAD:ESWAR:167:95

தினகரன் ஓராண்டு சிறையில் இருப்பாரா?

• ஓராண்டு முழுதும்..?



● பூமலை மணியன், தி. அகரம்

? காஃபிபோஸா சட்டத்தின்படி கைதாகியுள்ள தினகரன் ஓராண்டுவரை சிறையில் அடைக்கப்படுவாரா...?

! ஓராண்டுவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட வேண்டிய அவசியமின்றிச் சிறையில் வைக்கலாம். எல்லாம் தேர்தலையும் 'கூட்டணி'யையும் பொறுத்து அமையும்!

● செங்குன்றம் பாலசுப்ரமணியன், சென்னை - 52.

? ஐயா! ஹவாலா விவகாரம் படிச்சதிலிருந்து ஒரே குழப்பம்... வர்ற தேர்தலில் யாருக்கு வோட்டுப் போடுவது?

! பேசாமல் நீங்களே நின்று விடுங்களேன்!

● ஜே. ரஜினி ராம்கி, மயிலாடுதுறை

? ஒரே மாதிரியான நிகழ்ச்சிகள் டீ.வி.யில் இடம் பெறுகின்றனவே...?

! தினசரி காலை 6-7 மணி சென்னை தூர்தர்ஷன் இசை நிகழ்ச்சிகள் வழங்குகிறதே... அதைப் பாருங்கள், நல்ல வெரைட்டி இருக்கிறது. ஆலாபனை, நிரவல் குறைத்து பளிச்சென்று சில உருப்படிகளைப் பூக்க வைக்கிறார்கள். ஆனால் காலை நேர டென்ஷனிடையே உட்கார்ந்து முழுமையாக ரசிக்க முடியவில்லை. பாட்டையாவது, அப்படி இப்படி வேலையாகப் போனாலும் காதால் கேட்கலாம்... சில தினங்களில் ஒளிபரப்பாகும் நாட்டிய நிகழ்ச்சியை சுத்தமாகப் பார்க்கவே முடிவதில்லை. ஒளிபரப்பு நேரத்தை மாற்றினால் நல்லது.

● மல்லிகை மன்னன், மதுரை - 14.

? 'அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை! நிரந்தர நண்பர்களும் இல்லை' என்று புரட்சித் தலைவி தத்துவம் பேசியிருக்கிறாரே...?

! வேறென்ன? நிரந்தர முதல்வராக விளங்கும் ஆசைதான் அப்படி பேச வைக்கிறது!

● ஜான் சாமுவேல், பம்பாய் - 19.

? 'மூன்றாவது கண்' தொடர் எழுதும் சி.வி. நரசிம்மன் இதற்கு முன் ஐ.நா சபையில் துணைச் செயலாளர் பதவி வகித்த சி.வி. நரசிம்மன்- இருவரும் ஒரே நபரா?

! இல்லையில்லை! இதோ- இருவரது படங்கள்:



• ஐநா சபை அலுவலர் சி.வி.என்



• ஐ.பி.எஸ். அதிகாரி சி.வி.என்

● க.க.வே. சித்திரவேலு, கருப்பம்புலம்

? தாக்குதலில் காயம் அடைந்த தி.மு.க. வக்கீலுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் மருத்துவ செலவுத் தொகையைத் தமிழக அரசு வழங்கி விட்டதே...?

! ஏதோ மனமுவந்து கொடுத்த மாதிரி சொல்றீங்க! நீதிமன்ற ஆணைக்கு உட்பட்டுத்தான் கொடுத்திருக்கு!

● லஷ்மி பாலகிருஷ்ணன், மதுரை - 9.

? அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவ மனைகளுடன் போட்டியிடும் வகையில் செயல்பட வேண்டும் என்று சுகாதாரத் துறைச் செயலர் கூறியிருக்கிறாரே...? அவ்வாறு செயல்படும் என்று நினைக்கிறீர்களா?

! மனம் வைத்தால், பகட்டிலும் பண வருவிலும் போட்டி போடாமல் தரத்திலும் சேவையிலும் போட்டியிட முடியும்.

● கி. ராமதாஸ், சென்னை - 33.

? ஜெயின் - ஹவாலா ஊழலை விஞ்சி நிற்கும் பீஹார் கால்நடை பராமரிப்பு ஊழலைப் பற்றி...?

! தீவனம் வாங்குவதற்காகச் 'செலவு' செய்யப்பட்டுள்ள அந்தத் தொகையைப் பார்க்க ஹவாலா என்ன... வெறும் புண்ணாக்கு!

நீங்கள் கேட்டவை - தராசு

● ராமாபுரம் சந்துரு, சென்னை-59.

? சூப்பர் ஹிட் போட்டி நிகழ்ச்சியைத் (4/2/96) தொகுத்தளித்த நடிகை ஷர்மிளா பெருமையாகக் கூறினார்: "இளைஞர்கள் குறைந்தது மூன்று பெண்களையாவது 'சைட்' அடிக்க வேண்டும்; குறைந்தபட்சம் இருவரையாவது காதலிக்க வேண்டும்; முடிந்தால் ஒருத்தியைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்..." இப்படிப் பேசுவது பெண்களின் வளர்ச்சியா? வீழ்ச்சியா?

! இத்தகைய டீ.வி. உளறல்களை வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அளவு கோலாக்க முடியாது! ஒரு முரண்பாடு கவனித்தீர்களா...? ஷர்மிளா என்றால் நாணமுடையவள் என்று பொருள்!

● எச். மோகன், மன்னார்குடி.

? வீணை சிட்டிபாபு...?

! அவருடையது ஒரு த்ரீ-இன்-ஒன் வாத்தியம். வீணை போல் தொடங்கும். திடீரென்று ஜலதரங்கம் கேட்கும். உச்சஸ்தாயிக்குப் போனால் புல்லாங்குழலாகிவிடும்! சம்பிரதாயமாக வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்த வீணையை ஜனரஞ்சகத்துக்கு உட்படுத்திய முதல் கலைஞர் அவர். மறைவு மாபெரும் இழப்பு.

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை-84.

? சென்னை மாநகர்- மகா நகர் அந்தஸ்து பெறுகின்றதே... இதனால் பொது மக்களுக்குக் கிடைக்கக் கூடிய கூடுதல் வசதிகள் எவை?


! கூடுதல் கொசு; குறைவாகக் குடிநீர்!

● கே. அனிதா, கோவை.

? இந்தியாவில் வர்க்கப் போராட்டம் ஜாதிப் போராட்டமாக மாறிக் கொண்டே வருவது எதனால்...? ❒

! ஏழைமையை ஒழிப்போம் என்றார்கள். முடியவில்லை. தங்கள் இயலாமையை மூடி மறைக்க ஜாதி வேற்றுமையைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். அரசியல் வாதிகளில் எவராது ஜாதியை ஒழிப்பேன் என்று சொல்கிறாரா பாருங்கள்..!

* தத்துவ மொழி!



● தி. சுபாகரன், உடுமலைப் பேட்டை.

? தோசை பதினாலு வகைப் படுமா? பெங்களூர் ஜெயநகர் 'தோசா கேம்ப்'பில் கிடைக்கிறதாமே...?

! பதினாலென்ன, பதினாலாயிரம் தான் இருக்கட்டுமே... மல்லிகைப்பூ போன்ற மிருதுவான, சிறிதும் எண்ணெய்ப்பசையற்ற, வெண்பட்டுப் போல் மெலிதான, அதி ருசியான திருநெல்வேலி கல்தோசைக்கு ஈடாகுமா?!



* த்ரீ-இன்-ஒன்

● ஆர். சுவர்ண சுபா, திருநெல்வேலி - 11.

? பேர்பாக்ஸ், போஃபர்ஸ், ஹர்ஷத் மேத்தா, என்ரான், டெலிகாம், ஹவாலா... இப்படி ஒன்றன்பின் ஒன்றாக ஊழல் வெடித்தும் அரசியல்வாதிகள் எந்த தைரியத்தில் தேர்தலை எதிர்நோக்குகிறார்கள்?

! கொள்ளையரில் எந்தக் கொள்ளைக்காரன் தேவலாமென்று பார்த்துத்தானே மக்கள் வோட்டுப் போடுவார்கள் என்கிற தைரியத்தில் தான்.

● சி. பூங்கோதை, சென்னை-78.

? டீ.வி., ப்ரிட்ஜ் வாங்க, பி.எஃப்.பிலிருந்து கடன் பெறலாம் என மத்திய அரசு ஊழியர்களுக்கு அரசு விதிமுறை தளர்த்தப்பட்டுள்ளதே?


! 'பிழைக்கத் தெரியாத' அரசு ஊழியர்கள் தானே அப்படி கடன் வாங்குவார்கள்... அப்படி எத்தனை பேர் இருந்துவிடப் போகிறார்கள்!

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.

? இங்கிலாந்து இளவரசர் சார்லஸ், டயானா விவாகரத்துக்காக ரூ.115 கோடி கொடுக்கத் தயாராக இருக்கிறாரே...?

! பணம் மட்டுமில்லை; கோட்டை, கொத்தளம், இன்னும் பல வசதிகள், சலுகைகள் அள்ளித் தரத் தயாராய் இருக்கிறார் சார்லஸ். ஆனால், டயானா அரசு முறைப் பட்டம் தரப்படா விட்டால் விவாகரத்துக்கு உட்படத் தயாராயில்லையே!

> ❒ ரூ. 25 பரிசு பெறுபவர்:
> **கே. அனிதா,**
> **Q/59, கோவை புதூர் அஞ்சல்,**
> **கோவை — 641 042.**



கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறார்!


கண் புற உலகத்தைப் பார்க்கிறது,
மனம் கண்ணைப் பார்க்கிறது,
அந்தராத்மா மனத்தைப் பார்க்கிறது.
இது உண்மை; மாற்ற முடியாத உண்மை
மனசாட்சிக்கு ஏற்ப நாங்கள் சுத்தமான
ருசிகரமான இனிப்பு மற்றும் கார
வகைகளைத் தயாரிக்கிறோம்.

திருமண வைபவங்களுக்கு, பருப்புத் தேங்காய்,
அதிரசம், திரட்டுப்பால், சீர் முறுக்கு ஆகியவற்றை
தயாரித்துக் கொடுக்கிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு,
சென்னை - 600 020. போன் : 4915662/4914213

எழுச்சித் தலைவியின்
புரட்சிப் பிறந்த நாள்!



இந்திரகுமாரி குடத்தைப் புளிபோட்டு பளபளப்பாகத் தேய்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன இப்படி நீங்களே..." என்று எறும்பார் கேட்கவும், "அம்மாவுக்குப் பிறந்தநாள் வருதே, மறந்துட்டியா? பால்குடம் எடுக்கணுமே" என்று பதில் கிடைத்தது.

"வருஷா வருஷம் பால்குடம்தானா? ஹூம், அலுத்துப் போச்சு! ஏதாவது புதுமையா செய்யக் கூடாதோ" என்றார் எறும்பார்.

"பாலை விட்டா இங்க கள்ளச் சாராயம்தான் தண்ணியா பெருக்கு எடுத்து ஓடுது" என்ற இந்திரகுமாரி, அவசர அவசரமாக அசடு வழிந்தார். "ஹி ஹி..."

"பெண் தொண்டர்கள், ஆளுக்கு ஒரு குடமாக 48 குடங்களுடன் ரயில் ஏறி, கிருஷ்ணா நதி தீரத்தில் குடங்களை நிரப்பிக் கொண்டு திரும்புங்க. அம்மாவையும் உடன் பிறவா சகோதரியையும் சேர்த்து வைச்சு அபிஷேகம் பண்ணினா, புதுமையா இருக்கும். "கிருஷ்ணா நதி நீர் தந்த புனிதத் தாயே"னு பானர் வைக்கலாம்; போஸ்டர் ஒட்டலாம்..."

இந்திர குமாரி சந்தோஷத்தில் குடத்தை வைத்துக் கொண்டு கூத்தாட, எறும்பார் அங்கிருந்து ஒரு தாவு தாவி எஸ்.டி.எஸ். தோளில் வந்து உட்கார்ந்தார்.

"திருச்சி மாநாட்டிலே தார்ரோட்டிலே ஏர் ஓட்டி உழுது காட்டினீங்க; அம்மா பிறந்த நாளுக்கு என்ன ஸ்டண்ட் அடிக்கப்போறீங்க?"

"பிரமாத ஐடியா வைச்சிருக்கேன்; ஹெலிகாப்டர்ல தொங்கிக்கிட்டே வந்து இறங்கப் போறேன்" என்றார் எஸ்.டி.எஸ்.

"ஐயே! அரதப் பழசான ஐடியா" என்றார் எறும்பார். "மேலும் போயஸ் தோட்டத்து மொட்டை மாடியில் ஹெலிகாப்டர் இறங்காது!"


"அதானே" என்ற எஸ்.டி.எஸ். கவலையில் ஆழ்ந்தார்.

"வருத்தப்படாதீங்க. ஒரு நல்ல ஐடியா சொல்லித்தரேன். கார்ப்பரேஷன் ரோடு ரோலர் ஒண்ணை அழகா பூக்களால் அலங்கரிச்சு போயஸ் கார்டன் ரோடிலே ஓட்டிக்கிட்டுப் போங்க!"

"ஆகா பிரமாத ஐடியா!" என்று எகிறினார் எஸ்.டி.எஸ். "அரசியல் எதிர்ப்புக்களை அம்மா இப்படித்தான் நசுக்குவாங்கன்னு சிம்பாலிக்கா காட்டலாம்!"

ரோட் இன்ஜினுக்காக அவர் மாநகராட்சிக்கு ஃபோன் போடும்போது, எறும்பார் அங்கிருந்து நழுவி சுலோசனா சம்பத் காரியாலயத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

சுலோசனா வேப்பிலை டிரெஸ் உடுத்தி, மேஜை நாற்காலிகளை ஒரு பக்கமாக ஒதுக்கி விட்டுத் தரையில் புரண்டு கொண்டிருந்தார்.



''நீயும் உன் மனைவியும் அரசியல் கட்சிகள் மாதிரியா... எப்படி?''

''எங்களுக்குள் நிரந்தரப் பகையும் இல்லை; நிரந்தர உறவும் இல்லை!''

—ஞா. ஞானமூர்த்தி

எறும்பாரைப் பார்த்ததும், "கொஞ்சம் இரு. பிராக்டிஸ் பண்ணிக்கிட்டிருக்கேன், இன்னும் ஒரு பத்து அங்கப் பிரதட்சிணம் செய்துட்டு வந்துடறேன்" என்றார்.

"போர், போர்" என்றார் எறும்பார். "இந்த வேப்பிலை டிரெஸ்ஸில் அம்மா முன்னால் போய் நின்றால் அடிக்க வருவாங்க. ஏதாவது புதுசா பண்ணிக் காட்ட வேண்டாமா?" என்றதும் கலோசனாவுக்கு உற்சாகம் போய் விட்டது. தலையில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

"சென்னைக்கு சர்க்கஸ் வந்திருக்கு தெரியுமில்லையா? அங்கே போய் கோமாளி டிரெஸ் போட்டு குட்டிக் கரணம் அடிக்கத் தெரிஞ்சுக்குங்க. அப்பத்தான் உங்களைப் பார்த்து அம்மாவும் சசிகலாவும் சிரிப்பா சிரிப்பாங்க."

"ஆகா! புரட்சித் தலைவியின் சிரிப்பை விட பெரிய பாக்கியம் ஏது? இதோ, இப்பவே புறப்படறேன்" என்று வாசலுக்கு ஓடி காரில் ஏறினார் கலோசனா.

நீலகிரீஸ் மானேஜரை வரச் சொல்லி விட்டு அவருடன் ஆழ்ந்த ஆலோசனையில் இருந்தார் நெடுஞ்செழியன். அவர் எதிரே கோட்டை மாடலில் அட்டை பொம்மை.

"வா! வா! எப்படி இருக்கு பாரு! அம்மா பர்த்டேக்கு இந்த மாடலில் ஒரு கேக் தயாரிக்க ஆர்டர் கொடுத்துக்கிட்டிருக்கேன்" என்றார் நெடுஞ்செழியன்.

"ஐயய்யோ" என்றார் எறும்பார். "கேக்கை வெட்ட வேண்டாமா? கோட்டையை வெட்டுவது அச்சானியமாகி விடுமே! அவங்க தேர்தலில் கைப்பற்ற வேண்டிய கோட்டையாச்சே!"

"அட ஆமா! இதை நான் யோசிக்கவே இல்லையே" என்ற நெடுஞ்செழியன், நீலகிரீஸ் மானேஜரைப் பார்த்து "அப்படின்னா அறிவாலயம் மாடல்ல கேக் செய்துடுங்க. அதை வெட்டிச் சிதைத்து, மென்று விழுங்கி, ஏப்பம் விடும்போது அம்மாவுக்கு ரொம்ப திருப்தியா இருக்கும்" என்றார்.

"இது ஐடியா!" என்று பாராட்டிய எறும்பார், அங்கிருந்து கண்ணப்பன் வீட்டுக்குத் தாவினார். அவர் நாற்காலியில் கயிறுகட்டி, தோளில் மாட்டி 'டர் டர்' என்று இழுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

''என்ன! தேர் இழுக்க பிராக்டிஸ் நடக்கறதாக்கும்'' என்றார் எறும்பார்.

"ஆமா, அம்மாவோட பிறந்தநாள் வருதே" என்றார் கண்ணப்பன்.

"ஹூம் இதெல்லாம் பழைய ஐடியா. தெய்வத்தைக் காப்பாத்தறதே அம்மாவுடைய இந்த ஆட்சிதான்ற போது..."

"என்ன பண்ணணும்கிறே?"

"சிம்ம வாகனத்துல அம்மா, ரிஷப வாகனத்துல அம்மா, கருட வாகனத்துல அம்மா, மயில் வாகனத்துல அம்மா மூஷிக வாகனத்துல அம்மான்னு செட்அப் பண்ணி திருவிழா ஊர்வலம் நடத்திட வேண்டியதுதானே...'' என்று யோசனை சொல்லிவிட்டு மதுசூதனன் வீட்டுக்குள் புயலாக நுழைந்தார் எறும்பார்.

"இதப்பாருங்க! கட் அவுட் வைக்கிறது காலில் விழறது எல்லாம் அலுப்பான விஷயங்கள். அம்மாவோட பாதுகைகளை திருடிக்கிட்டாவது வந்து 48 அடி உயர மேடையில் வைச்சு, மலர் அலங்காரம் பண்ணி, ஸ்பாட் லைட் போட்டு, எல்லாரும் அதுக்கு முன்னால் சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணுங்க" என்று எறும்பார் சொல்ல, மதுசூதன் பலமாகத் தலையாட்டினார்.

ஆதிராஜாராம் தம் பங்குக்கு என்ன செய்யலாம் என்று கத்தி தீட்டுவது போல் புத்தியைத் தீட்டிக் கொண்டிருந்தார். எறும்பார் அங்கே போய்ச் சேர்ந்து பரிதாபப்பட்டு ஐடியா கொடுத்தார்:

"இருச்சில கண்காட்சியை அம்மா எப்படி ரசிச்சாங்க கவனிச்சீங்களா? அதுமாதிரி இப்ப பிறந்த நாளுக்கும் ஒரு கண்காட்சி ஏற்பாடு பண்ணுங்க. ஜனநாயகத்துல எந்தெந்த விதங்கள்ல அரசியல் எதிரிகளைத் தாக்கலாம்னு விளக்கும் கண்காட்சி... குண்டாந்தடி, துப்பாக்கி, பட்டாக்கத்தி..."

ஆதிராஜாராமின் முகம் மலர்ந்தது. "சைக்கிள் செயின், ஆட்டோ ரிக்ஷா, பிச்சுவா" என்று அடுக்கியவாறே, வெட்டரிவாளை 'விசுக் விசுக்'கென்று உற்சாகத்துடன் வீச ஆரம்பிக்கவும், அவரது ஜாமீன் ரத்து செய்யப்படவும் சரியாக இருக்கவே, எறும்பார் தப்பிப் பிழைத்து வந்து விட்டார்!

தனியார் விமானத்துக்குத் துண்டச் செலவு ஏன்?



ஜெயலலிதா சசிகலா நெருக்கத்தின் மர்மம்; ஹரிபாஸ்கருக்குப் பதவி நீட்டிப்புக் கொடுக்கும் ரகசியம்; தியானேஸ்வரன், இன்பசாகரன் மீது கரிசனம்...

– இதற்கெல்லாம் நமக்குக் காரணம் தெரியாதது போலவே தமிழக அரசின் விமானத்தைப் பயன்படுத்தாமல் ஜெயலலிதா அவ்வப்போது தனியார் விமானத்தைப் பயன்படுத்தும் காரணமும் நமக்குப் புரியவில்லை!

சமீபத்தில் தில்லியில் நடந்த நதிநீர் பற்றிய கூட்டத்துக்கு தமானியா விமானத்தில் சென்ற முதல்வர், தில்லியிலிருந்து திருச்சிக்கும் தமானியாவிலேயே சென்றார். திருச்சியிலிருந்து சென்னை வரும் போது மட்டும்தான் தமிழக அரசின் விமானத்தைப் பயன்படுத்தினார்.

பழைய விமான நிலைய வளாகத்தில், முக்கியஸ்தர்களுக்கான பகுதியில் நிற்கின்றன தமிழக அரசால் நான்கைந்து மாதங்களுக்கு முன்னர் வாங்கப்பட்ட செஸ்னா – சைடேஷன் ஐந்து ரக விமானமும் பெல் – 420 ரக ஹெலிகாப்டரும். செஸ்னா விமானத்தின் விலை சரியாக 19,85,12,667 ரூபாய். ஹெலிகாப்டர் எட்டு கோடி ரூபாய். விமானத்தில் பதினெட்டுப் பேரும் ஹெலிகாப்டரில் எட்டுப் பேரும் வசதியாகப் பயணம் செய்யலாம். இரண்டும் தலைமைச் செயலாளரின் நேரடிப் பொறுப்பில் இருக்கின்றன.

இந்த ஹெலிகாப்டரும் விமானமும் வந்த பிறகு முதல்வர் பல இடங்களுக்குச் சென்று வந்துள்ளார். முதலில் பயன்படுத்தியது திருநெல்வேலியில் ஜாதிக் கலவரங்கள் சம்பந்தமாக விசிட் செய்தது; பிறகு காவிரி சம்பந்தமாக தில்லிக்குச் சென்றது; பட்டுக்கோட்டையில் வாடும் பயிர்களைப் பார்வையிட்டது; வேலூரில் சத்துணவு ஊழியர்கள் மாநாடு; நெல்லூரில் சுப்பிராமி ரெட்டியின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கச் சென்றது; மன்னார்குடியில் சசிகலாவின் அம்மா இறந்த போது விசிட் செய்தது.

இவ்வளவு இடங்களுக்குச் சென்றவர் தமது தில்லிப் பயணத்துக்காகக் கிட்டத்தட்ட பதினைந்து லட்ச ரூபாய் அரசுப் பணத்தைச் செலவழித்துத் (தில்லி சென்று வரும் பயணத்துக்கு மட்டும்) தனியார் விமானத்தைப் பயன்படுத்தியது ஏன்?

இங்கே இன்னொரு முக்கிய விஷயம் என்னவென்றால் என்.இ.பி.சி. மற்றும் தமானியா (இப்போது இரண்டும் ஒரே நிறுவனம்) விமானங்கள் ஜெயலலிதா கேட்கும்போதெல்லாம் கிடைக்கக்கூடிய அளவில் இருக்கின்றன என்பதுதான்! அதுவும் எப்படி? முன்கூட்டியே பதிவுசெய்த பயணிகள் இருப்பினும் அவர்களைத் தவிக்கவிட்டுவிட்டு - அவர்கள் பயணத் திட்டத்தையே ரத்து செய்துவிட்டு, அந்த விமானம் முதல்வருக்காகக் காத்திருக்கிறது என்றால் முதல்வருக்கு அத்தனை கடமைப்பட்டிருக்கிறதா அந்தக் கம்பெனி என்கிற கேள்வியும் எழுகிறது!

இப்போது எதிர்க்கட்சிகளின் கவலை என்னவென்றால், இந்த அரசு விமானத்தையும் ஹெலிகாப்டரையும், முழுக்க முழுக்கத் தேர்தல் பிரசாரத்துக்கு முதல்வர் பயன்படுத்துவாரே, அதை எப்படித் தடுப்பது என்பதுதான்! காரணம், பெரும்பாலான சின்ன நகரங்களில் கூட ஹெலிபேட் அமைக்கப்பட இருக்கின்றன என்கிற தகவல்தான்!

— ப்ரியன்

உண்மையிலேயே புரட்சித் தலைவிதான்!

♦ தலையங்கம் மடேர் என்று நெற்றிப் பொட்டில் அறைந்தாற் போல் இருந்தது. கடலையைத் தின்று விட்டு அதன் காகிதத்தைக் கசக்கி எறிவது போல், அரசியல்வாதிகளின் அராஜகங்களை அம்பலப்படுத்தும் பத்திரிகைச் செய்திகளைப் படித்து விட்டு 'யார் எப்படிப் போனால் நமக்கென்ன' என்பது போல், தான் தோன்றித்தனமான மக்கள் இருக்கும் வரை, அரசியல் தலைவர்கள் ஊழல் கடலில் மிதந்து கொண்டுதான் இருப்பார்கள். மக்கள் என்றுதான் விழித்துக் கொள்ளப் போகிறார்களோ! காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

தேவராயனேரி, மு. கருணாநிதி.

♦ மாதம் ஒரு ரூபாய் சம்பளத்தில் தமது வாழ்க்கைச் செலவு போக ஒன்றரை கோடி சொத்து சேர்க்க முடியும் என்று காட்டியிருக்கும் நமது முதலமைச்சர் உண்மையிலேயே புரட்சித் தலைவிதான்! மாதம் ஆறாயிரம் சம்பளம் வாங்கும் என் போன்றோர் மாதாமாதம் கடன் வாங்கியல்லவா காலம் கழிக்கிறோம்!

கோட்டையூர், கலைவாணர்தாசன்.

ரூ. 20 பரிசு பெறும் கடிதம்

♦ இரண்டு தலையங்கங்களும் இரட்டைக் குழல் துப்பாக்கியிலிருந்து சீறிப் பாய்ந்த குண்டுகளைப் போல இருந்தன. அதிலும் 'திருச்சி தீர்மானங்கள்' தலையங்கம் அருமை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பதில் தவறேதுமில்லை. அதே சமயத்தில், தேச ஒற்றுமைக்கு உலைவைக்கும் பிரிவினைக் கொள்கையைக் கையில் எடுப்பது என்பது கொள்ளிக் கட்டையை எடுத்து நம் முதுகை நாமே சொறிந்து கொள்வது போன்றது. இதற்கு எடுத்துக் காட்டு, சிதறிப் போன சோவியத் யூனியனின் இன்றைய நிலைமை வறுமையும், விபச்சாரமும் என்பது. எனவே பிரிவினைக் கொள்கையை கையில் எடுப்பதைத் தலைவர்கள் தவிர்க்க வேண்டும்.

தஞ்சாவூர்–5, வனிதாரவி.

♦ வை.கோ. தமது பேட்டியில் ஊழலை எதிர்க்கும் தகுதி தங்கள் கட்சிக்கு மட்டுமே உள்ளது என்றும், தேர்தலுக்கு முன் அரசியல்வாதிகள் சொத்துக் கணக்கை அளித்து விட வேண்டும் என்றும் கூறியுள்ளார். பினாமி என்ற சொல் ஒன்று இருப்பதையே அவர் மறந்து விட்டாரா?

நாகை சந்திரா, நாகப்பட்டினம்.

♦ பேட்டியில் 'வை.கோ.' சொன்னதெல்லாம் சரியென்று ஒப்புக் கொண்டாலும் கூட, இறுதியாக "அவர்களிடம் (தி.மு.க., அ.தி.மு.க.) வலியச் சென்று ஆதரவு கேட்க மாட்டோம்" என்ற இடம் தான் இடிக்கிறது. அவர்களாகவே வந்து ஆதரவு கொடுத்தால் ஏற்றுக் கொள்ளத் தடையில்லை என்றுதானே பொருள்!

ஈரோடு–9, சி. நாச்சிமுத்து.

♦ 'சுஜாதா பக்கம்', தங்கத்தைவிட அரிய பொக்கிஷம். தமிழ் சினிமா பற்றிய சிறந்த அலசலைப் படித்து மகிழ்ந்தோம். அடுத்த வாரத்திற்காகக் காத்திருக்கிறோம்.

திருச்சி–17, உஷா முத்துராமன்.

♦ சட்டத்தின் முன்பு அனைவரும் சமம் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டது அமெரிக்க விசாரணைக்குழு. ஆனால் இந்தியாவில்?

திருச்சி–20, எஸ்.வி.பார்த்தசாரதி.

♦ "மாற்றம்" சிறுகதை படித்தேன். கல்லுக்குள் ஈரமாக, பிச்சையைக் கல்யாணி மாற்றியது சிறப்பாக இருந்தது!

மதுரை–9, வி.எஸ். அனிதா.

♦ பணம் குவிக்கும் பதவியா I.A.S.? கவர் ஸ்டோரி– இன்றைய நிலையை அப்படியே பிரதிபலித்தது.

திருவண்ணாமலை, என். சண்முகம்.

♦ Conferred I.A.S. என்ற வகையில் வரும் அதிகாரிகள் நன்றிக் கடன்பட்டவர்களாகி விடுகின்றனர். அரசியல்வாதிகளுக்கு வாலாகச் செயல்பட ஆரம்பித்தபின் ஆசை வராமல் என்ன செய்யும்?

திருநெல்வேலி – 11, எஸ்.ஆர். ஸ்வாமி.

♦ "அட, நம்ம பயல்" என்று கல்கியைப் பெருமிதப்பட வைத்த கே.வி. ஆனந்தின் பேட்டி தாமதமாக வந்தாலும் அவரது தன்மையை அழகாக அறிமுகப்படுத்தியுள்ளது.

காட்டூர், எஸ். அருள்மொழி.

♦ எனது பேட்டியை வெளியிட்டமைக்கு நன்றி. அதில் அழகு, கவர்ச்சி ஆகியவற்றுக்கு இடையேயுள்ள வேறுபாடு பற்றிப் பேசும் போது, அவற்றைப் படம்பிடிப்பதில் ஓர் ஒளிப்பதிவாளருக்கு இருக்கக்கூடிய சவால்களை விளக்கினேன். அவ்விதத்தில் தனிப்பட்ட முறையில் யாரையும் ஒப்பு நோக்கிப் பேசுவது என் நோக்கம் அல்ல. அப்படியொரு தொனி பிரசுரத்தில் வெளிப்பட்டிருப்பது எனக்கு மிகுந்த சங்கடத்தை அளிக்கிறது; எனது கருத்தைப் பிரதிபலிப்பதாக அது அமையவில்லை.

சென்னை – 20, கே.வி. ஆனந்த்.




Photo courtesy : SPAN

'சுருக்-நறுக்' என்றொரு சொல்லோவியம் – 20

சினிமா என்பது....

இந்த நூற்றாண்டின் அதிஅற்புத விஞ்ஞான சாதனை இது. ஆனால் எத்தனை மோசமாக உபயோகமாகிறது!

உங்கள் கற்பனையில் சினிமா பற்றி ஒரு 'சுருக்-நறுக்' சொல்லோவியம் தீட்டுங்கள். பிரசுரமாகும் ஒவ்வொரு சொல்லோவியத்துக்கும் ரூ. 50 பரிசு. இன்னும் ஆறே வாரங்கள்தான் இந்தப் போட்டி தொடரப் போகிறது. உங்களில் அதிக முறை பரிசு வென்று, மெகா பரிசான ஒரு ஜோடி டைடன் கைக்கடிகாரங்களைத் தட்டிச் செல்லப் போகிற அதிர்ஷ்டசாலி யார்?

முடிவு தேதி : 4.3.96

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

– ஆர்.

சினிமா என்பது..

....

....

....

....

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

திருட்டு

எம்.எல்.ஏ. மோகனசுந்தரம் டெலிபோனை சுழற்ற, மறுமுனையிலிருந்து தெனாவட்டான குரலில் 'ஹலோ' வந்தது.

"யாருய்யா பேசறது?" – எம்.எல்.ஏ. விரட்டினார்.

அந்த அதட்டலில் மிரண்டு போன மறுமுனை "கான்ஸ்டபிள் கணேசனுங்க" என்று தடுமாறியது.

"ஹவுஸ் ஆபீசர் யாருய்யா?"

"இன்ஸ்பெக்டர் இருதயம் சார்."

"அவுரு சீட்லே இல்லையா?"

"இல்லை சார். ஒரு கேஸ் விஷயமா அவசரமா வெளியே போயிருக்கார் சார்."

"ஆமா கிழிச்சீங்க... சரி, நான் ஏரியா எம்.எல்.ஏ. பேசறேன். இன்ஸ்பெக்டர் வந்த உடனே எனக்கு போன் பண்ணச் சொல்லுய்யா."

"ஆவட்டுங்க சார்" என்று மறுமுனை முற்றாக அடிபணிந்தது. காலை உதைத்து சல்யூட் கூட அடித்த மாதிரி இருந்தது.

ஒரு அரை மணி நேரம் கழித்து போன் மணி ஒலிக்க எம்.எல்.ஏ.வின் பத்து வயதுப் பெண் "இன்ஸ்பெக்டர் இருதயம் நய்னா" என்று சொல்லி கார்ட்லெஸை தந்தை கையில் கொடுத்தது.

"எங்கேய்யா போயிட்டீங்க, ஒரு அவசரத்துக்குக் கூப்பிட்டாக் கூட அகப்பட மாட்டீங்கறீங்களே?"

"ஒரு தற்கொலை கேஸ் சார். ஸ்பாட்டுக்குப் போயிருந்தேன்."

"ஆமா, இந்த மாதிரி போலீஸ் இருந்துச்சுன்னா ஜனங்க தற்கொலைதான் பண்ணிக்கணும். சேச்சே! வரவர நம்ம ஏரியாவிலே அராஜகம் அதிகரிச்சுத்தான் வருது."

"ஏன் சார், என்ன ஆச்சு சார்..." இன்ஸ்பெக்டர் பதறிப் படபடத்த விதம் எம்.எல்.ஏக்கு திருப்தியூட்ட, உதட்டில் சின்னதாய் ஒரு புன்னகை. இரண்டு கால்களையும் தூக்கி சோபாவில் வைத்து சம்மணமிட்டுச் சாய்ந்து கொண்டார்.

"பின்னே என்ன சொல்றது. நான் யாரு... இந்தத் தொகுதி எம்.எல்.ஏ....

என் வீட்டிலேயே ஒரு திருட்டு நடக்குதுன்னா, சாதாரண ஜனங்கள் பாடு எப்படி இருக்கும்...?"

"நம்ம வீட்டிலேயே திருட்டுங்களா... எப்படி சார், எப்போது சார்?" இன்ஸ்பெக்டர் தவித்தார். பாவம், அவர் கண்ணுக்கு முன்னால் ஈரப்பசையே இல்லாத வனாந்திரம் ஒன்று விரிந்திருக்க வேண்டும்....

"ஆமாம், களவுதான். என் வீட்டிலேயே தான். கேளுங்க. நம்ம வீட்டுக் கொல்லையிலே காய்த்திருந்தது ஒரு வாழைத்தாரு. பொள்ளாச்சியிலிருந்து என் மைத்துனர் கொண்டு வந்து நட்டது. விருப்பாச்சி வகை வாழை. ரெண்டு நாள் முடிஞ்சு தாரை அறுத்திடலாம்னு என் பொண்ணும் மனைவியும் ஆசையா காத்துக்கிட்டிருந்தாங்க. இன்னைக்கி

முத்துராஜன்

காலையே பார்த்தா முழுத் தாரும் அபேஸ். நீங்க எம்.எல்.ஏவா இருந்து என்ன பிரயோஜனம்னு அவங்க ரெண்டு பேருமா சேர்ந்து என்னைச் சாடறாங்க!"




"சாரி சார்."

"பாருங்க இருதயம். ஒரு வாழைத்தாரு போனதை நான் பெரிசு பண்ணறதா நினைக்காதீங்க. வாழைத்தாரு ஆகட்டும், வைர அட்டிகை ஆகட்டும் குற்றம் குற்றம் தானே. சட்டப்படி நடவடிக்கை எடுத்துத் தண்டனை வாங்கித் தர வேண்டியது என் போன்றவங்க கடமை இல்லையா?"

"கரெக்டா சொன்னீங்க சார். நியாயமான பேச்சு. இதோ நானே அங்கே வர்றேன் சார். குற்றவாளியை நிச்சயமா பிடிச்சிடலாம் சார்."

அடுத்தகணம் இன்ஸ்பெக்டர் இருதயத்தின் ஸ்டேஷன் பம்பரமாய் சுழலத் தொடங்கியது.



இரண்டு கான்ஸ்டபிள்கள் சகிதம் இன்ஸ்பெக்டர் ஸ்தலத்துக்கு விரைந்து தடயம் சேகரித்தார்.

பிறகு, ஏரியாவிலுள்ள இந்த ரக சில்லரைத் திருடர்களின் பட்டியல் அலசப்பட்டது. ஸ்டேஷனுக்கு பரிச்சயமான மாமூல் உளவாளிகள் விசாரிக்கப்பட்டனர்.

அப்புறம் எம்எல்ஏ. வீட்டுக்குப் பின்புறமுள்ள குடிசைப் பகுதியில் போலீஸ் படை புகுந்தது; புரட்டி எடுத்தது.

வெற்றி! திருடன் பிடிபட்டான்.

சுமார் பதினாறு வயது பரட்டைத் தலைப் பையன். பையனுடைய கன்னித் திருட்டு இது. வாழைத் தாரும் சேதமின்றி முழுமையாக மீட்கப்பட்டது.

வெற்றுடம்பும் ரத்தம் கன்றிய கன்னங்களுமாக பையனை ஜீப்பில் உட்கார வைத்து, அவன் கழுத்தில் வாழைத்தாரை மாலை போல தொங்கவிட்டு, வெற்றிப் பெருமிதத்துடன் போலீஸ் படை எம்.எல்.ஏ. வீட்டு வாசலை அடைந்த போது, உள்ளே போனில் இரைந்து கொண்டிருந்தார் எம்.எல்.ஏ.

"என்னது நம்ம லாரியைத் தடுத்து வைச்சிருக்காங்களா... காட்டிலாகாக்காரங்களா. யாரு, புதுசா வந்திருக்கானே அந்த அசிஸ்டெண்டா? பெர்மிட்படி ரெண்டு லோடுக்கு மேலே அனுமதிக்க முடியாதுங்கறானா? சுண்டைக்காய்ப் பயலுக்கு அவ்வளவு திமிரா? காடு என்ன இவன் அப்பன் வீட்டுச் சொத்துன்னு நினைக்கிறானா... ஆவட்டும் அவனை அப்புறமா பொரட்டி எடுக்கலாம்; நீ அங்கேயே இரு. நான் டி.எஃப்.ஓகிட்டே பேசிட்டு உன்னைக் கூப்பிடறேன்."

இன்ஸ்பெக்டர் இருதயம் தனக்கு முன்னால் கழுத்தில் வாழைத்தார் கனக்க ஒடுங்கிப் போய் நிற்கும் அந்தப் பையனை பரிதாபத்தோடு பார்த்தார்...



கனவு கண்ட வாழ்க்கை

ஏ.சி. டூ டயர் ரயில் பயணம். அரசாங்க ஊழியனுக்குத் தரப்படும் எல்.டி.சி சலுகை. என் சம்பள உயர்வினால், இந்த வருடம் முதல் இரண்டாம் வகுப்பு ரயில் பயணத்திலிருந்து ப்ரமோஷன்.

பம்பாயில் அக்கா வீடு. நான், மனைவி, ஐந்து வயது மகனுடன் பத்து நாள் ஓசி சாப்பாட்டுக்குக் கிளம்பி விட்டேன்.

ஏ.சியின் ஜில், என்னை விட செழுமை உடையணிந்த பயணிகள், திரைச்சீலைகள் கொஞ்சம் மிரளத்தான் வைத்தன.

எதிரே மொழு மொழு முகத்துடன் ரிஷி கபூர் ஜாடையில் ஒரு குஜராத்தி, பைஜாமா, ஜிப்பாவில் பக்கத்திலிருந்த வெண்ணெய்யுடன் பேசிக் கொண்டிருந்தான்.

வெண்ணெய் அவன் மனைவி. அந்த பொத, பொத் உடம்புவாகிலும் வசீகரம் இருந்தது. நிறமா இல்லை பணத்தின் மினுமினுப்பா?

மன்னார்குடியில் (கை) பிடித்த என் மனைவியைப் பார்த்தேன். உருளைக் கிழங்கு பக்கத்தில் வைத்த கருணைக்கிழங்கு! பெரு மூச்சு விட்டேன்.

தடக், தடக், தடக்! லய சுத்தமாய் ரயில் ஓடிக் கொண்டிருந்தது.

ஏ.சி.யின் பிரமிப்பு நீங்கி, பார்வையைத் தூரமாக்கினேன்.

அட, அது யார்? நடைபாதையை ஒட்டிய பெர்த்தில், எனக்குக் கொஞ்சம் தள்ளி.... ராதிகாதானா அது?

என் பார்வை உறுத்தலில் திரும்பியவளின் கண்களிலும் சட்டென ஒரு மலர்ச்சி.

ராதிகாவேதான்! புன்னகை செய்தாள்!

ஆறு வருடம் கழித்து சந்திக்கும் புன்னகை. இன்னமும் அதிக சதை போடாமல் அழகாய்த்தானிருந்தாள்.

கல்யாணம்? கழுத்து, காலை ஆராய்ந்தேன். ஆகவில்லை போலிருக்கிறதே?

சின்ன குரூர திருப்தி எனக்குள் பரவியது.

"மாலு டியர், காப்பி வேணுமா?"

என் பிரியத்தை சற்று உரக்கக் காண்பித்தேன்.

வியப்புடன் பார்த்தாள் என் சகதர்மிணி.

"தலைவலின்னு சொன்னியே."

அமிர்தாஞ்சனம் கைப்பையில் இருந்தது. எடுத்து நீட்டினேன்.

"நான் வேணும்னா தேச்சு விடவா நெற்றியை?" - மாலுவின் வெட்கத்தைப் புறம் தள்ளி, மிக வாஞ்சையுடன் பணி செய்தேன்.

அவ்வப்போது என் பார்வை ராதிகா பக்கம் சென்று மீண்டது.

கவனிக்கிறான்! அல்ப சந்தோஷம் என் நாடிகளில்.

"உங்களைக் கல்யாணம் செஞ்சுகண்டா, நான் கனவு காணும் வாழ்க்கை அமையாது."

முகத்திலடித்தாற் போல எப்படிச் சொன்னான்.

மைக் டைசன் குத்து விடுவதைவிட வலிமையாய் என் முகத்தைப் பதம் பார்த்த பதில். முகத்தை மட்டுமல்ல நெஞ்சையும்தான்.

தமிழ் வாத்தியாரின் மூன்றாவது பெண்ணுக்கு வந்த திமிரைப் பாரேன். எனக்கு என்ன குறைச்சல்?

ஒரே பையன். சின்ன வீடானாலும் சொந்த வீடு. அரசாங்க குமாஸ்தா. பிக்கல், பிடுங்கல் இல்லாத உறவு. கசக்கவா செய்யும்?

ஏதோ பார்க்க பளிச்சென்று இருக்கிறாளே என்று கேட்டால் 'கனவு காணும் வாழ்க்கையாம்'.

அவள் கனவில் இடி விழ! அப்போது சபித்தது வீண் போகவில்லை.

முதல் இரண்டு பெண்களின் கல்யாணச் செலவிலேயே போண்டியாகிப் போனார் இவள் அப்பா.

பணத்துக்கு எங்கே போவார் இவள் கல்யாணத்துக்கு? எவனும் வந்திருக்க மாட்டான். அப்படி வந்தவனையும் ஏதாவது சொல்லி விரட்டியிருப்பாள் ஆரம்பத்தில். இப்போது தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் கதையாய்.....

என் கற்பனை தந்த மகிழ்ச்சியில் ராதிகாவை நோக்கினேன்.

கற்பனை என்ன, பிராக்டிகலாய் பார்த்தால் நான் நினைத்ததுதான் உண்மையாகி இருக்க வேண்டும்.

இவள் எங்கே ஏ.சி. கூப்பேயில்? பட்டப் படிப்பு தந்த அரசாங்க உத்யோகமாயிருக்க வேண்டும், என்னைப் போலவே!


பிரயாணம் முழுவதும் பாசமுள்ள, நேசமுள்ள, பிரியமுள்ள பதியாக நடந்து கொள்ள ஆரம்பித்தேன்.

நடுநடுவில் சிறு புன்னகைப் பரிமாற்றம்

கிருஷ்ணா

மட்டுமே எங்களுக்குள். ராதிகாவும் பேச யத்தனிக்கவில்லை, வலிய வந்து. தாழ்வுணர்ச்சியோ?

காப்பி, சாக்லேட், சிப்ஸ், ஐஸ் கிரீம்.... என்று வேட்டு விட்டேன் பணத்தை. என் மகனுக்கும், மனைவிக்கும் எனது திமர் 'கர்ணன்'



வேடம் புதுமையாயிருந்தது. சந்தோஷமாயும் இருந்தது.

"யாருங்க அது? அப்பப்ப உங்களைப் பார்த்துச் சிரிக்கறா அந்தப் பொண்ணு?"

பெண்களாயிற்றே? ஜாக்கிரதை உணர்வு அதிகம்!

"என் கிராமம். எதிர் வீட்டுல இருந்தது அவ குடும்பம். அப்புறம் பட்டணத்துக்குப் போயிட்டாங்க. ஆறேழு வருஷமாச்சு பார்த்து."

மாலுவின் குணமே அலாதி. எப்போதும் ஏதாவது பேசிக் கொண்டிருக்க வேண்டும். திறந்த வாய் மூடாத அரட்டைக்காரி. சுவாரஸ்யமாகவும் பேசுவாள். சட்டென யாருடனும் ஒட்டிக் கொள்வாள்.

புளியஞ்சாதத்தைப் பிரிக்கும் போது கேட்டே விட்டாள்.

"அவளையும் சாப்பிடக் 'கூப்பிடுங்களேன்'."

"எதுக்கு? ஒண்ணும் வேண்டாம்."

சடாரென எழுந்தாள். நேரே ராதிகாவிடம் சென்றாள். இரண்டே நிமிடம்! சேர்ந்து விட்டார்கள். நேரே இங்கேயே கூட்டி வந்து விட்டாள்.

எனக்குத்தான் சங்கடம். கூடவே சந்தோஷம்.

"மாலும்மா, மாலு டியர்."

வாய் நிறைய அழைத்தேன்.

"நல்லா சாப்பிடணும். உனக்குப் பசி தாங்காதே." கட்டிய மனைவிக்கே உபசரிப்பு.

ராதிகா மகா அழுத்தக்காரி. புன்னகையை முகத்தில் மாட்டிக் கொண்டபடி அருகில் அமர்ந்து புளி சாதத்தை ருசித்தாள்.

வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும், உள்ளுக்குள் நிச்சயம் ஏங்குவாள்!

என் மனசுக்குள் சமாதானம்.

"உங்களுக்குக் கல்யாணமாயிடுச்சா?"

மாலு கேட்டே விட்டாள். ஆவலாய்க் காத்திருந்தேன்.

ராதிகா என்னைப் பார்த்தபடி சொன்னாள்.

"இல்லை."

"ஏன்?"

"இனிமேதான் யோசிக்கணும்."

யோசிக்கணுமா? நல்ல சமாளிப்புதான்! என் குதூகலத்தில் புளிசாதம் இரண்டு பிடி கூடவே உள்ளே போனது.

"மாலு, உன் கைமணமே அலாதி. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். நான் பாக்கியசாலி."

வேண்டுமென்றே வம்பிழுத்தேன். பழிக்குப் பழி!?

"வேலை பார்க்கறீங்களா?"

தலையசைத்தாள் ராதிகா.

"என்ன வேலை?"

"நான் கனவு கண்ட வேலை."

"கனவு?" - திடுக்கிட்டுப் பார்த்தேன்.

"சின்ன வயசிலேயிருந்தே என் கனவு அது. இருபது வயசிலே எல்லாப் பொண்ணுங்க மாதிரியும் கல்யாணம் பண்ணிண்டு, கணவனுக்கு மட்டும் சேவைன்னு இல்லாம, ஊருக்கு உபயோகப்படற மாதிரியான வேலையிலே சேரணும்னு ஆசை. சேர்ந்துட்டேன்."

ஏதோ கரடி விடுகிறாளே!

"என்ன வேலை அது?"

"கலெக்டர் வேலை. டிரெயினிங் முடிஞ்சாச்சு. மகாராஷ்டிராவிலே போஸ்டிங். என்னோடது பெட்டர் சாய்ஸ்தானே?"

ராதிகா, கேட்டபடி என்னைப் பார்த்தாள். அதே மாறாத புன்னகையுடன்.

குறுகிப்போய் தலைகுனிந்தேன் நான்.



"உங்க கூட கூட்டணியிலே இருந்த கட்சிகளை எல்லாம் கழற்றி விட்டுட்டீங்களே... ஏன்?"

"ஆட்சியில மட்டும் பங்கு கேட்டா பரவாயில்லை. ஊழல்ல கூட பங்கு வேணுமாம்!"

– எஸ். எஸ். பூங்கதிர்

"அந்த அடிதடி கேஸ்ல சம்பந்தப்பட்டவருக்கு மந்திரி பதவி கொடுத்ததனால கட்சிக்குள்ள ஏகப்பட்ட எதிர்ப்பாமே...!"

"பின்னே, கொலை கேஸு, கொள்ளை கேஸுல சம்பந்தப்பட்டவங்கள்ளாம் இருக்கும் போது அவருக்குப் போயி கொடுத்தா சும்மா விட்டுருவாங்களா...!"

- ஒட்டநத்தம் சங்கர்.



நடராஜ் எஸ்டேட்ஸ்

வழங்கும், வாரம் தோறும்



காய்கறி - திட்டம்

"சாந்திகாம்ப்ளெக்ஸ்", 3 வது மாடி, 26, ரங்கநாதன் தெரு, திநகர், சென்னை 600 017.
கிளைகள் : 51, தெற்கு வீதி, திருவாரூர் - 610 002. 2-B, செல்வம் நகர், தஞ்சாவூர் - 613 007.
1-B, காமராஜ் சாலை, காஞ்சிபுரம் - 613 501

சென்னை நகர வாசிகளுக்கு மட்டும்



- ★ ரூ. 5,000 செலுத்தி 3 ஆண்டு காலத்துக்கு உறுப்பினர் ஆக வேண்டும்.
- ★ 3 ஆண்டு காலத்துக்கு பிறகு உறுப்பினர் கட்டணத்தை திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.
- ★ அல்லது மீண்டும் 3 ஆண்டுகளுக்கு புதுப்பித்துக் கொள்ளலாம். (ரினிவல்).
- ★ உறுப்பினர் கட்டணத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் அளிக்கும் 12% P.A. வட்டியும் கிடைக்கும்.

உறுப்பினர் கட்டணத்தை நேரிலோ, டி.டி. மூலமாகவோ, காசோலை மூலமாகவோ அளிக்கலாம்.

இலவசம்
அழகிய கவர்ச்சிகரமான உறுப்பினர் கார்டையும் அத்துடன் காய்கறி நறுக்கும் S.S. கட்டரையும் முற்றிலும் இலவசமாக பெற்று செல்லுங்கள்



ஞாயிறு தோறும் சப்ளை
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை சூரியன் உதிக்கும் நேரத்தில் எங்கள் விவசாய வளர்ச்சி பிரதிநிதி பசுமையான சத்துமிகுந்த காய்கறிகள் நிறைந்த, அழகிய பாலிதின் மற்றும் சணல் பைகளுடன் உங்கள் வீட்டின் கதவை இன்முகத்துடன் தட்டுவார்.

பூச்சிக் கொல்லி மருந்து, மற்றும் ரசாயன உரங்களை 99% தவிர்க்க முயற்சி செய்கிறோம்.
இயற்கை உரம் இடுவதால் உங்கள் உடல் நலம் முற்றிலும் பாதுகாக்கப்படுகிறது.

சப்ளை விபரம்

உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் வாழைக்காய், வெண்டைக்காய், முருங்கைக்காய், பாகற்காய், பீர்க்கங்காய், அவரைக்காய், கோவைக்காய், கொத்தவரங்காய், வெள்ளரிக்காய், பூசணிக்காய், பரங்கிக்காய், சுரைக்காய், புடலங்காய், சுண்டைக்காய், மிளகாய், முள்ளங்கி, பிடிகரணை, முருங்கைக்கீரை, அகத்திக்கீரை, மணத்தக்காளிகீரை, முளைக்கீரை, அரைக்கீரை, வெந்தயக்கீரை, பசலைக்கீரை, புதினாக்கீரை, புளிச்சக்கீரை, பொன்னாங்கன்னிக்கீரை, மாவடு, நெல்லிக்காய், மாங்காய், தேங்காய், வாழைப்பழம், காராமணி, (சில காய்கறிகள் சீசனில் மட்டும் வழங்கப்படும்). வாழையிலை போன்றவை மாற்றி மாற்றி சப்ளை செய்யப்படும்.

Phone : 4342098, 4840150

திட்டமிட்ட குடும்பத்துக்கு முடிந்தவரை தேவையான காய்கறிகள் வழங்கப்படும். இயற்கை சீற்றங்களால் ஏதேனும் சேதாரம் ஏற்பட்டாலொழிய எங்கள் சப்ளை ஒருபோதும் நிற்காது. உறுப்பினராக சேர்வதற்கு குறிப்பிட்ட இடங்களே மீதி இருக்கின்றன.

NATARAJ GROUP OF COMPANIES :
NATARAJ FINANCE, NATARAJ CHITS (TAMIL NADU) PVT. LTD.,
NATARAJ EXPORTS OVERSEAS, NATARAJ OIL MILLS,
NATARAJ PUBLICATIONS.

24% P.A.

பெரியவரின் கருணை!

காஞ்சி மகா பெரியவரைத் தரிசிக்கச் சென்றபோது, என் எட்டு வயது மகனுக்கு ஆஸ்துமா என்று கூறினோம். மடத்திலிருந்த ஒருவரிடம் ஆடாதொடை இலையைக் கொண்டுவரச் செய்தார். "இதை ஆடு தொடாது. அதனால்தான் ஆடுதொடா இலைங்கறது 'ஆடாதொடை'ன்னு ஆனது.



ராம நாமத்தின் மகிமை!

இதைச் சட்டியில் போட்டு, ஜலம் விட்டு கண்டக் காய்ச்சிக் கஷாயமாக்கி, 2 ஸ்பூன் தேனோடு கலந்து காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு ஸ்பூன் கொடு" என்று இலைகளைக் கொடுத்தபோது மெய்சிலிர்ப்போடு வாங்கிக் கொண்டு வந்தோம். அவர் சொன்னபடி மூன்று வேளை கொடுத்ததுமே குழந்தைக்கு ஆஸ்துமாவின் இரைப்பு குறைந்து விட்டது. மகா பெரியவரின் கருணையை இன்று நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது.

—எஸ். தனலட்சுமி, பெங்களூர்–41.

ராம நாமத்தின் மகிமை!

கல்லூரியில் பயின்றபோது விவேகானந்தா கேந்திரா நடத்திய தேர்வில் வெற்றி பெற்று, மாணவர் முகாமுக்காகக் கன்னியாகுமரியிலிருக்கும் விவேகானந்தா கேந்திரத்துக்குச் சென்றேன். அங்கு மாலை பஜனை நடைபெற்றது. ஏற்கெனவே எனக்கு பஜனையில் ஈடுபாடு என்பதால் உற்சாகத்தோடு கலந்து கொண்டேன். ஒரு கட்டத்தில் விளக்குகளெல்லாம் அணைக்கப்பட்ட நிலையில் 'ஓம்' என்ற எழுத்து மாத்திரம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. ஒருவர் 'ஜெயரகு ராமா! ஜெயரகுராமா!' என்று பாடினார். அனைவரும் பாடினோம். அதில் 'ராம ராம' என்று மெதுவாக ஆரம்பித்து உச்சஸ்தாயிக்குச் செல்லும். பிறகு மெதுவாகப் பழைய ஸ்தாயிக்கே வரும். அப்படிப் பாடிக் கொண்டிருந்தபோது, என்னையறியாமலேயே எனக்குள் ஒரு பரவச உணர்ச்சி. இவ்வுலகை மறந்து, எந்தக் கவலையுமற்று, மனம் லேசானது. பஜனை முடிந்த பிறகும் கூட என் மனம் அந்த ஆனந்தத்திலேயே வெகு நேரம் இருந்தது. அந்தச் சுகானுபவத்தை இப்போது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது.

— பாளை. பசும்பொன், ஆதித்தனார் நகர்.

சிற்பிகளின் கலை நுட்பம்!

தாரமங்கலம் கைலாசநாதர் கோயிலுக்குச் சென்றிருந்த போது சன்னிதானத்தின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு சிலைகள். ஒன்று இராமர் அம்பு எய்வது போல். மற்றொன்று வாலி அம்பு எய்வது போல். மேலோட்டமாகப் பார்த்து விட்டுச் சென்ற என்னை ஒரு பெரியவர் அழைத்து, இராமர் சிலைக்கு அருகில் நின்று, இராமர் கண்ணுக்கு அருகில் என் கண்ணை வைத்துப் பார்க்கச் சொன்னார். பார்த்தபோது நேராக வாலியின் சிலை தெரிந்தது. இதேபோல் வாலி சிலைக்கருகில் நின்று பார்த்த போது... என்ன ஆச்சர்யம், இராமர் சிலை தெரியவேயில்லை! 16-ம் நூற்றாண்டிலேயே இப்படி வடிவமைக்கும் நுணுக்கங்களை நம்மவர்கள் தெரிந்து வைத்திருந்ததை எண்ணியபோது எனக்கு மெய்சிலிர்த்தது.

—கே. இராஜா திருவேங்கடம், காப்பரத்தாம்பட்டி.

(அனுபவங்கள் தொடரும்)



ஒண்டுக் குடித்தனம்

'ஒண்டுக்குடித்தனம்' என்பது சிற்சில சுவாரஸ்யங்களுடன், சங்கடங்கள் நிறைந்த விஷயம் என்று அசோகனுக்குத் தோன்றிற்று.

அவன் வீட்டில் இருவர்தான். மனைவியும் அவனும். ஓரளவு பிரச்னை இல்லை என்று தான் தோன்றும், மற்ற குடித்தனக்காரர்களுடன் ஒப்பிடுகையில்.

ஆனாலும் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது.

அதிகப்படியான விருந்தினர் எவரேனும் வந்தால் வீடு தாங்க இயலாது போகிறது. வராந்தாவில் தான் ஆண்கள் படுத்துறங்க வேண்டியதாகிறது.

தவிரவும்,

நண்பர்கள் எவரையும் 'பெருமையாய்' வீட்டுக்கு அழைத்து வருதல் இயலாத விஷயமாயிற்று.

இது போதாதென்று, மனைவி இன்று காலையில்தான் அதைச் சொன்னாள்.

"ஊர்லேர்ந்து லெட்டர் வந்திருக்குங்க."

"எதுவும் விசேஷம் உண்டா?"

"தம்பி வர்றேன்னு எழுதியிருக்கான்."

"என்ன இப்ப லீவா அவனுக்கு?"

"இல்லீங்க. அவனுக்கு இங்க மெட்ராஸ்லயே இன்ஜினியரிங் காலேஜ்ல இடம் கிடைச்சிருக்கு."

"அடடே, சந்தோஷமான விஷயந்தான்."

"இங்கதான் தங்கிப் படிக்கணும். ஹாஸ்டல், அது இதுன்னா செலவு என்னாகுங்க? பேசாம நம்ம கூடயே இருக்கச் சொல்லலாமேன்னு..."

"சொல்லலாம்தான். எனக்கும் ஆசைதான். என்ன பண்றது? இந்த 'துக்கிளியூண்டு' எடத்துல சரிப்பட்டு வருமா?"

அவன் சொல்லிய பிறகும் அவள் விடவில்லை. விதண்டாவாதம் புரிந்தாள். ஆத்திரம் பொங்கிற்று அவனுக்கு. 'உன்னைச் சொன்னால் ஏன் இவளுக்குப் புரிய மாட்டேன் என்கிறது' என்று தோன்றிற்று.

வாக்குவாதம் முற்றி சச்சரவாக மாற வேண்டிய நிலையில் அவன் வெளிநடப்புச் செய்தான். இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால், சண்டை வரும். பிறகு, வேடிக்கை பார்க்கக் கூட்டம் வரும். பலர் இதற்காகவே ஜன்னல் பக்கம் காத்திருக்க வேண்டி வரும்.

அதனாலேயே, இம்மாதிரி சந்தர்ப்பங்களைத் தவிர்த்து விடுவது அவன் வழக்கம்.

வெளியில் போய் ஒரு டீயைக் குடித்துவிட்டு, எங்கெங்கோ உலாத்தி விட்டு மறுபடி வீடு திரும்பிய போது, மனைவி வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள்.

என்னாயிற்று?

அசோகனுக்குப் பதறிற்று.

"என்னாச்சம்மா?"

தலையை ஆதரவாகப் பிடித்த போது, அவள் முகத்தில் வெட்கம் கலந்த புன்னகையைப் பார்க்க முடிந்தது. தலைகுனிந்தபடி, சுவரில் தொங்கிய காலண்டர் 'குழந்தையைக்' கைகாட்ட, மனசு சந்தோஷத்தில் கூத்தாடிற்று. "இனிமே பாரு, ஒரு வேலை நீ செய்யக்கூடாது. எல்லாம் என் பொறுப்பு" என்று குதூகலிக்க வைத்தது.

இந்த சின்னஞ்சிறிய வயிறு இனி ஒரு குழந்தையைச் சுமக்கப் போகிறது. ஒரு குட்டிக் கண்ணனையோ, மீராவையோ உருவாக்கப் போகிறது.

"அட ஒண்டுக் குடித்தனத்தில் மற்றுமொரு ஒண்டுக்குடித்தனம்" என்று கவிதை மாதிரி மனசில் ஏதேதோ தோன்றிய போது, எதுவோ உறைத்தது.

உறைத்தது, எதையோ உணர வைத்தது.

"உன் தம்பி எங்கேயும் போக வேணாம், இங்கேயே நம்ம கூடவே தங்கிப் படிக்கட்டும்." புன்னகையுடன் அசோகன் சொன்ன போது, ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்துச் சிரித்தாள் அவன் மனைவி.

- தி. சிவசுப்பிரமணியன்

அடுத்து வந்த சில வாரங்கள் உதயரேகாவுக்கு மிகவும் மகிழ்ச்சியூட்டுவனவாக அமைந்தன.

காலையில் எழுந்தால், மனைவியுடன் கலந்து உலக விவகாரம் ஆராய்ந்தபடியே, கிருஷ்ணசந்திரன் பத்திரிகை படித்தான். மதியம், உதயாவின் கைப்பாகங்கள் செல்ல, ரசித்து உண்டதாக உடனே டெலிஃபோனில் பாராட்டி, மேலும் ஐந்து பத்து நிமிடங்கள் அரட்டை அடித்தான். மாலையிலும், நண்பன் மணிவாசகத்தை அடியோடு மறந்து, அலுவல் முடிந்ததும் நேராக வீடு வந்தான். அன்றாட நிகழ்ச்சிகளை இருவருமாகப் பரிமாறிக் கொண்டனர். சில் வண்டின் ரீங்காரமும், இடையிடையே மைனாக்களின் கீங்குரலோசையும் போல, அது இது என்று பேசிக் கொண்டே இருக்கவும், இடையிடையே சிரிக்கவும் அவர்களுக்கு இப்போது ஏராளமான விஷயங்கள் இருந்தன. கேலி, கிண்டல்களுக்கும் குறைவில்லை.

இரவு வரை இது தொடர, கடைசியாக உறங்கச் செல்லுமுன் உதயரேகா புன்னகையோடு 'குட்நைட்' சொல்ல, அவளது நெற்றியில் புரளும் கூந்தல் சுருளைப் பரிவாய் ஒதுக்கி விட்டு பதில் 'குட்நைட்'டுடன் படுக்கச் செல்வான் கிருஷ்ணசந்திரன்.

சின்ன வயது, நட்பு, சுற்றம், பார்த்தவை, படித்தவை என்று ஒருவரைப் பற்றி ஒருவர் அறியவும், அறிந்ததை அசைபோடவும் இருவருக்குமே ஆர்வம் இருந்ததால் நாட்கள் இறக்கை கட்டிப் பறக்கலாயின.



மாலை மயங்குகின்ற

ஆயினும், இப்போதும், அவ்வப்போது அறைக்குள் சென்று பூட்டிக் கொண்டு, வெகு நேரம் கழித்து வெளி வருவதைக் கிருஷ்ணசந்திரன் விடவே இல்லை. காரணமாக ஒன்றே ஒன்றை மட்டுமே கண்ட அவன் மனைவியால் இதைச் சும்மா விட்டு விட்டு வாளாவிருக்கவும் முடியவில்லை.

ஒருநாள் இது பற்றி அவள் குறிப்பிடத் தொடங்கும்போதே, ஒரு மாதிரிப் பார்வையுடன் அவன் தலையசைத்து விடவும் மேலே தொடர மாட்டாமல் அவள் பேச்சு நின்றது.

ஆனால் இதை அடியோடு பேசாமல் விடவும் அவளுக்கு மனமில்லை. எனவே வேடிக்கை போல, "ஒகோ, இது தலையிடப் படக் கூடாத விஷயமா? ஓகே! ஓகே!" என்று இலகு போல நகைத்து, "ஆனால், இந்த ஒன்று மட்டும் சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே? அதை... அதுதான், போதை மருந்து. அதைத் தினமும் எடுக்கிறீர்களா? உடம்பு கெடும், உள்ளுறுப்பு கெடும் என்கிறார்களே; அதற்காகத்தான்... அந்தக் கவலைதான் எனக்கு!" என்றாள் மெதுவாக.

சற்று நேரம் அவளையே பார்த்திருந்தவனின் கண்கள் கனிந்தன. மனைவியின் கையை எடுத்துத் தன் கையில் வைத்து, "என் உடல் நலத்தைக் கெடுக்கும் எதையும் நான்-



நேரம் - 20

உட்கொள்ள மாட்டேன். இது சத்தியம். போதுமா?" என்று கிருஷ்ணசந்திரன் குரலில் மென்மையுடன் கூறவும் ஒருவாறு உதயரேகாவின் உள்ளம் அமைதியுற்றது.

முன்பு, போதை மருந்து எதையும் பயன்படுத்தவில்லை என்று அவன் சொன்னது மெய்யோ, பொய்யோ? ஆனால், இந்தச் சத்தியத்தின் பின்னர் அதைத் தொட மாட்டான் என்ற உறுதி அவளுக்கு இருந்தது. எனவே நிம்மதியும் உண்டாயிற்று.

ரமணி சந்திரன்

மறுநாளில் இருந்து, தன்னோடு கூட வந்து தொழிலைக் கற்றுக் கொள்ளும்படி கிருஷ்ணசந்திரன் மனைவியை அழைத்தான்.

பெண்களைத் தொழிலில் புகுத்தும் வழக்கம் அந்த வீட்டில் இல்லை என்று கண்டிருந்ததால் உதயரேகாவுக்கு இந்த அழைப்பு ஆச்சரியத்தை அளித்தது.

வியப்பும் கேள்வியுமாக நோக்கியவளிடம், "சும்மா இருப்பவரின் மனம் சைத்தானின் உலைக்களம் என்பார்கள். வீட்டில் போரடித்துக் கிடப்பதால்தானே, போதை, குடி என்று துப்பறியத் தோன்றுகிறது? அப்படி, உருப்படாத விஷயங்களில் வீணாக்குகிற புத்தி, சக்தியை நல்லபடியாக எதிலாவது செலவழிக்கலாமே என்றுதான்!" என்று சின்னதாக ஒரு குட்டு வைத்தான் அவன்.

அசடுவழியச் சிரித்து விட்டு, வழக்கமான உற்சாகத்துடன், கணவனுடன் சென்றாள் அவள்.

கூடவே இருந்து, மனைவிக்கு அன்றாட வேலைகளைக் கிருஷ்ணசந்திரன் கற்றுக் கொடுத்தான். கொஞ்சம் பழகவும், அவன் வேலைகளில் பெரும் பகுதியை அவளையே செய்யச் சொன்னான். கடைசியாகப் பிரச்னைகளில் முடிவெடுப்பது போன்ற சிக்கலான, நுணுக்கமான விஷயங்களையும் போதித்து, இனி எல்லாவற்றையுமே அவள் பொறுப்பில் விடப் போவதாகவும் கூறினான்.

சற்றுத் திகைத்து, இதுவும் கேலி என்று ஊகித்து, "அப்படியா சார்? ரொம்ப சரி! ஆனால் உங்கள் வேலையை என்னிடம் தந்து விட்டு நீங்கள் என்ன செய்வதாய் உத்தேசமாம்?" என்று கிண்டலாக வினவினாள் அவள்.

எழுந்து சென்று ஜன்னல் வழியே வெளியை வெறித்தான் கிருஷ்ணசந்திரன். திரும்பாமலே, "ஒரு புதிய துறையில் இறங்கப் போகிறேன், உதி. முன்பின் அறியாத களம்" என்று கூறிய போது, அவன் குரலில் இருந்த தீவிரம் அவளை மேலும் பிரமிக்க வைத்தது.

"அப்படி என்ன புதிய முயற்சி?" என்று ஆச்சரியத்துடன் வினவிய மனைவிக்கு அவன் பதிலே சொல்லவில்லை.

"மாமாவுக்குத் தெரியுமா? சொல்லி விட்டீர்கள் இல்லையா?" என்று மேலே அவள் அடுக்கவும் அவன் மெல்லத் திரும்பி, உதட்டின் மேல் விரலை வைத்துக் காட்டி நேராக நோக்கவே, உதயரேகா வாயை மூடிக் கொண்டாள்.

இதுவும் தலையிடக் கூடாததாக்கும்! இவ்வளவு நல்லவன், பெற்றோர் என்றால் மட்டும் ஆளே மாறி விடுகிறானே!

காரணத்தைத் தேடி அவள் மனம் தீவிரமாக வேலை செய்தது.

இடையே அவளுடைய பிறந்த வீட்டார் புது டில்லிக்குக் குடிபெயர்ந்து சென்றனர். அவ்வப்போது டெலிஃபோனில் உதயரேகா

வுடன் அளவளாவினர்.

ஆனால், பிறந்த வீட்டாரின் பிரிவை அதிகமாக உணரத் தோன்றாத அளவுக்குக் கிருஷ்ண சந்திரனைப் பற்றிய எண்ணங்கள் அவளது இதயத்தை நிரப்பி விட்டிருந்தன. கணவன் மனம் விட்டு பழகத் தொடங்கியதிலேயே திருப்தியுற்றிருந்தவள் மேலும் உற்சாகம் கொள்ளும்விதமாக வீட்டில் சிலபல நிகழ்ச்சிகள் நடக்கலாயின.

தங்கைக்கென்று அவள் தைத்து பூவேலை செய்து கொடுத்திருந்த சுரிதார் ஒன்றைப் பார்த்து வசுமதி ஆசைப்பட்டாள் என்று உதய ரேகா நாத்தனாருக்கும் ஒன்றைத் தைத்துக் கொண்டிருந்தாள். வண்ண மணிகளைக் கொண்டு செய்த பூவேலை அது.

புதுமாதிரிப் பலகாரம் ஒன்றை மாலைச் சிற்றுண்டிக்காகச் செய்து வைத்து விட்டு கணவனின் வருகைக்காகக் காத்திருந்த நேரத்தில், வாயிலில் ஒரு கண்ணும் தையலில் ஒரு கண்ணுமாக கீழ் ஹாலில் அமர்ந்து தைத்துக் கொண்டிருந்தவளின் கை எப்படியோ தட்டி விட, மணிக் கிண்ணம் கீழே விழுந்து மணிகள் அங்குமிங்கும் சிதறின. அங்கங்கே கிடந்தவைகளைப் பொறுக்கி எடுத்து விட்டு, நீள சோபாவிற்குப் பின்புறம் உருண்டு ஓடியவற்றை சோபாவின் பின் சென்று மண்டியிட்டுச் சேகரித்துக் கொண்டிருந்தாள்.

வாயிலில் கார் வந்து நின்று, கிருஷ்ணசந்திரன் வேகமாக இறங்கி வருவது கேட்கவும், அவசரமாக எழப் போனவளுக்கு ஒன்று தோன்ற, சோபாவின் பின் மறைந்தாற்போலவே இருந்து விட்டாள்.

கொஞ்ச நேரம் அவளைக் காணாமல் தேடட்டும். அதன் பிறகு வேடிக்கையாகக் கண்டுபிடிக்கச் செய்ய வேண்டும்...

வந்த வேகத்திலேயே படியேறிச் சென்றவனின் காலடி ஓசை நின்று விடவும், 'அடடா, இப்போதே கண்டு விட்டானா' என்று மெல்லத் தலையை மட்டும் நீட்டிப் பார்த்தவளுக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது.

மாடிப்படி வளைவில் மாட்டியிருந்த உதயரேகாவின் படத்தின் முன்நின்று, படத்தில் அவளது கன்னத்தை மென்மையாக வருடிக் கொண்டிருந்தான் அவன்.

உயிருக்கு உயிராய் நேசிப்பவனின் வருடல்! ஒரு நாளும் பிரிய மனம் விரும்பாதவனின் வருடல் அது!

ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தவளுக்கு உற்சாகத்தோடு உல்லாசமும் பொங்கிப் பெருகலாயிற்று.

இவனால் இன்னும் எத்தனை நாட்கள் இப்படிப் பிரிந்து வாழ முடியும்?!

கடைசியாக ஒரு நெடுமூச்சுடன் அவன் சென்றது கூட அவளுக்கு நகைப்பாய்த்தான் இருந்தது.

இன்னொரு நாள் உதயரேகா, தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தபோது – யோசனை கிருஷ்ணசந்திரனைப் பற்றியதுதான். சிங்கப்பூரிலிருந்து மருமகனுக்கென்று உலகநாதன் வாங்கி வந்திருந்த துணிகளை எந்த மாதிரியில் தைக்கக் கொடுப்பது என்பதுதான் அந்தத் தீவிரமான யோசனை. கண்களை மூடி, ஒவ்வொரு துணியையும் பாக்கெட், பட்டன், அமைப்புகளோடு அவன் உடம்பில் மனதால் அவள் பொருத்திப் பார்த்துக் கொண்டிருந்த போது, திடுமென அருகில் அவன் அவளை உரக்க அழைக்கவும் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு திகைப்புற்ற விழிகளை மலர விழித்து அவனைப் பார்த்தாள்.

கனிவுடன் நோக்கி, "சாப்பிடக் கூப்பிட, பதிலே இல்லையே என்று சற்று உரக்க அழைத்து விட்டேன். ஸாரிம்மா. பயந்து விட்டாயா?" என்று கரிசனத்துடன் வினவினான் கிருஷ்ணசந்திரன்.

"சேச்சே. நானாவது பயப்படுவதாவது? சும்மா இந்தக் கால் பாட்டுக்கு ஒரு மூன்று அடி உயரம் துள்ளிக் குதித்து விட்டது. கூடவே இந்தத் தலைமுடியும் சிலிர்த்துக் கொண்டு சிங்கத்தின் பிடரி மயிர் மாதிரி குச்சி குச்சியாய் நிற்கிறது. அதுவும் அதிகம் இல்லை. வெறுமனே ஒரு மூன்றே மூன்று அங்குலத்துக்குத்தான்" என்று அவள் பெரிதாக விவரிக்கவும் அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

அவளது கூந்தலைத் தொட்டுப் பார்த்து, "இதையா சிங்கத்தின் பிடரி போலக் குச்சி குச்சியாய் என்பது? ரொம்பவும் அநியாயம்!" என்று வருடியவன், கையை எடுக்க மாட்டாதவன் போல மனைவியின் தலைமுடியில் விரல்களை விட்டு அளைந்தான். "என்ன மிருதுவாய், பட்டுப் போல இருக்கிறது, தெரியுமா?"

"எலுமிச்சை, மருதாணி, செம்பருத்தி, இன்னோரன்ன மூலிகைகளால் செய்த கண்டிஷனர் அடங்கிய ஷாம்பூ... டட்டடாய்ங்...!" என்று விளம்பரம் போல அறிவித்தபடி உதயரேகா கண்சிமிட்ட, அவனுடன் சேர்ந்து நகைத்



"நுரை இல்லாத காப்பியா கொடுப்பா."
"ரொம்ப கொஞ்சமா இருக்கேன்னு சண்டைக்கு வரமாட்டீங்களே சார்...?"
– சீர்காழி வி. ரேவதி

தபடியே தன் கையைப் பிரித்தெடுத்துக் கொண்டு, வந்த காரியம் பற்றிக் கூறிவிட்டு அகன்றான் கணவன்.

என்னவோ உறுத்தியது உதயரேகாவுக்கு.

அவன் முகத்தில் அது என்ன பார்வை? எதிலோ தோல்வி நிச்சயப்பட்டு விட்ட மாதிரி... ஓகோ! அய்யாவின் விரதம் உடைபடப் போகிறது என்று அவருக்குமே புரிந்து விட்டதா?

உள்ளூரக் குதூகலம் சிறகடித்துப் பறந்தது அவளுக்கு.

கிருஷ்ணசந்திரனின் பிரம்மச்சரிய விரதம் பற்றி உதயரேகா இப்போது வேறொரு முடிவுக்கு வந்திருந்தாள்.

கிருஷ்ணசந்திரனுக்கு இளவயதுக் காதல் ஒன்று. அவனுடைய பெற்றோர் சம்மதிக்காததால் அவள் மனம் உடைந்து தற்கொலை செய்து கொண்டாள். இறக்குமுன் தன்னையன்றி வேறு பெண்ணைத் தொடக் கூடாது என்று சத்தியம் பெற்றுக் கொண்டு சாகிறாள். மறைந்த காதலிக்குக் கொடுத்த சத்தியத்துக்கும், புதிய மனைவியின் நேசத்துக்குமிடையே கிருஷ்ணசந்திரன் ஊசலாடுகிறான்.

கண்முன்னே நிற்கும் மனைவியின் நேசத்தின் முன், என்றோ மறைந்து விட்ட காதலியின் நினைவு மங்கி மறைந்து கொண்டு இருந்தது- அது அடியோடு மறையும் நாள் அதிக தூரத்தில் இல்லை!

கணவனின் சிறு வயதுக் காதலைப் பற்றி உதயா பெரிதாக ஒன்றும் பொருட்படுத்தவில்லை. தப்பு வழி செல்கிறானென்று அறிந்த பிறகும், அவனைத் திருத்த நல்வாழ்வு வாழத்தானே அவள் ஆசைப்பட்டாள்?

ஆனால் இங்கேயும் ஒன்று இடித்தது.

காந்திமதி அவளிடம் பொய்யுரைக்க வாய்ப்பில்லை. பின்னே கிருஷ்ணசந்திரன் அவனுடைய பெற்றோரிடம் கோபம் கொள்ளக் காரணம் என்ன?

ஒருவேளை அவன் லேசாகச் சொல்லி, அவர்கள் அதை சீரியசாக எடுத்துக் கொள்ளுமுன் ஏதோ தப்பாய் எண்ணி அவள் மடிந்து விட, இவனுக்குத் தாய் தந்தையிடம் வெறுப்பாகி விட்டதோ?

தன் வாழ்வு முழுமையாகச் சீரடைந்ததும், இதைப் பற்றிக் கூடக் கணவன் தன்னிடம் கூறுவான் என்று நம்பிக்கையோடு உதயரேகா காத்திருந்தாள்.

இந்தச் சமயத்தில், ஒருநாள் காலையில் வெகு தாமதமாக எழுந்து அறையை விட்டு வெளிவந்தான் கிருஷ்ணசந்திரன். தூக்கமின்றிக் களைத்திருந்த முகத்தைப் பார்த்ததும்,

"இரவில் ஏதாவது புத்தகம் படித்துக் கொண்டிருந்து விட்டுத் தாமதமாகத் தூங்கினீர்களா?" என்று வினவிய மனைவியிடம், "இல்லை" என்று தலையசைத்து விட்டு, "வகுவின் திருமணம் பற்றி ஒரு முடிவு செய்தேன்.



"நான் எத்தனையோ வாத்தியார்கிட்ட படிச்சிருந்தாலும் என்னோட எட்டாங்கிளாஸ் வாத்தியார்தான் என்னோட உண்மையானகுரு'ன்னு ஏன் தலைவரே அடிக்கடி சொல்றீங்க...?"

"அவர்தானே எனக்கு 'Something is better than nothing'ங்கறதை சொல்லிக் கொடுத்தவர்...!"

- ஆர்.கே.

அவளுக்கு விரைவிலேயே திருமணம் செய்து வைத்து விடப் போகிறேன்" என்று கூறி அவளை வியக்க வைத்தான் அவன்.

அவளது வியப்புக்குக் காரணம் இருந்தது.

வகுமதிக்கு இருபது வயது கூட ஆகவில்லை என்ற போதும், செல்வரங்கத்தின் வளமும், பெருமையும், கூடவே பெண்ணின் அழகு, குணமும் காரணமாக ஏற்கெனவே பல பெரிய இடங்களில் இருந்து வந்து பெண் கேட்டிருந்தனர். ஆனால், மகளுக்கு இன்னமும் குழந்தைத்தனம் மாறவில்லை. குடும்பப் பொறுப்பைத் தாங்க சிரமப்படுவாள்; அதனால் இன்னமும் இரண்டு ஆண்டுகள் கழித்து கல்யாணம் செய்தால் போதும் என்பது வீட்டில் பொதுவாக எடுக்கப்பட்டிருந்த முடிவு. "ஆமாமாம். 'இம்'மென்றால் குடம் குடமாய் வடித்துக் கொண்டு... எல்லாம் பிறகு பார்க்கலாம்" என்று. அதன் காரணமே பெருமளவுக்குக் கிருஷ்ணசந்திரன்தான் என்று காந்திமதி ஏற்கெனவே மருமகளிடம் கூறியிருந்தார். அவனே அதை இப்போது மாற்றுவானேன்?


காரணத்தை அவள் கேட்ட போது, தங்கைக்கு ஏற்ற கணவன் அவளைப் பொறுப்பாய்ப் பாதுகாத்து, அரவணைத்துச் செல்கிறவன் கிடைத்திருக்கும் போது அதைத் தவற விடுவது தவறு என்றான் கணவன்.

ஆனால், அப்படிப்பட்ட மகானுபாவன் யார் என்று அறிந்த போது உதயரேகா இன்னமும் ஏகமாய் அதிர்ந்தாள்.

கிருஷ்ணசந்திரனுக்குக் கெட்ட பழக்கங்களே கிடையாது. ஏதோ உப்புப் பெறாத ஒரு சிறு காரணமாய்ப் பெற்றோர், தங்கையிடம் கோபம் கொண்டிருக்கிறான்; அவ்வளவே என்று தான் எண்ணியது தவறோ என்ற சந்தேகம் உதயரேகாவுக்கு இப்போது உண்டாயிற்று.

ஒன்று, தன் வீட்டாரிடம் கொண்டிருந்த கடும் கோபத்தில் அவர்களைப் பழிவாங்க இவன் இப்படி முடிவு செய்திருக்க வேண்டும்; அல்லது, அந்த மணிவாசகத்திடம் ஏதோ ஒரு வகையில் இவன் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும்!

(தொடரும்)



ஒன்றுக்குப் பத்தாய்த் தரும் இறைவன்!

இஸ்லாமிய ஆண்டுமுறையில் முதல் மாதம் தொடங்குவது முகரம் பிறை தோன்றுகிற போது. சந்திரனை அடிப்படையாகக் கொண்ட கணித முறையில் ஒவ்வொரு முதல் பிறையிலும் ஒரு மாதம் தொடங்கும். அப்படி ஒன்பதாவது மாதம் தொடங்குவது ரம்தான் பிறை தோன்றிய பிறகு. 'ஹிலால்' என்பார்கள் இந்த முதல் பிறையை! (உர்தூ மொழி வழக்கில் ரம்ஜான்... அரபி மொழி வழக்கில் ரம்தான்.)

இந்த மாதம் முதல் பிறை தோன்றிய போது தொடங்கும் ரம்தான் நோன்பு அடுத்த முதல் பிறை தொடங்கும் போது நிறைவு செய்யப்படுகிறது. 'ஹிலால்' தோன்றி இருபத்தேழு நாட்கள் எல்லா மசூதிகளிலும் சிறப்புத் தொழுகைகள் நிகழும். 27ம் நாள் இரவு - இறைவனால் நபிபெருமானாருக்குத் திருமறை ஓதப்பட்ட புனிதமான நேரம் என்பதால் இந்த மாதம் சிறப்புப் பெறுகிறது.

வெறுமனே பட்டினி கிடப்பது மட்டும் ரம்தான் நோன்பு ஆகிவிடாது. இறைவனுக்காக எல்லாவிதமான புலன் நுகர்வுகளையும் ஒதுக்கித் தியாக உணர்வோடு செய்யப்படுவது இது. பசி, தாகம் எல்லாவற்றையும் அல்லாவுக்காக என்று துறப்பது போலவே, தீயவற்றைப் பேசாமல், தீயவற்றைக் காணாமல், கேட்காமல், மனசில் நினைக்காமலும் கூட இருப்பதே இந்த நோன்பின் கட்டுப்பாடு. தன்னடக்கத்தை ஒரு யோகமாக உணர வைக்கும் நோன்பு இது.

தினமும் இளங்காலை 4-45க்கு முன் உணவு கொண்டு விட்டால், மாலை கதிரவன் மறையும் வரை உமிழ்நீரைக் கூட விழுங்கலாகாது. மருத்துவத் தேவைகளுக்காக ஊசி மருந்து, மாத்திரை என்று எல்லாவற்றையும் இந்த நோன்பு வேளையில் துறந்து விட வேண்டும். கதிரவன் மறைந்த பிறகு பொதுவாகக் கஞ்சியோ, அல்லது பேரீச்சை போன்ற கனிகளோ உண்டு அன்றைய விரதம் முடிப்பார்கள். அதிகாலை உணவுக்கு 'ஸஹார்' என்றும், நோன்பு முடிக்கும் உணவுக்கு 'இஃப்தார்' என்றும் சொல்வார்கள்.

'ரம்தானில் ஒரு நல்ல காரியம் பண்ணினால் நான் அவர்களுக்குப் பத்து மடங்கு புண்ணியம் சேர்ப்பேன்' என்பது அல்லாவின் வாக்கு. ஆகவேதான் இஸ்லாமிய நெறிகளின்படி ஆற்ற வேண்டிய தானதருமத்தை இந்தக் காலத்திலேயே நிறைவேற்றுகிறார்கள். ஒருவரின் மொத்தச் செல்வத்தை, அது தங்கமானாலும் - பண மதிப்புப் போட்டு, ஓர் ஆண்டில் இரண்டரை சதவிகிதம் தருமம் கொடுத்தாக வேண்டும் என்பது விதி. சமூகநீதியின் வெளிப்பாடாக இது வலியுறுத்தப்பட்டுள்ளது.

நோன்பு முடித்து மறுநாள் நமாஸுக்குப் போகும் முன் ஏழைகளுக்கு தருமம் செய்ய வேண்டும். இதற்கு அளவு கூட உண்டு. பிறந்த குழந்தை உட்பட, குடும்பத்தினர் அனைவரும் தலைக்கு இரண்டரைக் கிலோ கோதுமை அல்லது அதற்குச் சமமான பணம் கொடுக்க வேண்டும். இது 'ஃபித்ரா' எனப்படுகிறது.

இந்த நோன்பின் பயனாய் முக்கியமாக உடல் நலம் நன்கு சீரடைகிறது, வசதியுள்ளவர்கள் வசதியற்ற ஏழை எளியவர்கள் படும் பசி போன்ற கொடுமைகளைத் தாமும் அனுபவித்து உணர்ந்து, உதவி செய்ய வேண்டும் என்கிற பக்குவத்தை ஏற்படுத்துகிறது.

– டாக்டர் எஸ்.கே. காத்ரி சொல்லத்
தொகுத்தவர் : **'கலைசக் கிழார்'**
(மெக்கா வண்ணப்படம் நன்றி : 'பிலிப்ஸ் சவுண்ட் + இமேஜ் 53')

பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல்; சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

SSS

பிராண்ட்

அழகு! தூய்மை!! நறுமணம்!!!

✱ சுத்தமான சூழ்நிலை ✱ சுத்தமான வாழ்க்கை

துர்வாடை விலகும் அறைகள் தூய நறுமணம் கமழ	SSS	ரூம் ஃப்ரெஷ்னர்
மங்கிய வாகனங்கள் புதுப்பொலிவுடன் திகழ	SSS	கார் கிளீனிங்க லிக்யுட்
பழுப்பேறிய துணிகள் புதியனம் போல் தோற்றமளிக்க	SSS	ஈஸி வாஷிங் லிக்யுட்
கறைபடிந்த பாத்திரங்கள் பளிச்சென்று மின்ன	SSS	டிஷ் கிளீனிங் லிக்யுட் கிளீனிங் லிக்யுட்
அழுக்கான குளியலறை அழகோடு மிளிர	SSS	டாய்லெட் கிளீனிங்க லிக்யுட் ஒய்ட் ஃபினைல் & ஃபினைல்
மங்கலான தரைகள் தங்கம்போல் ஒளிர	SSS	ஃப்ளோர் கிளீனிங்க லிக்யுட்



புதிய ஃபார்முலா!

உயர்ந்த தரம்!!

உபயோகமுள்ள பாட்டில்கள்!!!

எல்லா கடைகளிலும் கிடைக்கும்



தயாரிப்பாளர்கள்: M/s.வினயா ப்ரொடக்ட்ஸ்
ஜி-10, நெ. 30,31, தியாகராய கிராமணி தெரு, தி.நகர், சென்னை-600 017. Phone: 8267668, 8283211. Fax: 044-8267668

தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் விநியோகஸ்தர்கள் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilan

